
# திருமறைத்தீபம்


ஸ்தாபனங்கள்
பின்நவீனத்துவம்
போலிப்போதனைகள்
சமயசமரசப்
போதனைகள்
கெரிஸ்மெட்டிக்
இயக்கம்
சமயசமரச
வேதாகமக் கல்லூரிகள்
குடும்ப ஊழியம்
தனிநபர் ஊழியம்


வேதத்தை விட்டு
விலகியோடும்
நம்மினத்துக் கிறிஸ்தவம்

**BIBLE LAMP**
**திருமறைத்தீபம்**

**Issue No.4 of 2006**
**ISBN 1173-7255**

இக்காலாண்டுப் பத்திரிகையில் வெளிவரும் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக் கூடாது.

ஆசிரியர்: ஆர். பாலா

**Editor:** R. Bala
**Publisher:** Sovereign Grace Publications
**Address:** P O Box 62 159
Sylvia Park, Auckland 1006
New Zealand
**Telephone:** 64 9 272 8061
**Fax:** 64 9 272 8032
**e-mail:** blamp@ihug.co.nz
**Web site:** www.biblelamp.org

"கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கல் என்றுதான் கூற வேண்டும்."

சி. எச். ஸ்பர்ஜன்
1834-1892

# அன்புக்குரியவர்களே!

*நீங்கள் தொடர்ந்து திருமறைத்தீபத்திற்குக் காட்டி வரும் அன்புக்கும், ஆதரவுக்கும் ஆசிரியர் என்ற முறையில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். உங்கள் ஆதரவைவிட பத்திரிகையை வாசித்து நீங்கள் பயனடைகிறீர்கள் என்பதே பத்திரிகை குழுவுக்கு அதிக மனமகிழ்ச்சியை அளிக்கிறது. தொடர்ந்து கடிதங்கள் எழுதி கருத்துக் களை தெரிவித்துக் கொள்வதோடு, எங்களை ஊக்கப்படுத்தியும் வருகிற உங்களுக்கு எங்களுடைய மனமார்ந்த நன்றிகள்.*

*இந்த இதழில் தமிழினத்துக் கிறிஸ்தவத்தைப் பாதித்து வரும் சில 'வைரஸ்'களை அடையாளம் காட்டியிருக் கிறோம். தமிழினத்தின் கிறிஸ்தவ மறுமலர்ச்சியை நாடி ஜெபத்தோடு உழைத்துக் கொண்டிருக்கும் நாம் தொடர்ந்து நம்மினத்துக் கிறிஸ்தவத்தைப் பாதித்து வரும் 'வைரஸ்'களை அடையாளம் காணாமல் இருக்க முடியுமா? பழையனவற்றோடு போராடிவருகிறவேளை புதிய ஆபத்துக்களும் முளைத்துவிடுகின்றன. இவ்வித ழின் முதலாவது ஆக்கம் இதை விளக்குகிறது. இந்த ஆக்கத்திற்கேற்ற அட்டைப்படத்தை சகோதரன் ஜெயபால் (மதுரை) வடிவமைத்துத் தந்திருக்கிறார்.*

*திருமறைத்தீபத்தை பல நாடுகளிலும் இருந்து வாசகர் கள் வாசித்துப் பயனடைந்து வருகிறார்கள். சமீபத்தில் பல வருடங்களாகப் பத்திரிகையை வாசித்து வரும் ஒரு சகோதரனின் ஆத்மீக வாழ்க்கைக்கும், ஊழியத் துக்கும் பத்திரிகை உதவியவிதத்தைப் பற்றி வட இந்தியாவில் இருந்து எழுதியிருந்தார். அறிந்துகொண்ட சத்தியத்தின் அடிப்படையில் தன் வாழ்க்கையை மாற்றி அமைக்க அவர் உறுதிபூண்டிருக்கிறார். சத்தியம் இப்ப டிப் பலரின் கண்களைத் திறந்துவைக்கிறது; அவர்களு டைய ஆத்மீக தாகத்தைத் தணிக்கிறது. சத்தியத்தை வாய்விட்டு வாழ்த்துகிற எல்லோருமே அதன்படி வாழ்க் கையை மாற்றி அமைத்துக் கொள்ளும் துணிச்சலுள்ள வர்களாக இருப்பதில்லை. அது வருத்தத்திற்குரியது தான். ஆவியானவர் மட்டுமே அத்தகைய துணிச்சலைத் தர முடியும். அந்தத் துணிவு மாம்சத்தில் பிறப்பதல்ல; பரலோகத்தில் இருந்து வருவது. லூதரிடம் அது இருந் தது, கல்வினிலும், நொக்ஸிலும் அதைப் பார்க்கிறோம். ஸ்பர்ஜனிடமும் அது இருந்தது. சத்தியத்தில் ஆர்வம் மட்டுமல்ல அதைத் தியாகத்தோடு பின்பற்றும் துணிச்ச லும் நம்மக்களுக்குக் கிடைக்க நாம் ஜெபிக்கத்தான் வேண்டும். அத்தகைய ஆவிக்குரிய துணிச்சலில்லாமல் சீர்திருத்தம் ஏற்பட்டுவிட முடியுமா என்ன? - ஆசிரியர்.*

# வேதத்தைவிட்டு விலகியோடும் நம்மினத்துக் கிறிஸ்தவம்

தமிழினத்தின் மத்தியிலும் ஏன், இந்தியா முழுவதுமே கிறிஸ்தவர்கள் மத்தியில் வேத அறிவு மிகவும் குறைந்து காணப்படுவதை சத்தியம் தெரிந்தவர்கள் ஒருபோதும் மறுக்கமாட்டார்கள். மெய்க்கிறிஸ்தவத்தை அதாவது வேதபோதனைகளின் அடிப்படையில் அமையும் கிறிஸ்தவத்தை இல்லாமலாக்குவதற்கு பிசாசு உலக முழுவதும் எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு எண்ணிக்கை இல்லை. இதைச் செய்வதில் ஊக்கம் தளராமல் சாத்தான் ஈடுபட்டு வருகிறான். இந்த 21 ஆம் நூற்றாண்டில் அவன் மேற்கத்திய நாடுகளில் செய்துவரும் ஒரு காரியத்தை இங்கே விளக்குவது அவசியம்.

## மேற்கத்திய பின் நவீனத்துவ சமுதாயம்

பின்நவீனத்துவ சிந்தனைகள் (Postmodernism) பரவிக் காணப்படும் மேற்கத்திய சமுதாயத்தில் அந்த சமுதாய சிந்தனைக்கேற்ற விதத்தில் வேதம் பற்றிய சிந்தனைகளை கிறிஸ்தவர்கள் மத்தியில் மாற்ற முயன்று வருகிறான் பிசாசு. அதாவது தெளிவான அடிப்படை சத்தியம் என்று ஒன்று இல்லை என்று நம்பி சிந்திக்கின்ற பின்நவீனத்துவ சமுதாயத்தில் சபை அமைய வேண்டுமானால் அதே சிந்தனையைப் பின்பற்றி, வேதம் அடிப்படை சத்தியத்தைக் கொண்டிருக்கவில்லை என்றும், ஒவ்வொருவரும் தங்களுக்குகந்த விதத்தில் அதன் வார்த்தைகளை விளங்கிக்கொள்ள முடியும் என்று விளக்குகின்ற பிரசங்கிகளையும், நூலாசிரியர்களையும் பிசாசு உருவாக்கிவிட்டிருக்கிறான். இது தவறுகளும், குறைகளுமற்ற பூரணமான வேதத்தின் அதிகாரத்திற்கு சாவு மணி அடிக்கும் கைங்கரியம் என்பது சாத்தானுக்கு நன்றாகத் தெரியும். அதைப் புரிந்துகொள்ளாத பலர் பின்நவீனத்துவ சமுதாயத்தில் கிறிஸ்துவின் இராஜ்யத்தை அமைக்கிறோம் என்ற எண்ணத்தில் பிசாசின் ஊழியத்தை செய்து வருகிறார்கள். இவர்களில் ஒருவர் செடில்பேக் சபையின் போதகரும், பிரபல நூலாசிரியருமான ரிக் வொரன் (Rick Warren).

ரிக் வொரனின் இரு நூல்கள் மேற்கத்திய நாடுகளில் இன்று பிரபலமாக விற்பனையாகி வருகின்றன. இவை இரண்டுமே மோசமான போதனைகளைக் கொண்டவை. இந்நூல்களில் தன்னுடைய போதனைகளுக்கு ரிக் வொரன் பயன்படுத்தும் வேதநூல் மிகவும் மோசமான ஒரு மொழிபெயர்ப்பாகும். அதாவது எழுத்துபூர்வமாக மூல மொழிகளில் இருந்து மொழிபெயர்க்கப்படாத ஒரு மொழிபெயர்ப்பாகும். அந்த மொழிபெயர்ப்பின் அடிப்படையில் கொடுக்கப்படும் போதனைகள் எப்படி சத்தியமாக முடியும்? சத்தியக்கோளாருள்ள தவறான மொழிபெயர்ப்பு சத்தியத்தை விளக்க ஒருபோதும் உதவாது. ஆனால், அதுவே பிசாசின் தந்திரமாகும். பிசாசின்

ஊழியத்தில் ரிக் வொரன் இன்று மும்முறமாக ஈடுபட்டுவருகிறார். மேற்கத்திய நாடுகளின் பின்நவீனத்துவ சமுதாயங்களில் கிறிஸ்துவுக்கெதிராக பிசாசு செய்யும் தந்திரங்களில் இதுவும் ஒன்று.

இந்தியா போன்ற கீழைத்தேசங்களில் இன்று தொழில் நுட்ப வளர்ச்சி பேரளவில் அதிகரித்து வருவதால் படித்தவர்கள் மத்தியிலும், சமுதாயத்தில் மத்திய வகுப்பிலும், உயர்வகுப்பிலும் இருப்பவர்கள் மத்தியிலும் பின் நவீனத்துவ சிந்தனைகள் இருப்பதை மறுக்க முடியாது. பின்நவீனத்துவ சிந்தனைகளின் அடிப்படையில் சினிமாக்களும் எடுக்கப்பட்டு வருகின்றன. பெருமளவுக்கு இது மத்திய, உயர் வகுப்புகளையும், படித்தவர்களையும், பல்கலைக் கழகங்களையும் ஆரம்பத்தில் பாதித்து பின்பு ஏனைய வட்டங்களுக்கு சிறிது சிறிதாகப் பரவ ஆரம்பிக்கும். பெங்களூரில் வாழ்கின்ற ஒரு வாலிபன், கணினித் தொழில்நுட்ப வளர்ச்சியால் பெங்களூரில் இள வட்டங்களின் சமுதாய நடைமுறைகள் தமிழகத்துப் பண்பாட்டைவிட மிகவும் மோசமாக இருப்பதாகக் கூறினான். தொழில் நுட்பத் தாக்கத்தால், அதோடு இணைந்து வரும் பின்நவீனத்துவ சிந்தனைப்போக்கு அப்பகுதியில் சமுதாய மாற்றத்தை ஏற்படுத்துவதை இது விளக்குகிறது.

## ஆர்கனைசேஷன்களின் ஆக்கிரமிப்பு

மேலைத்தேய நாடுகளில் காணப்படுவதுபோல் பின்நவீனத்துவ சிந்தனைப்போக்கு இன்றுவரை பெருமளவுக்கு பரவியிராத இன்றைய தமிழ் சமூகத்தில் வேதத்தின் அதிகாரம் பற்றிய அறிவு பெருமளவில் குறைந்து காணப்படுகிறது. இதற்கு நான் அறிந்துவைத்திருக்கிற ஒரே காரணம் அடிப்படையிலேயே வேதம் என்றால் என்ன என்று பலருக்கும் போதிக்கப் படாததே. சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும், ஆத்துமாக்களை ஆதாயப் படுத்திக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தோடு ஊழியம் செய்த ஆரம்ப கால மிஷனரிகள் வேதத்தைத் துல்லியமாக உள்ளது உள்ளபடி போதிப்பதில் அக்கறை எடுக்கவில்லை. மெய்ச் சுவிசேஷ ஊழியத்திற்கு அடிப்படையானதும், அதை எந்த சமுதாயத்திலும் நிலைநிறுத்த வைப்பதும் சத்தியவேதம் என்பது இவர்களுக்குப் புரியாமல்போனது ஆச்சரியமே. வேதத்தைப் போதிப்பதில் இவர்கள் நாட்டம் காட்டாமல் இருந்ததற்கு மொழிச்சிக்கலும், கலாச்சாரமும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம். ஆரம்பத்தில் படிப்பறிவில்லாதவர்கள் மத்தியிலும், சமுதாயத்தில் பின் தங்கியவர்கள் மத்தியிலும் பெருமளவில் ஊழியங்கள் செய்துவரப்பட்டதும் இன்னொரு காரணமாக இருந்திருக்கலாம். சமீபத்தில் நான் கேள்விப்பட்ட ஒரு செய்தி இதைப் புரிந்துகொள்ள உதவும். இந்தியாவில் ஆதிவாசிகள் போன்றோர் மத்தியில் ஊழியம் செய்து வந்த ஒரு ஆர்கனைசேஷன் அவர்களை எட்டாம் வகுப்புக்கு மேல் ஒருபோதும் படிக்கவைக்கவில்லை. அவர்கள் படித்துவிட்டால் தங்களைக் கேள்வி கேட்க ஆரம்பித்து விடுவார்கள் என்ற பயம் அவர்களுக்கு இருந்திருக்கலாம். எது காரணமாக இருந்த போதும் எட்டாம் வகுப்போடு கல்வியை அவர்களுக்கு நிறுத்திவிட்டால் வேதபோதனைகளைத் தெளிவாகப் புரிந்துகொள்ளுமளவுக்கு அவர்களுக்கு அறிவு எங்கிருந்து வரும்? அவர்களை இந்த ஆர்கனைசேஷன் படிக்க வைக்காததால் படித்த போதகர்களை அதனால் ஒருபோதும் உருவாக்க

முடியவில்லை; சபைகளும் வேத அறிவில்லாமல், வளர்ச்சி குன்றியதாகவே எப்போதும் இருந்து வந்திருக்கின்றன. இதே நிலைமையையே இன்று ஆதிவாசிகள் மத்தியிலும், கிராமங்களிலும் நிகழ்ந்து வரும் ஊழியங்களில் பார்க்கிறோம்.

தமிழினத்திலும் இந்தியாவிலும் மெய்க்கிறிஸ்தவம் தலையோங்க வேண்டுமானால் வெறும் சுவிசேஷ ஊழிய நாட்டங்கொண்டவர்கள் அதிகரித்துவிட்டால் மட்டும் போதாது. புற்றீசல் போல் அதிகரித்துக் காணப்படும் மிஷன் ஆர்கனைசேஷன்களாலும் அதை நிறைவேற்றிவிட முடியாது. விஷ்வவானி என்னும் ஆர்கனைசேஷன் இந்தியாவில் 1700 கிராமங்களில் 800 திருச்சபைகளை உருவாக்கியிருப்பதாக அவர்களுடைய செய்தி அறிக்கையில் வாசித்தேன். ஆனால், உண்மை நிலையை அது பூரணமாக விளக்கவில்லை. டிரான்ஸ்வேர்ல்ட் ரேடியோவின் இந்திய மொழி ஒலிபரப்புச் செய்திகளைக் கேட்டு இயேசுவுக்காக தீர்மானம் எடுத்தவர்களைச் சேர்த்து கிராமங்களில் அமைக்கப்பட்டவை இந்த சபைகள். ஒரு காலத்தில் இவை 'ரேடியோ சபைகள்' என்றும் அழைக்கப்பட்டன. இவற்றில் ஒன்றிலாவது வேதம் போதிக்கும் சபை அமைப்பையோ, சபை அங்கத்துவத்தையோ, சபையால் நியமிக்கப்பட்ட போதகர்களையோ, சபை ஒழுங்கு நடவடிக்கைகளையோ, விசுவாச அறிக்கையையோ, சபை சட்ட அமைப்பு விதிகளையோ பார்க்க முடியாது. ஞாயிறு தினத்தில் ஆராதனைக்காக கூடிவருவதையும், தலைமை ஆர்கனைசேஷனுக்கு காணிக்கை கொடுப்பதையும் மட்டுமே இவை அறிந்து வைத்திருக்கின்றன. தெளிவான சத்திய விளக்கங்களை இச்சபைகள் என்றுமே அறிந்து வைத்திருக்கவில்லை. தலைமை ஆர்கனைசேஷனின் ஆசீர்வாதத்தைப் பெற்ற ஓரிரு தலைவர்கள் மட்டுமே இச்சபைகள் அனைத்தையும் எப்போதும் ஆளுகிறவர்களாக இருப்பார்கள். ஆர்கனைசேஷனுக்குக் கீழ் அடிமைகளாக இருந்து வரும், சபையென்ற பெயரில் அழைக்கப்படும் இக்குழுக்கள் வேத அதிகாரத்தையும், அதன் போதனைகளையும் அறிய முடியாமலும், கிறிஸ்து தரும் கிறிஸ்தவ விடுதலையை வாழ்க்கையில் அறியாமலும் இருந்து வருகின்றன. இப்படி நூற்றுக்கணக்கான ஆர்கனைசேஷன்கள் கீழைத்தேய நாடுகளில் வேதபோதனைகளையும், அவற்றின் அதிகாரத்தையும் மக்கள் அறிந்து கொள்ள முடியாதபடி மறைத்து வைத்திருக்கின்றன. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு ஐரோப்பாவில் ரோமன் கத்தோலிக்க மதம் மக்கள் சத்தியத்தை அறியமுடியாதபடி செய்து எப்படி அவர்களை இருட்டில் வைத்திருந்து அடிமைகளாக நடத்தி வந்ததோ அதையே இந்த ஆர்கனைசேஷன்களும் செய்து வருகின்றன.

## மலிந்து காணப்படும் சத்தியக்கோளாருள்ள வேதாகமக் கல்லூரிகள்

வேதம் அதிகாரமுள்ளது என்பதை உணர்ந்து அதற்கு அடிபணிந்து அதிலுள்ளதை உள்ளபடிப் போதிப்பதே எந்தவொரு வேதாகமக் கல்லூரியின் பணியாக இருக்கவேண்டும். ஆனால், கீழைத்தேய நாடுகளிலுள்ள வேதாகமக் கல்லூரிகளில் இதைத் தவிர வேறு எல்லாவற்றையும் பார்க்க முடியும். இன்று வேதாகமக் கல்லூரி நடத்துவது ஒரு குடிசைத்தொழிலாக கீழைத்தேய நாடுகளான இந்தியா, இலங்கை, நேபாளம், மியன்மார்,

பங்களாதேஷ், இந்தொனேசியா ஆகிய நாடுகளில் இருந்து வருகின்றன. இதற்கான காரணத்தை ஒரு மியன்மாரைச் சேர்ந்த போதகர் விளக்கிய போது, இப்பணிக்கே வெளிநாட்டு சபைகள் ஆர்வத்தோடு பணம் கொடுப் பதாகக் கூறியிருக்கிறார். ஆகவே, அப்போதகர் சபை நடத்துவதை விட்டு விட்டு வேதாகமக் கல்லூரி நடத்தி வருகிறார். அதுவும் இதில் படிப்பவர் களில் பெரும்பாலானோர் கிறிஸ்தவர்களே அல்ல. இந்த முறையில் கிறிஸ்த வர்கள் அல்லாதவர்களைப் பெருந்தொகையாகக்கொண்டு காணப்படும் வேதாகமக் கல்லூரிகள் இந்தியாவில் அநேகம். இந்த வேதாகமக் கல்லூரி கள் வேதத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. உலக ஞானத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்து அரைகுறைப் போதனைகளை அளித்து பெயருக்கு ஒரு ‘டிகிரி’யையும் கொடுத்து முக்கியமாக ஆதிவாசிகள் மத்தி யில் ஊழியம் செய்யப் பலரை அனுப்பி வைத்துக்கொண்டிருக்கின்றன. ஒருவருமே அறிந்து வைத்திராத இரகசியங்களை நான் வெளிப்படுத்த வில்லை. இவை எல்லோரும் அறிந்துவைத்திருக்கிற உண்மைகளே. அத் தகைய கல்லூரிகள் எவை என்பதும் சத்திய வாஞ்சை உள்ளவர்களுக்கு நன்றாகத் தெரியும். இதெல்லாம் எந்தளவுக்கு வேத அதிகாரம் நிர்த்தாட் சன்யமாக நிராகரிக்கப்பட்டு ஊழியங்கள் சீரழிந்து காணப்படுகின்றன என்பதற்கு உதாரணங்கள்.

## சமயசமரச சித்து விளையாடல்கள்

சமயசமரசப் போதனைகள் என்பது உறுதியானதும், தெளிவானதுமான வேதக் கோட்பாடுகளாக இல்லாமல் குளருபடியானதும், எல்லாருக்கும் பொருந்திப் போவதுமாகக் காணப்படும் பிசாசின் போதனைளைத்தான். சில உதாரணங்களை முன் வைப்பது நான் சொல்வதைப் புரிந்துகொள்ள உதவும். சமீபத்தில் மதுரையில் இயேசுதான் ‘ஈசன்’ என்றும், அவரே இந்து மத வேதங்கள் போதிக்கும் ‘பிரஜாபதி’ என்றும் விளக்கி ஒரு கெரிஸ்மெடிக் கூட்டம் கைப்பிரதிகளை விநியோகம் செய்ததாகக் கேள்விப்பட்டேன். இது சமயசமரசப் போதனை இல்லாமல் வேறு என்ன? இந்துக்களைக் கவருவதற்காக வேதத்தைத் திரித்துக் காலிலிட்டு மிதிக்கும் செயலிது. இயேசுவை விசுவாசித்த பின்பு ‘ஈசனை’ நாடிப்போவது நாய் தான் கக்கின தில் மறுபடியும் வாய் வைப்பதற்கு ஒப்பானதாகும். கர்த்தரின் சித்தத்தைப் பூரணமாக வெளிப்படுத்துகிற வேதம் நம் கையிலிருக்க கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்கிறவர்கள் இந்து மதத்தை நாடிப்போவது சாத்தானின் சமயசமர வழியைப் பின்பற்றுவதால்தான்.

இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் தமிழினத்தில் இன்று காணப் படும் கெரிஸ்மெட்டிக் இயக்கம் வேதத்தை முழுவதுமாக நிராகரித்து விட்டது. அதிலிருக்கும் தனிநபர்கள் சில வேளைகளில் மெய்க்கிறிஸ்த வர்களாக இருக்கலாம். ஆனால், அந்த இயக்கம் வேதம் சார்ந்த இயக்கமாக இல்லை. தன் இயக்கத் தலைவர்களுடைய வேதத்திற்கு முரணான போதனையை மட்டும் நம்பி ஆத்மீக அழிவை நாடிப் போய்க்கொண்டிருக் கும் இயக்கமாக கெரிஸ்மெட்டிக் இயக்கம் இருந்துவருகிறது. கத்தோலிக்க மதம், இந்து மதம் என்ற வேறுபாடுகள் இல்லாமல் எல்லா மதத்தோடும் உறவாடும் பச்சோந்தியாக இருந்துவருகிறது. சமய சமரசப்போக்கே அதன்

*அடிப்படை விசுவாசமாக இருக்கிறது. மெய்விசுவாச திருச்சபைகளாக தங்களை அடையாளம் காட்டுகிறவர்கள் இதைக் கண்டும் காணாமலும் இருந்து கிறிஸ்தவ ஐக்கியத்தைப் பற்றிப் பேசி இயேசுவின் முதுகில் குத்தலாமா? மெய்க்கிறிஸ்தவ ஐக்கியம் என்றைக்கு கிறிஸ்துவையே பலிகொடுக்க ஆரம்பித்தது? பூனை கண்ணை மூடிக்கொண்டால் உலகம் இருண்டுவிட்டதென்று அர்த்தமா? சமயசமரசப் போக்குள்ள பச்சோந்தி கள் மட்டுமே கெரிஸ்மெட்டிக் இயக்கத்தை நியாயப்படுத்தி தங்களை ஏமாற்றிக்கொள்வதோடு ஆத்துமாக்களையும் ஏமாற்றப் பார்ப்பார்கள்.*

*இன்று சமயசமரசப்போக்கு தமிழினத்தில் கிறிஸ்தவத்தைப் பெருமளவில் பாதித்திருப்பது வேத அதிகாரம் எந்தளவுக்கு காலில் போட்டு மிதிக்கப் படுகிறது என்பதற்கு நல்ல உதாரணம். இதற்குக் காரணம் வேதத்தின் அதிகாரம் பற்றிய சத்தியம் இன்னும் பலருக்குப் புரியாத புதிராக இருப்பது தான். அடிப்படை சத்தியம் என்று ஒன்றில்லை என்ற போக்கிலும், சத்தியத் திற்குப் பல முகங்கள் இருப்பது போலவும் நடமாடுவதே சமயசமரசப் போதனை. இதுவே, தந்தை பேர்க்மென்ஸை தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் தொடர்ந்து ஆடவும் பாடவும் வைத்துக்கொண்டிருக்கிறது. வேத அதிகாரத் துக்கு கீழ்ப்படிகிறவர்கள் அவருடைய பாடல்களுக்கும், போதனைக்கும் தங்கள் வாழ்க்கையில் இடமளிக்கமாட்டார்கள். இது தனிமனிதனில் குறைகாணும் முயற்சி அல்ல; வேத சத்தியத்துக்கு எதிரான மனிதரின் நடவடிக்கையை சுட்டிக்காட்டி ஆத்துமாக்களை சிந்திக்க வைக்கும் முயற்சி மட்டுமே.*

*வேதசத்தியங்களை நிராகரித்து, சுயநலத்தால் அவற்றிக்கு தவறான விளக் கங்களைத் தந்து சமயசமரச முயற்சியில் ஈடுபட்டு முரண்பாடாக நடந்து கொள்வது பரிசுத்தமற்ற செயலென்பதை பலர் உணராமலிருப்பது ஆபத் தானதாகும். பத்துக் கட்டளைகளில் ஒன்றான ஒன்பதாம் கட்டளையை மீறுகிற செயல் அது. வேதத்தைத் திரித்து விளக்கங்கொடுப்பது பொய் சாட்சி சொல்வதாகும். அதாவது கர்த்தர் ஏற்கனவே தெளிவாக சொல்லி யிருக்கிற சத்தியத்துக்கு மாறாகப் பேசுவதாகும். சிலர் நாம் வேதத்திற்கு மாறாகப் பேசவில்லை; அதற்கு வேறொரு விளக்கந்தான் தருகிறோம் என்பார்கள். கர்த்தர் எப்போதும் வேதவசனங்களுக்கு ஒரு விளக்கத்தை மட்டுமே தந்திருக்கிறார். சில வசனங்கள் தெளிவானதாக இல்லாததுபோல் நமக்குத் தென்படலாம். அவற்றை ஆராய்ந்து படிக்கிறபோது கர்த்தர் காட்டும் பொருளை அறிந்துகொள்ள முடியும். வேத வசனங்கள் அனைத் திற்கும் பல விளக்கங்கள் இருப்பதாகக் கூறிவரும் ஒரே ஆள் சாத்தான் மட்டுமே.*

## ‘மிஸ்டிசிஷத்தின்’ செல்வாக்கு (Mysticism)

*மிஸ்டிசிஷத்தை அறிவுக்குப் புறம்பான அநுபவத்தை நாடும் முயற்சி என்று கூறலாம். இப்படி விளக்குவதால் இது அறிவைவிட மேலானது என்று எண்ணிவிடக்கூடாது. உண்மையில் அறிவை மீறுகிற அனைத்துமே பிசாசின் அநுபவங்கள். அறிவை மீறிய அநுபவங்களுக்கும் கர்த்தருக்கும் எந்தத் தொடர்புமில்லை. ஆகவே, அறிவுக்குப் புறம்பான அநுபவம் என்கிற*

போது, அறிவைப் புறக்கணித்து அடைய முயலும் அநுபவம் என்று பொருள் கொள்ளுவதே முறையானது. அதுவே மிஸ்டிசிஷமாகும். இப்படி மிஸ்டிசிஷ வழிகளில் போகிறவர்கள் தன்னிலை இழந்தவர்களாகிறார்கள். அந்த அநுபவத்தை அடைவதிலேயே அவர்கள் அதிக அக்கறை காட்டு கிறார்கள். மிஸ்டிசிஷத்தைப் பின்வருமாறு விளக்குகிறார் ஜோண் மெக்காத் தர் (John MacArthur), "அறிவைப் புறக்கணித்து அநுபவத்தை நாடும் மனிதன் அறிவுபூர்வமான சிந்தனைக்கு தன் வாழ்க்கையில் இடங் கொடுக் காமல் தன்னுடைய உணர்ச்சிகளுக்கும், கற்பனைகளுக்கும், தனிப்பட்ட தரிசனங்களுக்கும், தனிமனிதர்கள் கொடுக்கும் விளக்கங்களுக்கும் தன்னு டைய சொந்த அநுபவங்களுக்கும் இடங்கொடுத்து உண்மையைத் தேடிப் போகிறான்."

இந்து மதத்தில் மிஸ்டிசிஷத்தின் செல்வாக்கு மிக அதிகம். அது சிலை வணக்கத்தை மட்டும் கொண்டிராமல் தனிமனிதன் தன்னுடைய சுய முயற்சியால் இறைவனோடு தொடர்புகொண்டு ஒன்றறக் கலந்துவிடலாம் என்று நம்புகிறது. இதற்காக தியானம், யோகம், துறவறம், மந்திரங்களை உச்சரித்தல் போன்ற பல்வேறு உத்திகளை அது பின்பற்றுகிறது. இத்தகைய கடவுளோடு ஒன்றறக் கலக்கும் இந்த 'மிஸ்டிகல்' அநுபவத்தை அறிவுக்கு அப்பாற்பட்டதொன்றாக இந்து மதம் விளக்குகிறது. இதை ரோமன் கத்தோலிக்க மதத்திலும் காணலாம். இருண்ட காலப் பகுதியில் இத்தகைய மிஸ்டிசிஷ நடவடிக்கைகள் கத்தோலிக்க மதத்தில் தலைவிரித்தாடியிருக் கின்றன. துறவறம் பூணுதல், தனிமையிலிருத்தல், அதிகம் வெளிச்சமில்லாத இடங்களில் தியானம் செய்தல், சத்தமேயில்லாத இடங்களில் பூரண அமைதியைக் கடைப்பிடித்தல், ஒரே வார்த்தைகளைப் பலதடவைகள் தொடர்ந்து உச்சரித்து வருதல், ரோசரியைச் சுற்றிக்கொண்டு மௌனமாக வார்த்தைகளை உச்சரித்தல் போன்ற பயிற்சிகளெல்லாம் மிஸ்டிசிஷத்தின் அடையாளங்கள். இதெல்லாம் கடவுளோடு அறிவுக்குப் புலப்படாத அநுபவத்தை அடைவதற்காக கத்தோலிக்க மதம் பயன்படுத்தி வரும் சித்து வேலைகள். இந்தியாவில் இந்துக்கள் மத்தியில் கத்தோலிக்க மதம் பிரபல்ய மடைந்ததற்கு இந்துமதத்தில் காணப்படும் தியானம் போன்ற மிஸ்டிசிஷ வழிமுறைகளை கத்தோலிக்க மதம் பின்பற்றியதுதான் காரணம்.

இன்று மிஸ்டிசிஷம் தமிழினத்துக் கிறிஸ்தவத்தில் தலைவிரித்தாடுகின்ற தைப் பலர் உணராதிருக்கிறார்கள். தமிழினத்துப் பெந்தகொஸ்தே, கெரிஸ் மெடிக் இயக்கங்கள் மிஸ்டிசிஷ வழிமுறைகளை அதிகம் பின்பற்றுகின்றன. சிலோன் பெந்தகொஸ்தே மிஷன் என்று அழைக்கப்படும் ஒரு பிரிவில் ஆண் ஊழியர்களும், பெண் ஊழியர்களும் திருமணம் செய்துகொள்ள தடை இருக்கிறது. இந்து மதமும், கத்தோலிக்க மதமும் பின்பற்றும் துறவ றத்தை இந்தப் பிரிவும் அதன் ஊழியர்கள் மத்தியில் வற்புறுத்துகிறது. இது தவிர இதன் போதனைகளில் அநேகம் மிஸ்டிசிஷத்தைத் சார்ந்தே இருக்கின்றன.

அநுபவத்திற்கும், உணர்ச்சிகளுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து அவற்றின் அடிப்படையில் உருவான கெரிஸ்மெடிக் இயக்கத்திலும் மிஸ்டி சிஷத்தை அதிகம் காணலாம். இதற்குப் பல உதாரணங்களை எடுத்துக்

*காட்டலாம். ஒரே வார்த்தையைப் பல தடவைகள் திரும்பத் திரும்பச் சொல்லுவதன் மூலம் நாம் எதிர்பார்த்த காரியம் நிகழும் என்று நம்புவது; கண்ணீரோடு ஊக்கமாக அதிக நேரம் ஜெபம் செய்தால் கர்த்தர் நாம் கேட்டதைத் தருவார் என்று நம்புவது; ஜெப நேர அதிகரிப்புக்கேற்ப ஜெப பலன்கள் அமையும் என்று நம்புவதெல்லாம் மிஸ்டிசிஷத்தின் செல்வாக்கிற்கான உதாரணங்கள். முழு இரவு உபவாச ஜெபக் கூட்டங் களும் இந்த நோக்கத்திலேயே நடக்கின்றன. அப்படிப் பல மணிநேரங்கள் கூடி உபவாசித்து ஜெபிக்கும்போது ஆத்மீக ஆலோசனைகளை கர்த்தர் தங்களுக்கு வெளிப்படுத்துவார் என்று இவர்கள் நம்புகிறார்கள். இது ரோமன் கத்தோலிக்க மதத்தின் யேசுவிஸ்ட் பிரிவைச்* (Jesuits) *சேர்ந்த இக்னேசியஸ் லொயோலா* (Ignatius Loyola) *ஆரம்பித்து வைத்த ஒரு வழி முறையாகும். இது கெரிஸ்மெட்டிக் இயக்கத்தில் இன்று புகுந்து விளையாடு கிறது. இதை நவீனமயப்படுத்தி பயன்படுத்தியவர்கள் நோர்மன் வின்சன்ட் பீலும்* (Norman Vincent Peel), *போல்* (*டேவிட்*) *யொங்கி சோவும்* (Paul-*David*-Yonggi Cho). *தமிழகத்து சுவிசேஷகரான தினகரனின் ஜெப கோபுரத்தையும் இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது. இதைச் சுற்றியும் மிஸ்டிகல் அம்சங்கள் காணப்படுகின்றன. தன்னிலும் இந்த ஜெப கோபுரங் களிலும் ஏதோ விசேஷ வல்லமையிருப்பதாக ஒரு மிஸ்டிகல் மாயையை தினகரன் ஏற்படுத்தியிருக்கிறார். கர்த்தரை நம்பி ஜெபிப்பதைவிட அறியா மையால் இந்த ஜெப கோபுரங்களை நாடி ஓடுகிறவர்கள் அநேகர். கர்த்தருக் கும் ஆத்துமாவுக்கும் இடையில் ஒரு மத்தியஸ்தர் போல் தினகரன் செயல் பட்டு வருகிறார். இது மிஸ்டிசிஷம் உருவாக்கிவிடுகின்ற ஒரு போலித்தனம். தன்னில் தெய்வீக அம்சம் இருப்பதாக தினகரன் ஆத்துமாக்களை நம்ப வைத்து வருகிறார். வேதம் கர்த்தருக்கும் ஆத்துமாவுக்கும் இடையில் இயேசு வைத் தவிர வேறெந்த மத்தியஸ்தரையும் சுட்டிக்காட்டவில்லை.*

*ஜெபம் செய்யும் போது ஏதாவது ஒரு வார்த்தையைத் தெரிந்தெடுத்து அதைத் திரும்பத் திரும்ப அமைதியாக சொல்லுவதன் மூலம் மனதை வெறுமையாக்கி இயேசுவை நம்மில் பார்க்கும் நிலைக்கு வரவேண்டும் என்கிறது இன்னொரு புதிய முறை. அமைதியாக திரும்பத் திரும்ப வார்த்தைகளை சொல்லுவதன் மூலம் கர்த்தரோடு ஒன்றறக் கலந்து விடலாம் என்கிறது இந்தக்* Contemplative Prayer *என்னும் புதிய முறை. இதையெல்லாம் இந்து மதத்திலும், புத்த மதத்திலுமே ஆரம்பத்தில் கண்டி ருக்கிறோம். எந்தளவுக்கு புறமத வழிமுறைகள் இன்று நம்மத்தியில் வேத அறிவின்மையால் பின்பற்றப்படுகின்றன என்பதற்கு இவை சான்றுகள்.*

*கூட்டங்களில் அதிகமாக சத்தமிட்டுப் பேசியும், ஜெபித்தும், ஆடியும், பாடியும் மனித உணர்ச்சிகளின் உச்சகட்டத்துக்குப் போக முயன்று, அந்த நிலையை அடைந்து நிலை தடுமாறுகிறபோது அந்த அநுபவத்தை ஆத்மீக அநுபவத்தின் உச்ச கட்டமாக தவறாக எண்ணி வருகிறது கெரிஸ்மெட்டிக் இயக்கம். இம்மாதிரியான செயல்களை நாம் சாதாரணமாக இந்துக்கள் மத்தியில் கோவில் திருவிழாக் கூட்டத்தில் பார்க்கலாம். அத்தோடு இரவில் காணும் கனவுகளுக்கு ஆத்மீக விளக்கங்கொடுப்பதும், வரப்போவதை முன்னுரைப்பதிலும், அதை அறிந்துகொள்ளுவதிலும் அதிக ஆர்வங்*

காட்டுவது மிஸ்டிசிஷத்தின் செல்வாக்கிற்கான அடையாளங்களே.

வேதபோதனைகளின்படி வாழ முயற்சிக்காமல் தங்களுடைய உள்ளுணர்வு என்ன சொல்லுகிறதென்று அதன் குரலை நாடி நிற்கும் பல்லாயிரக் கணக்கானோர் நம்மத்தியில் இருக்கிறார்கள். தங்கள் போதகர்களும், இயக்கத் தலைவர்களும் காட்டும் வழிகளுக்கு, அவை தவறானவையாக இருந்தாலும் வேதவாக்காக எண்ணி முக்கியத்துவம் கொடுப்பதும் அறிவு கடந்த அநுபவமாகிய மிஸ்டிசிஷத்தின் வழியில் போகிறவர்களின் நடவடிக்கையாக இருக்கும். முக்கியமாக மிஸ்டிசிஷம் தலைதூக்கியிருக்கும் இடத்தில் வேத அதிகாரமும், போதனையும், அதன் செல்வாக்கும் அருகியே காணப்படும். கர்த்தர் வெளிப்படுத்தி எழுத்தில் தந்திருக்கும் வேத சத்தியங்களைப் ஆராய்ந்து படித்து கர்த்தரை அறியும் அறிவைப் பெற்றுக்கொள்வதில் இவர்கள் நம்பிக்கை வைப்பதில்லை. கர்த்தரோடு ஐக்கியத்தில் வருவதானால் அதை அறிவுக்கும் சாதாரண உணர்வுகளுக் கெல்லாம் அப்பாற்பட்ட 'மிஸ்டிகல்' அநுபவத்தின் மூலமே அடைய முடியும் என்று ஆயிரக்கணக்கானோர் நம்புகிறார்கள். இதைப் பெந்த கொஸ்தே, கெரிஸ்மெட்டிக் இயக்கத்தில் நாம் இன்று நன்றாகவே பார்க்க முடிகிறது. வேதம் மிஸ்டிசிஷப் போதனைகளுக்கு எந்த வகையிலும் இடங் கொடுப்பதில்லை. உணர்ச்சிகளின் உச்சகட்டத்தை அடைவதன் மூலமோ, துறவறத்தாலோ, ஊக்கமான ஜெபத்தாலோ கர்த்தரைப் பற்றிய அறிவை அடைய முடியாது. கர்த்தரே வெளிப்படுத்தியிருக்கிற பூரணமான வேத சத்தியங்களின் மூலம் மட்டுமே அவரைப் பற்றிய அறிவையும், அநுபவத்தை யும் எந்த மனிதனும் அடைய முடியும்.

மிஸ்டிசிஷப்போக்கில் போகிறவர்கள், ஒன்றும் ஒன்றும் இரண்டு என்ற உண்மையை அறிவுபூர்வமாக அணுகி ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். அது ஏன் இரண்டாக இல்லாமல் வேறொன்றாக இருந்துவிட முடியாது என்று அவர்களுடைய மனம் வேலை செய்கிறது. இந்த வழியிலேயே மிஸ்டிசிஷம் ஒருவரை எண்ணவைக்கிறது. சிந்தித்து விளங்கிக்கொள்ளக்கூடிய தெளிவான சத்தியங்களை மிஸ்டிசிஷம் நிராகரிக்கிறது. கர்த்தரின் படைப்பின் அடிப் படையில் உலகில் காணப்படும் எந்த உண்மையையும் அதைப் பின்பற்று கிறவர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். காரண காரியங்களோடு எதையும் சிந்தித்துப் பார்ப்பதையும் அவர்கள் அறவே வெறுக்கிறார்கள். அசாதரண மாகத் தெரிகிறவற்றை மட்டுமே அவர்கள் உயர்வாகப் பார்க்கிறார்கள். மிஸ்டிசிஷப் போக்கில் போகும் பிரசங்கிகளும் இந்த முறையிலேயே வேத விளக்கங்களையும் தருகிறார்கள். இலக்கண அடிப்படையில் வார்த்தை களுக்கு வழமையாக இருக்கும் விளக்கத்தை நிராகரித்து அந்த வார்த்தை களின் மூலம் கர்த்தர் வழமைக்கு மாறான புதிய உண்மைகளை விளக்கு கிறார் என்று அவர்களுடைய மிஸ்டிகல் போக்கு அவர்களை சிந்திக்க வைக்கிறது. இதை நாம் தமிழினப் பிரசங்கிகளில் அநேகர் கொடுக்கும் வேதவிளக்க முறையில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

கர்த்தரை விசுவாசிக்கிறவர்கள் அவரோடு ஐக்கியத்தில் வருவதற்கு வேத சத்தியங்களை அறிவுபூர்வமாக விளங்கி, அவற்றைத் தங்களுடைய

வாழ்க்கையில் பின்பற்றுவதன் மூலம் மட்டுமே அதைச் செய்ய முடியும். வேத சத்தியங்களை அறிந்து அவற்றில் வளராமலும், அவற்றைப் பின்பற்றா மலும் எவரும் கர்த்தருடைய அநுபவத்தில் வளர முடியாது. வேதசத்தியங் கள் அனுமதிக்காத, அவற்றிற்கு அப்பாற்பட்ட எந்த உணர்ச்சிகளையும், அநுபவங்களையும் வேதம் பிசாசின் அநுபவங்களாகவே விளக்குகின்றது. இந்தவகையில் பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் இயக்கங்கள் தாங்கள் பேராபத்தில் சிக்கியிருப்பதை உணராதிருக்கிறார்கள். அவர்களைப் பின்பற்றுகிறவர்களும் அழிவை நாடிப் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

## கற்பனை செய்து காணுதல் (Visualization)

இறந்து பரலோகத்துக்கு விசிட் செய்து, அங்கே கர்த்தரை சந்தித்து அங்கிருந்த எல்லாவற்றையும் பார்த்துவிட்டு வந்து வர்ணித்துக் கதையளந்த பலரைப் பற்றி நாம் வாசித்திருக்கிறோம். அது பழைய பஞ்ஞாங்கம். இன்று புதிய முறைகள் ஆரம்பித்திருக்கின்றன. அதிலொன்று, உருவங்களைக் கற்பனை செய்து பார்த்து அவை உயிரோடு நடமாடித் தங்களுடன் பேசுவ தாக அறிவிப்பது. இவ்வாறாக இயேசுவையும், பரிசுத்த ஆவியையும் கற்பனை செய்து வர்ணித்து அவர்கள் தங்களுடன் நேரடியாக பேசி செய்திகள் அளித்ததாகக் கூறுகிறவர்களைக் கெரிஸ்மெட்டிக் இயக்கத்தில் பார்க்கிறோம். இதுவும் கீழைத்தேய புறஜாதி மதங்களில் இருந்து வந்த தொன்று தான். அம்மனையும், முருகனையும், ஆஞ்சநேயரையும் நேரில் பார்த்ததாக சொல்லுகிற எத்தனை பேரைப்பற்றி பத்திரிகையில் வாசித் திருக்கிறோம். இதைக் கிறிஸ்தவத்திற்குள்ளும் நுழைத்திருக்கிறார்கள் சிலர். இதற்கு ரெடியாக வேத வசனங்களையும் இவர்கள் ஆதாரம் காட்டத் தவறுவதில்லை. கர்த்தர் இன்று இப்படி நேரில் தரிசனம் தருவதில்லை என்பதை வேதம் தெளிவாக விளக்குகிறது. அத்தோடு நாம் கற்பனை செய்து, அந்தக் கற்பனைக்கு உயிர்கொடுத்து நடமாடவிட்டு நம்மோடு சம்பாஷனை செய்யும் அளவுக்கு மனிதன் கடவுளாகிவிடவும் இல்லை. வேதம் அறியாது இருண்டு கிடக்கும் நம் சமுதாயம் இதை உணர மறுத்து வருகிறது. வேத அறிவில் நம் மக்கள் வளராதவரை இப்படியான உத்தி களின் மூலம் ஆத்மீக இயக்கங்களை வளர்க்க முயல்கிறவர்கள் கூட்டம் எக்காலத்திலும் இருக்கத்தான் செய்யும்.

## நம்மினத்தில் ஆத்மீக விடுதலைக்கு என்ன வழி?

வேத அதிகாரத்துக்கு இடங்கொடுக்காமல் இருந்து வரும் நம்மினத்துக் கிறிஸ்தவத்தின் ஆத்மீக விடுதலைக்கு வழி என்ன? வியாதி எது என்று அறிந்து கொண்டால் மட்டும் வியாதி தீர்ந்துவிடாது. அதற்கு மருந்து வேண்டும். இதற்கு வழி இல்லாமலில்லை; வேதவழி மட்டுமே இந்த நோய் க்கு அருமருந்து. வேதத்தில் கர்த்தர் காட்டியிருக்கிற வழிகளைப் பின்பற்றி னால் அவருக்கு எதிராகப் போகவேண்டிய அவசியமிருக்காது. கர்த்தருக் குப் பணி செய்கிறோம் என்று உங்களையே ஏமாற்றிக்கொண்டு அவருக்கு எதிரியாய் இருந்து வருவதில் எந்த இலாபமும் இல்லை. இனி நம்மினத்தின் ஆத்மீக விடுதலைக்கான பத்து வழிமுறைகளை ஜெபத்தோடு கவனிப்போம்.

1. வேதசத்தியங்களை உள்ளது உள்ளபடி அறிந்துகொள்ள பாடுபட

வேண்டும். “வேதம் தெரியாமல் இருப்பது விசுவாசி தன் சரீரத்தில் வியாதியோடு வாழ்க்கை நடத்துவது போலாகும்” என்கிறார் பிசப் ஜே. சி. ரைல். வேத அறிவின்மையாலேயே தமிழினத்தில் கிறிஸ்தவம் இன்று மிஸ்டிசிஷத்தின் வழியில் போய்க்கொண்டிருக்கிறது. வேதத்தைப் படிப்பதில் நாம் அதிகம் ஊக்கம் காட்டி உழைக்க வேண்டும். அது நம் மொழியில் இருந்தபோதும் அதனை ஆராயாது படித்தால் அதனை விளங்கிக்கொள்ள முடியாது. ஒரு பகுதியில் இருப்பதை அதோடு தொடர்புடைய ஏனைய பகுதிகளோடு ஆராய்ந்து பார்க்கும்போது சத்தியம் தெளிவாகப் புலப்படும். வேத அறிவில்லாமலும், வேதபோதனைகளை முறையாகக் கடைப்பிடிக்காமலும் ஒருவர் விசுவாசியாக கர்த்தரைத் தன் வாழ்க்கையில் ஒருபோதும் மகிமைப்படுத்த முடியாது. அத்தோடு சத்தியத்தைத் தெரிந்து கொள்ளுவதன் மூலமே போலிப்போதகர்களிடம் இருந்தும், வேதத்தைத் திரித்துப் போதிக்கிறவர்களிடம் இருந்தும் நாம் நம்மைக் காப்பாற்றிக்கொள்ள முடியும். போலிப் போதகர்கள் கையில் சத்தியம் தெரியாதவர்களும், சத்தியத்தை அசட்டை செய்கிறவர்களுமே அதிகம் அல்லாடிக் கொண்டிருக்கிறார்கள்.

2. வேதத்தில் நாம் படித்தறிந்துகொள்ளும் சத்தியங்கள் எல்லாம் நம்மில் பரிசுத்தத்தை ஏற்படுத்தும்படி அவற்றை நாம் நடைமுறையில் கடைப்பிடிக்க வேண்டும். பரிசுத்ததைப் பற்றிய தவறான கருத்தை இன்று அநேக கிறிஸ்தவர்கள் கொண்டிருக்கிறார்கள். அதிக நேரம் ஜெபம் செய்வதும், உபவாசம் செய்வதும், அறிவுக்குப்புறம்பான உணர்ச்சியின் உச்சகட்டத்தை அடைவதும், ஊழியம் செய்வதும் பரிசுத்தத்தின் அடையாளங்களாக பலராலும் தவறாகக் கருதப்படுகின்றன. இவற்றையெல்லாம் செய்தும் வாழ்க்கையில் பரிசுத்தம் அறவே இல்லாமல் இருந்துவிட முடியும். கர்த்தரின் பத்துக் கட்டளைகளை அன்றாடம் வாழ்க்கையில் கடைப்பிடிக்க முயல்வதே பரிசுத்தமாக வாழ்வதற்கான ஒரேவழியாகும். விசுவாசிகளால் மட்டுமே இதைச் செய்ய முடியும். இதைச் செய்ய முடியாத விசுவாசி இன்னும் இந்த உலகத்தில் பிறக்கவில்லை. இவற்றைக் கடைப்பிடிப்பதில் அக்கறை காட்டாதவர்கள் விசுவாசிகளா என்பதே சந்தேகம்.

3. வேதத்தை மட்டும் போதிக்கும் திருச்சபைகளில் மட்டும் அங்கம் வகிக்க வேண்டும். இப்படிப்பட்ட சபைகளைத் தேடிக் கண்டுபிடிப்பது நம்மினத்தில் மிகவும் கஷ்டமான செயல் என்பது எனக்குத் தெரியும். சபையென்ற பெயரில் குடும்ப ஊழியங்களும், தனிமனிதனின் ஆட்சியும், ஆர்கனைசேஷன்களின் ஆக்கிரமிப்புமே பெருமளவில் இருந்துவருகின்றன. இருந்தாலும் எல்லா சபைகளையும் ஆராய்ந்து பார்த்து ஆத்துமவிருத்திக்கான போதனைகள் கிடைக்கும் இடத்தில் மட்டும் இருப்பது அவசியம். தனிமனிதனை முதன்மைப்படுத்தாது, வேதபோதனைகளின் அடிப்படையில் சபைகள் உருவாகவும் நாம் ஜெபிக்கத் தவறக்கூடாது.

4. ஆர்கனைசேஷன்களையும், தனிமனிதர்கள் நடத்தி வரும் ஊழியங்களை ஆதரிப்பதையும், அவற்றிற்குப் பணம் கொடுப்பதையும் கர்த்தருக்குச் செய்யும் அரும் பணியாகக் கருதி நிறுத்திக்கொள்ள வேண்டும். கர்த்தருடைய பணம் சேர வேண்டிய இடம் அவருடைய திருச்சபை. அப்படியே நல்ல திருச்சபைகள் இல்லாவிட்டாலும் நம் பணத்தை மற்றவர்களுக்கு

கொடுக்க வேண்டிய அவசியமில்லை. கர்த்தரின் பணிக்குக் கொடுக்கிறேன் என்று உங்களை ஏமாற்றிக்கொண்டு ஆராய்ந்து பார்க்காமல் அசத்தியத்தை யும், பிசாசின் போதனையையும் பரப்பும் ஆர்கனைசேஷன்களுக்கும், தனி மனிதர்களுக்கும் கொடுக்கும் பணத்திற்கு கர்த்தர் ஒருநாள் உங்களைப் பார்த்துக் கணக்குக் கேட்பார். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார் என்ற நினைப்பில் யாருக்காவது கொடுக்கும் பணம் ஆசீர்வாதத்தைவிட பாவத் தையே நம்மிடம் சேர்த்துவிடும். இன்று கிறிஸ்தவர்கள் அறிவில்லாமல் அள்ளிக்கொடுக்கும் பணத்தால்தான் போலிப்போதனைகளும், போலிப் போதகர்களும் அதிகரித்து தமிழினத்தை சீரழித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை ஒருதடவை எண்ணிப்பாருங்கள்.

5. நாம் கேட்காமலே நம்மைத் தேடிக் கிறிஸ்தவ பத்திரிகைகள் என்ற பெயரில் வரும் குப்பைகளை வாசிப்பதில்லை என்ற உறுதிப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும். இவற்றில் பெரும்பாலானவை நம் பணத்தைக் கறப்பதற்காகவே வந்துகொண்டிருக்கின்றன. அவற்றை வேறு எத்தனையோ காரியங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம்; அவற்றை வாசிப்பதை மட்டும் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அசத்தியத்திற்கு நாம் எந்தவிதத் திலும், எந்தவகையிலும் நம் வாழ்க்கையில் இடமளித்துவிடக்கூடாது.

6. நல்ல நூல்களை மட்டும் வாங்கி வாசிக்க வேண்டும். நல்ல நூல்கள் எவை? என்று கேட்பீர்கள் என்பது எனக்குத் தெரியும். நம் மொழியில் அத்தகைய நூல்கள் அதிகம் இல்லை. இருந்தாலும் இந்தப் பத்திரிகையில் சுட்டிக் காட்டப்படும் நூல்களை வாங்கி வாசியுங்கள். அவற்றைப் பெற்றுக் கொள்ளப் பாடுபடுங்கள். அவற்றை வாசித்து சிந்தியுங்கள். வாசிக்காமல் சிந்திக்காமல் வேத அறிவில் வளர முடியாது. ஜோண் பனியனின் 'மோட்சப் பயணம்' ஒவ்வொரு விசுவாசியும் வாசிக்க வேண்டிய நூல். நாம் வெளியிட்டிருக்கும், 'பரிசுத்த வேதாகமம்', 'திருச்சபை சீர்திருத்தம்', 'ஆதி சபையின் அற்புத வரங்கள்', 'பத்துக் கட்டளைகள்', வில்லியம் கேரி, சார்ள்ஸ் ஹெடன் ஸ்பர்ஜன்' போன்ற நூல்கள் உங்களுக்கு நிச்சயம் பயன் தரும். அவற்றை நீங்கள் வாசிப்பது மட்டுமன்றி மற்றவர்களுக்கும் கொடுத்து அவர்களையும் வாசிக்கச் செய்யுங்கள். சீர்திருத்தவாதத்தைக் கர்த்தர் எழுத்தின் மூலம் பதினாறாம் நூற்றாண்டில் அதிகம் பரவச் செய்தார். இன்று நாம் நல்ல நூல்களைப் படிப்பது மட்டுமல்ல மற்றவர்களும் அவற் றைப் படித்து சிந்திக்க உதவி செய்ய வேண்டியது அவசியம். குப்பைப் பத்திரிகைகளுக்கும், தனிமனிதர்களுக்கும், ஆர்கனைசேஷன்களுக்கும் கொடுக்கும் பணத்தைச் சேர்த்து நல்ல நூல்களில் பல பிரதிகளை வாங்கி மற்றவர்களுக்கு ஏன் கொடுக்கக் கூடாது. அப்படிச் செய்தால் சத்தியத்தைப் பரப்புவதற்கு நீங்கள் துணை செய்ததாகுமே. மாற்றங்கள் நம்மத்தியில் தேவை என்று சொல்லுகிற பலர் அந்த மாற்றங்கள் ஏற்படுவதில் தங்களுக் கும் பங்குண்டு என்பதை நினைக்கத் தவறி விடுகிறார்கள்.

7. சத்தியத்துக்கெதிரான எந்தப் பேச்சையும் காதால் கேட்க மறுக்க வேண்டும். சத்தியத்துக்கெதிரான எந்தச் செயலுக்கும் துணை போகாம லிருக்க வேண்டும். சத்தியத்துக்காகப் பாடுபடுவதில் இன்னொரு பக்கம் சத்தியத்துக்கு எதிராக நம்மை எவரும் பயன்படுத்த இடங்கொடுக்காமல்

இருப்பது. சத்தியத்திற்கு துணை நின்ற ஒவ்வொருவருக்கும் தொல்லைகள் ஏற்பட்டிருப்பதை வேதம் சுட்டிக்காட்டுகிறது. பழைய ஏற்பாட்டு தீர்க்க தரிசிகளும், புதிய ஏற்பாட்டில் இயேசுவும், அப்போஸ்தலர்களும் பல தொல்லைகளைச் சந்திக்க நேர்ந்தது. மார்டின் லூதரும், ஜோண் கல்வினும், ஜோண் நொக்ஸ¨ம், ஜோண் பனியனும், சார்ள்ஸ் ஸ்பர்ஜனும் இவற்றிற்கு விதிவிலக்கல்ல. அதேபோல் சத்தியத்துக்காக பாடுபடுகிறவர்களுக்கு நம் காலத்தில் தொல்லைகள் ஏற்படத்தான் செய்யும். அவர்களுக்கு நாம் துணை நிற்க வேண்டும். அவர்களுக்கெதிரான ஏச்சுப் பேச்சுக்களுக்கு காதுகொடுக்கக் கூடாது. முகதாட்சிணை பார்த்து மதில் மேல் பூனையாக ஒருபுறமும் சாராமல் இருப்பதைத் தவிர்த்து நமக்கு ஆபத்து வந்தாலும் சத்தியத்திற்காக உழைப்பவர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

8. நல்ல போதகர்களுக்கும், சபைகளுக்கும் நாம் ஆதரவு தர வேண்டும். அப்படிப்பட்ட ஒரு சில நல்ல போதகர்களும், சபைகளும் நம்மத்தியில் இருக்கத்தான் செய்கின்றார்கள். ஆத்துமாக்களின் ஆத்துமவிருத்தியில் அக்கறைகாட்டி உழைக்கும் அத்தகைய போதகர்களையும், திருச்சபை களையும் நாம் ஜெபத்தில் நினைவு கூறவேண்டும். அத்தகைய சபைகளின் வளர்ச்சிக்காக சகல வழிகளிலும் பாடுபட வேண்டும்.

போதகர்களே! கர்த்தர் உங்களோடு பேசி சத்திய வாஞ்சையை உங்களுக் குத் தந்திருநதால், உங்கள் சபை மக்களுக்காக நீங்கள் தன்னலமில்லாமல் வருந்தி உழைக்க வேண்டும். உங்கள் குடும்ப நலத்திற்காகவும், உயர்விற் காகவும் சபையை ஒருக்காலும் பயன்படுத்திக்கொள்ளாதீர்கள். உங்களுக்கு மரியாதை தேடித் தரும் பதவியாகவும், சமுதாயத்தில் நீங்களும், உங்கள் குடும்பமும் உயரப்போக உதவும் ஏணியாகவும் போதக ஊழியத்தைக் கருதாதீர்கள். ஆராய்ந்து படித்து ஆத்துமவிருத்தியை ஏற்படுத்தும் பிரசங்கங் களையும் போதனைகளையும் கொடுங்கள். அத்தோடு நிறுத்திக்கொள்ளாது ஆத்துமாக்களோடு அந்நியோன்னியமாகப் பழகி அவர்களுடைய ஆத்தும தேவைகளைத் தீர்த்து வைக்க முயலுங்கள். உங்கள் பணி உயர்வானது. அதை உதாசீனப்படுத்தி கர்த்தரின் பெயருக்கு இழிவு உண்டாக்காதீர்கள். நீங்கள் மனந்திரும்பி சத்தியமாக உழைக்க ஆரம்பித்தாலே நம்மினத்தில் ஆத்மீக விடுதலைக்கு வழி ஏற்பட்டுவிடும்.

9. எத்தனையோ தேவைகளுக்காக நாம் ஜெபித்து வந்திருக்கிறோம். நம்மினத்தில் வேதபூர்வமான சபைகள் உருவாகவும், மெய்ப்போதகர்கள் எழவும், சத்தியதாகம் ஏற்படவும் கருத்தோடு ஜெபித்திருக்கிறோமா? போலி கள் மலிந்து சீரழிந்து காணப்படும் கிறிஸ்தவ ஊழியங்கள் கர்த்தரின் நாமத்துக்கு இழுக்கேற்படுத்துகின்றனவே என்ற ஆதங்கத்துடன் கர்த்தரின் நாமம் நம்மினத்தில் மகிமையடைய வேண்டும், வேத வெளிச்சத்தால் ஆத்துமாக்கள் கண்கள் திறக்க வேண்டும் என்று ஏன் நாம் இன்றே ஜெபிக்க ஆரம்பிக்கக் கூடாது. கர்த்தரால் வருவது மட்டுமே மெய்யான எழுப்புதல். கேட்டால் கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கும் கர்த்தர் நாம் கேட்கா மல் இருப்பதை அறியாமலா இருக்கிறார். நம்மினத்தில் வேத சீர்திருத்தம் ஏற்பட நாமனைவரும் விசவாசத்துடன் ஜெபிக்க வேண்டும்.

*10. இதில் உங்கள் பணி என்ன என்று எப்போதாவது சிந்தித்துப் பார்த் திருக்கிறீர்களா? நீங்கள் எத்தனை வருடங்களாக விசுவாசியாக வாழ்ந்து வந்திருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியாது. நீங்கள் முதிர்ந்த விசுவாசி யாக இருக்கலாம். புதுக்கிறிஸ்தவராகக்கூட இருக்கலாம். இருந்தாலும் சத்தியம் வளர நாமெல்லோருமே அந்த உழைப்பில் பங்கேற்க வேண்டும் என்பதை அறிவீர்களா? நீங்கள் போதகராக வரமுடியாமல் போகலாம். இருந்தாலும் திருச்சபையாகிய கட்டிடத்தில் நாமெல்லோருமே கற்களாக இருக்கிறோம் என்பதை மறக்காதீர்கள். நம்மால் முடிந்தவற்றை நாம் சத்திய வளர்ச்சிக்காகவும், திருச்சபை வளர்ச்சிக்காகவும் நாமிருக்கும் இடத்தில் இருந்து செய்யத்தவறக்கூடாது. நம்மினம் சத்திய வாஞ்சையுள்ளவர்களை அறியாது தவிக்கிறது. வெறும் கிறிஸ்தவர்கள் என்று நம்மை அறிவித்துக் கொள்கிறவர்களால் எந்தப் பயனும் இல்லை. அவர்களால் ஒன்றும் ஆகப் போவதுமில்லை. இன்று சத்தியத்துக்காக எதையும் செய்யத் தயாராக இருப்பவர்களே தேவை. சுயநல நோக்கங்கள் இல்லாது, தன்னை வளர்த்துக் கொள்ளும் ஆசையில்லாது, சமுதாயப் படிக்கட்டில் தான் வளர உதவும் ஏணியாக கிறிஸ்தவத்தை எண்ணாது, வேதத்தின் அதிகாரத்தை உணர்ந்து அதற்குக் கட்டுப்பட்டு சத்தியத்துக்காக எல்லாவிதத்திலும் உழைக்கும் இதயங்கள் தேவை. அப்படிப்பட்ட இதயத்தைக் கர்த்தர் உங்களுக்குத் தந்திருந்தால் நிச்சயம் எங்களோடும் பகிர்ந்துகொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம். இணைந்து உழைப்போம். நம்மினத்தில் சத்திய விடிவை நம் தேவன் ஏற்படுத்தட்டும்.*

## ஸ்ரீ லங்காவில் மீண்டும் போர் மேகங்கள்

கடந்த ஜனவரி மாதத்தில் இருந்தே போர் மேகங்கள் கவிந்து ஸ்ரீ லங்காவில் மறுபடியும் தமிழர்களின் வாழ்க்கையில் துயரத்தையும், நிம்மதியின்மையையும் ஏற்படுத்தியிருக்கிறது. பல்லாயிரக்கணக்கானவர்கள் வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். நூற்றுக்கணக்கானோர் பல்வேறு ஆபத்துக்களுக்கு மத்தியில் இந்தியாவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றனர். வீட்டுக்குள்ளேயே சிறையிருந்து தண்ணீரும், உணவும், எரிபொருளும் இல்லாமல் தவிக்கும் நிலை அநேகருக்கு நாட்டின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஏற்பட்டிருக்கிறது. இதனால் திருச்சபைகளும், விசுவாசிகளும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். திருச்சபை ஆராதனையைக்கூட நடத்தமுடியாத நிலை சில இடங்களில் இருந்து வருகிறது. நம்மோடு தொடர்பு வைத்திருக்கும் சகோதரர்களுக்கு நாம் ஆறுதல் கூறி ஜெபித்து வருகிறோம். மனிதனால் முடியாததை செய்யக்கூடியவர் தேவன் ஒருவரே. நெடுங்காலமாக நாட்டைத் துண்டாடி நாசமாக்கி வருகின்ற போர் மேகங்கள் முற்றாக விலகி நாட்டில் கர்த்தரின் சுவிசேஷம் வல்லமையாகப் பிரசங்கிக்கப்பட்டு திருச்சபைகள் உருவாகி வளர ஜெபிக்க வேண்டியது நமது கடமை. கர்த்தர்தாமே துன்பப்படுகிறவர்களுக்கு ஆறுதலளிக்கட்டும். அவர்களுடைய துயரத்தைப் போக்கித் தம் அன்பை அறியச் செய்யட்டும். நீங்களும் இந்நாட்டுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள்.

# நீதிமானாக்குதல்
## (இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கு)

**திரும்பவும் ஒருமுறை . . .**

கர்த்தர் தன்னுடைய கிரிபையின் மூலமாக தன்னால் தெரிந்துகொள் ளப்பட்ட மக்களுக்கு இயேசு கிறிஸ்து மூலம் இரட்சிப்பை அளித்தார். உலகத் தோற்றத்துக்கு முன்பாக திரித்துவ தேவனால் திட்டமிடப்பட்டு வரலாற்றில் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மூலம் நிறைவேற்றப்பட்ட அந்த இரட்சிப்பில் ஒரு படிமுறை ஒழுங்கிருப்பதை வேதபோதனைகளில் இருந்து அறிந்துகொள்ளுகிறோம். இந்தப் படிமுறை ஒழுங்கில் அழைப்பு முதலிடத்தை வகிக்கிறது. அதற்கடுத்தபடியாக மறுபிறப்பும், அதையடுத்து மனமாற்றமும் இந்த ஒழுங்கின் அம்சங்களாகக் காணப்படுகின்றன. தத்துவ ரீதியில் இவற்றை இவ்வாறு ஆராய்ந்து படிக்கும்போது இரட்சிப்பைக் குறித்த ஆழமான அறிவைப் பெற்றுக்கொள்ள முடிகிறது. இந்தப் படிமுறை ஒழுங்கில் காணப்படும் கிருபைகள் எல்லாம் ஒன்று, இரண்டு, மூன்று என்று வரிசைக்கிரமாக நிகழ்வதில்லை. இரட்சிப்பை அடைகின்ற மனித னில் இவையெல்லாம் ஒருசேர நிகழ்கின்றன. இருந்தபோதும் இரட்சிப் பாகிய கிருபையில் இத்தகைய ஒரு தத்துவார்த்த ஒழுங்கு காணப்படுகிற தென்பதையும், அவ்வொழுங்கில் அறிவுபூர்வமான ஒரு படிமுறை காணப் படுகின்றதென்பதையும் புரிந்துகொள்வது அவசியம். இவ்வொழுங்கில் காணப்படும் கிருபை வரிசைகள் இடம்மாறி அமைந்துவிட முடியாது என்பதையும் விளங்கிக்கொள்ள வேண்டும். உதாரணமாக, இந்த வரிசையில் அழைப்புக்கு முன்னால் வேறு எதுவும் இடம்பெற முடியாது. அழைப்பை அடுத்தே மறுபிறப்பு இடம்பெறும்.

கடந்த முறை நாம் இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கில் இடம் பெறும் மனமாற்றத்தைக் குறித்துப் படித்தோம். அதற்கு அடுத்தபடியாக இவ் வொழுங்கில் இடம்பெறுவது நீதிமானாக்குதலாகிய கிருபையாகும். மனமாற்றத்தைக் குறித்துப் படிக்கும்போது அதில் இரண்டு முக்கிய அம்சங்கள் காணப்படுவதை அறிந்தோம். மனந்திரும்புதலும், விசுவாசமுமே (Repentance and Faith) அவை. இவை இரண்டும் எப்போதும் இணைந்தே காணப்படும். அத்தோடு மெய்யான மனமாற்றத்தில் இவை இல்லாமல் இருக்க முடியாது. இவற்றில் விசுவாசத்தைக் குறித்த ஒரு விளக்கத்தை இந்த சந்தர்ப்பத்தில் மறுபடியும் தருவது அவசியமாகிறது. விசுவாசத்தை நாம் மனமாற்றத்தின் கீழ்வரும் ஒரு அம்சமாக, மனந்திரும்புதலோடு இணைந்து வரும் கிருபையாக இதுவரை பார்த்திருக்கிறோம். இந்த விசுவாச மாகிய கிருபையினூடாகவே நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம் என்ப தையும் அறிந்திருக்கிறோம். விசுவாசத்தை நாம் அடைகிறபோதே கர்த்த ருக்கு முன் பாவி நீதிமானாக நிற்க முடிகின்றது. ஆகவே, இனி அடுத்தபடி

யாக இரட்சிப்பின் ஒழுங்கில் நாம் நீதிமானாக்குதலைப் பற்றிப் படிப்பது அவசியமானதாகவும் பொருத்தமானதாகவும் இருக்கிறது.

## நீதிமானாக்குதலைப் பற்றிய போலிப்போதனைகள்

“ஏனைய வேதபோதனைகளைப்போலவே நீதிமானாக்குதலைப் பற்றிய உண்மையும் மனிதர்களால் அதிகம் சிதைத்து திரித்துப் போதிக்கப்பட்டிருக் கிறது” என்று பேராசிரியர் ஜோண் மரே கூறியிருக்கிறார். “இந்த வார்த்தை யின் பொருளை சரியாக விளங்கிக் கொள்ளாததே பெருமளவான போலி விளக்கங்களுக்கு காரணமாக இருந்திருக்கின்றது” என்றும் அவர் கூறியுள் ளார். ஒரு மனிதன் நீதிமானாகின்றபோது அவன் தன்னில் பரிசுத்தத்தை அதன் மூலம் அடைவதில்லை. கிறிஸ்துவின் மீட்பின் பலன்களைத் அடை கிறபோதே ஒரு மனிதன் பரிசுத்தவானாகின்றான். மறுபிறப்பின் மூலமாக கர்த்தர் அவனைத் தன்னுடைய சாயலைக் கொண்டவனாக மறுரூபமாக்கி பரிசுத்தமாக்குதலின் மூலம் தொடர்ந்து அவன் தன் சாயலில் பரிசுத்தத் தோடு வளரும்படிச் செய்கிறார். மகிமையை அடையும்போதே இது கிறிஸ்த வனில் நிறைவு பெறுகிறது. ஆனால், நீதிமானாக்குதல் கிருபையின் மூலமாக ஒரு மனிதன் மறுரூபமடைவதையும், பரிசுத்தமாக்கப்படுவதையும் பற்றி விளக்குகிற கோட்பாடல்ல. இதைப் புரிந்துகொள்ளாததினாலேயே சபை வரலாற்றில் இப்போதனை பல ஆபத்துகளுக்கு உள்ளாகியிருந்திருக்கிறது.

## ரோமன் கத்தோலிக்க மதம்

ரோமன் கத்தோலிக்க மதம் இதன் பொருளை சிதைத்து நீதிமானாக்குதலின் மூலம் நீதி ஒரு மனிதனுக்குள் புகுத்தப்படுவதாக தொடர்ந்தும் போதித்து வருகிறது. ஊசியின் மூலம் ஒருவரின் உடலுக்குள் மருந்தை செலுத்துவதைப் போல நீதி மனிதனுக்கு இதன் மூலம் கொடுக்கப்படுகிறது என்கிறது கத்தோலிக்க மதம். அதுவும், மனிதன் நீதியை கத்தோலிக்க மதமளிக்கும் ஞானஸ்நானத்தின் மூலமும், கத்தோலிக்க மதம் எதிர்பார்க்கும் அநேக சடங்குகளையும், கிரியைகளையும் தன் வாழ்வில் பின்பற்றி நிறைவேற்றுவதன் மூலமுமே அடைகிறான் என்று போதிக்கிறது. ஆனால் மறுபிறப்பு, பரிசுத்தமாக்குதல் ஆகிய கிருபைகளின் மூலம் மட்டுமே மனிதன் கர்த்தருக்குள் மறுரூபமடைகிறான் என்கிறது வேதம்.

மனிதன் கர்த்தருக்கு முன் அவரால் நீதிமானாக அறிக்கையிடப் படுகிறதாகிய கிருபையும் (Justification-Declaration), அவர் மனிதனை மறு ரூபமாக்குகின்ற கிருபையும் (Renewal-Regeneration) இருவேறான கிரியை கள் என்பதை கத்தோலிக்க மதம் விளங்கிக்கொள்ளத் தவறிவிட்டது. இத னாலேயே சுவிசேஷத்தின் மூலம் நீதிமானாக்குதலை மனிதன் அறிந்து கொள்ளும்படி செய்யாமல் தானே மனிதனை சடங்குகளின் மூலமும், கிரியைகளின் மூலமும் நீதிமானாக்குகிற செயலை அது செய்ய ஆரம்பித் தது. கர்த்தரிடம் இருந்து இலவசமாக முழுமையாக நீதிமானாக அறிவிக் கப்படுகிற கிருபையை மனிதன் அடைய முடியும் என்ற உண்மையை அது சுவிசேஷத்தில் இருந்து சிதைத்து விடுகிறது. இதனாலேயே முன்னாள் மதகுருவாக இருந்த மார்டின் லூதர் தன்னில் பாவத்தை உணர்ந்து அதிலி ருந்து விடுபடுவதற்கான வழிகளை நாடியபோது கத்தோலிக்க மதத்தால்

அவருக்கு உதவ முடியவில்லை. அதன் சுவிசேஷத்தில் அதற்கு வழியிருக்க வில்லை. “நீ, மதகுருவாக இருப்பதால் ஏற்கனவே நீ எங்களால் நீதிமானாக் கப்பட்டிருக்கிறாய்” என்று கூறி அவரைத் தொடர்ந்து கிரியைகளையும், சடங்குகளையும் செய்து பாவத்தைப் போக்கிக்கொள்ளும்படி சொல்ல மட்டுமே அதனால் முடிந்தது. இதனாலேயே சத்திய வேதத்தை ஆராய்ந்து படித்து கத்தோலிக்க மதத்தின் போலித்தனத்தை லூதர் உணர்ந்ததோடு, வேதம் போதிக்கின்ற மெய்ச்சுவிசேஷத்தின் மூலம் இயேசு கிறிஸ்து மட்டுமே மெய்யான மத்தியஸ்தர் என்பதை அறிந்து அவரை விசுவாசித்து தன் பாவங்களிலிருந்து விடுதலை பெற்றார்; இரட்சிப்பையும் அடைந்தார்.

### பவுலின் போதனைகளுக்கு புதிய விளக்கங்கள்

ரோமன் கத்தோலிக்க மதம் மட்டுமல்லாமல் வேறு சிலரும் நீதிமானாக் குதலைப் பற்றிய வேத விளக்கங்களுக்குப் புறம்பான விளக்கங்களைத் தந்து வந்திருக்கிறார்கள். கிறிஸ்துவின் மீட்பின் செயலின் அடிப்படையில் கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் கர்த்தரால் நீதிமான்களாக அறிக்கையிடப் படுகிறார்கள் என்பதை நிராகரித்து, அது வெறும் அறிவிப்பு மட்டுமல்ல, அதில் நற்கிரியைக்கும் வழி இருக்கிறது; நற்கிரியைகளை மனிதன் செய்யக் கூடியதான அநுபவத்தை நீதிமானாக்குதல் அளிக்கிறது என்று இவர்கள் விளக்கம் தருகிறார்கள். இது தவறான விளக்கம். விசுவாசிகள் நற்கிரியை களைச் செய்யும் வாழ்க்கையை இரட்சிப்பாகிய அநுபவத்தின் மூலம் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை சுவிசேஷக் கிறிஸ்தவம் ஆணித் தரமாக விளக்குகிறது. விசுவாசி தன் வாழ்க்கையில் நற்கிரியை செய்வதற்கு காரணமாக இருப்பது மறுபிறப்பும், பரிசுத்தமாக்குதலாகிய அநுபவங்களே தவிர நீதிமானாக்குதலல்ல. ஆனால், அதை நீதிமானாக்குதலோடு தொடர்புபடுத்துவதுதான் இவர்களுடைய பெருந்தவறு. நீதிமானாக்குதலை கர்த்தரிடும் அறிக்கையாகவும், மனந்திரும்பும் பாவி விசுவாசத்தினால் அவ்வாறாக கர்த்தரால் எண்ணப்படுகிறான் என்றும் வேதம் போதிக்க, அதை விசுவாசியடையும் ஆத்மீக அநுபவமாக இவர்கள் விளக்குவது ரோமன் கத்தோலிக்க போதனையோடு ஒத்துப்போவதாக இருக்கிறது.

இன்று சுவிசேஷ இயக்கத்தைச் சேர்ந்த பிரபலமான சிலர் நீதிமானாக் குதலுக்கு புதிய விளக்கமொன்றைத் தந்து திருச்சபையும், விசுவாச அறிக்கை களும் இதுவரை தந்துவந்துள்ள விளக்கங்களை நிராகரிக்கிறார்கள். இந்தத் தவறான விளக்கங்களை நிராகரித்து ஒரு டஜனுக்கும் மேற்பட்ட நல்ல நூல்கள் ஆங்கிலத்தில் வெளிவந்திருக்கின்றன. இந்தப் போலிப் போதனைக் கெதிராக சீர்திருத்தவாதத்தைப் பின்பற்றுகிறவர்கள் இன்று பிரசங்கத்தின் மூலமும், எழுத்தின் மூலமும் போராடி வருகிறார்கள். கர்த்தரின் மக்களை யும், திருச்சபையையும் பாதிக்கும் எந்தத் தவறான வேதவிளக்கங்களையும் அம்பலப்படுத்தி கர்த்தரின் மக்கள் வேதத்தை மட்டுமே சார்ந்து நிற்கும் படியாகச் செய்வது வேதபூர்வமான பக்தியொழுக்கமுள்ள இறையியல் அறிஞர்களுடையதும், போதகர்களினுடையதும் கடமை. அதையே இவர் கள் செய்ய முயல்கிறார்கள்.

இந்தப் புதிய போதனைகளை தந்து வருகிறவர்கள் Danile Fuller, D. G.

Dunn, E. P. Sanders, Norman Shepherd மற்றும் Don Garlington ஆகியோர். இவர்களுடைய போதனைகள் New Perspectives on Paul என்றும் Covenantal Nomism, Federal Vision, New Perspectives on Paul, Auburn Avenue Theology என்று வேறு பல பெயர்களிலும் அழைக்கப்படுகின்றன. இவர்களுடைய நூல்கள் எல்லா மொழிகளிலும் மொழிபெயர்க்கப்படாமல் போனாலும் எப்படியாவது, எவர் மூலமாவது இவர்களுடைய போதனைகள் தமிழினத்துக் கிறிஸ்தவர்கள் மத்தியிலும் நுழைந்துவிட வாய்ப்பிருப்பதால் இப்பெயர்களை அறிந்துவைத்திருப்பது நல்லதே. முக்கியமாக எந்தப் போலிப் போதனையும் கீழைத்தேய நாடுகளிலுள்ள இறையியல் கல்லூரிகளில் ஏதாவதொருவகையில் முதலில் புகுந்துவிடுவது வழக்கமாக இருந்து வருகிறது. இப்படியான போலிப் போதனைகள் முதலில் அங்கு படிக்க வருகிறவர்களை பாதித்து பின்பு அவர்கள் மூலமாக சபைகளையும், மக்களையும் கெடுத்துவிடுகின்றன.

இந்தப் புதிய போதனை இதுவரை திருச்சபையும், வரலாற்றில் எழுந்துள்ள அத்தனை விசுவாச அறிக்கைகளும் நீதிமானாக்குதலுக்கு தந்து வந்திருக்கின்ற விளக்கங்களை நிராகரித்து, பவுல் இதுபற்றி புதிய ஏற்பாட்டில் தந்திருக்கின்ற போதனைகளை திருச்சபை விளங்கிக்கொள்ளத் தவறிவிட்டதாகக் கூறுகிறார்கள். மனந்திரும்புகிற பாவியைக் கிறிஸ்து தன்னுடைய மக்களுக்காகப் பெற்றெடுத்துள்ள பூரண நீதியின் அடிப்படையில் நீதிமானாகக் கர்த்தர் அறிக்கையிடுவதாக மட்டும் (Declarative act) நீதிமானாக்குதலை விளக்குவது தவறு என்கிறார்கள் இவர்கள். விசுவாசத்திற்குள் கிரியையும் நுழைத்து கிரியையில்லாத விசுவாசமில்லை என்றும் கூறுகிறார்கள். அத்தோடு நீதிமானாக்குதல் அதைப் பெற்றுக்கொண்ட ஒருவரைப் பற்றிய கர்த்தரின் அறிவிப்பாக இல்லாமல் அவர் கர்த்தரின் குடும்பத்தில் அங்கத்தவராக இருக்கிறார் என்பதற்கான முத்திரை என்று டொன் கார்லிங்டன் விளக்குகிறார். இவர் விசுவாசி கர்த்தரால் நீதிமானாக எண்ணப்படுகிறான் (Imputed Justification) என்ற போதனையை நிராகரிக்கிறார். வேதமும் யாக்கோபும் விசுவாசத்தையும், கிரியையையும் ஒன்றாகப் பார்க்கவில்லை; விளக்கவில்லை. விசுவாசத்திற்குள் கிரியையை நுழைக்கும்போது ரோமன் கத்தோலிக்க போதனை தலையெடுத்து விடுகிறது. சுவிசேஷத்துக்கு ஆபத்தேற்பட்டு விடுகிறது. டொன் கார்லிங்டனும், அவரைப் போலப் போதிக்கும் ஏனையோரின் விளக்கங்களும் நீதிமானாக்குதலைப் பற்றிய சீர்திருத்தவாத போதனைகளை முழுவதுமாக நிராகரிப்பதோடு ரோமன் கத்தோலிக்க போதனையையும் ஒத்தமைந்திருக்கின்றன. அதாவது கிறிஸ்து சிலுவையில் மரித்து பெற்றெடுத்த பூரணமான நீதியை (Perfect Righteousness) விளக்குவதாக மட்டுமே திருச்சபை இதுவரை நம்பி வந்திருக்கிற வேதபோதனையான நீதிமானாக்குதலை வேறுவிதத்தில் விளக்கி நீதிமானாக்குதலின் அடிப்படைக் கோட்பாட்டை சிதைத்து, இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்கு ஆபத்தை ஏற்படுத்துகிறார்கள். நீதிமானாக்குதலாகிய கோட்பாடு உண்மையில் எதை விளக்குகிறது என்று வேதத்தை நாம் ஆராய்ந்து பார்க்கும்போது ரோமன் கத்தோலிக்க மதப் போதனையையும், அதையொத்துக் காணப்படுகின்ற ஏனைய போலிப்போதனைகளையும்

*தோலுரித்துப் பார்த்துவிட முடியும்.*

## வேதம் போதிக்கும் நீதிமானாக்குதல்

*நீதிமானாக்குதலைப் பற்றி ஜுலை-செப்டெம்பர் 2004 இதழில் இரண்டு தலைப்புகளில் தெளிவாக விளக்கியிருக்கிறோம். அதில் ஒன்று "நீதிமானாக்கும் விசுவாசம்" அடுத்தது "விசுவாசத்தினால் நீதிமானாக்குதல் – பவுலும், யாக்கோபுவும்" என்பதாகும். இந்த இரண்டு ஆக்கங்களில் சொல்லப்பட்டவற்றை திரும்பவும் இங்கே தராமல் இந்த ஆக்கத்திற்கு அவசியமான விளக்கங்களை மட்டும் தரமுயற்சிக்கிறேன்.*

*(1)* ***நம்மை நீதிமானாக்குகிறவர் கிறிஸ்து மட்டுமே.*** *– நாம் கர்த்தரால் நீதிமானாகக் கருதப்படும்படியாக, நாம் செய்த பாவங்களிலிருந்து நாம் விடுதலை அடையும்படியாக நமக்காக சிலுவையில் மரித்ததன் மூலம் இயேசு கிறிஸ்து கர்த்தரின் கட்டளைகளைப் பூரணமாக தன் வாழ்க்கையில் நிறைவேற்றி நீதியை சம்பாதித்தார். நீதிமானாகிய கிறிஸ்து நமது பாவத்தைத் தன்மேல் சுமந்து நாம் பாவநிவாரணம் அடைந்து கர்த்தரால் நீதிமானாக அறிவிக்கப்படுவதற்கு வழிகோளினார். ஆகவே, கிறிஸ்துவே நமக்காக நீதியை நிறைவேற்றினார். இயேசு கிறிஸ்து முழுமையாக நமக்காக நீதியை நிறைவேற்றியிருப்பதால் இனி நாமோ, வேறு எவருமோ அதற்காக செய்ய வேண்டியது இனி எதுவுமேயில்லை. மனித குமாரனான கிறிஸ்து மட்டுமே நமக்காக பூரணமாக நீதியை நிறைவேற்றியிருக்க முடியும். இது தெரியாமல் கத்தோலிக்க மதம் மனிதர்கள் தொடர்ந்து தங்களுடைய சொந்தக் கிரியை களின் மூலம் நீதியை சம்பாதித்துக்கொள்ள தூண்டிக்கொண்டிருக்கிறது.*

*(2)* ***கிறிஸ்துவின் நீதியின் அடிப்பையில் நம்மை நீதிமான்களாகக் கருதுவதாக கர்த்தர் தன்னுடைய நியாயஸ்தலத்தில் அறிவிக்கும் அறிவிப்பே நீதிமானாக்குதலாகிய போதனை.*** *– நீதிமானாக்குதலை நாம் 'கோர்ட்' நடவடிக்கையாக* (It is a forensic imputed righteousness) *விளங்கிக்கொள்ள வேண்டும். சீர்திருத்த இறையியல் அறிஞர் ஜோண் மரே இதை விளக்கும் போது, "கர்த்தர் நம்மில் செய்கின்ற கிரியை மறுபிறப்பு; நம்மைப் பற்றி நியாயஸ்தலத்தில் கர்த்தர் வழங்குகிற தீர்ப்பு நீதிமானாக்குதல்" என்கிறார். அவர் தொடர்ந்து, "இதை ஒரு மருத்துவரின் வேலைக்கும், நியாயாதிபதியின் வேலைக்குமிடையிலுள்ள வேறுபாட்டின் மூலம் புரிந்துகொள்ள வேண்டும். நமக்குள் கென்சர் நோய்* (Cancer) *இருந்தால் மருத்துவர் நமது சரீரத்தை அறுத்து அதைத் தீர்க்க முயல்வார். ஆனால், நியாயாதிபதி அந்தமுறையில் செயல்படுவதில்லை. அவர் நம்முடைய சட்டரீதியான நிலைமையைப் பற்றிய ஒரு தீர்ப்பை மட்டுமே வழங்குவார். நாம் குற்றமற்றவர்களாக இருந் தால் குற்றமற்றவர்கள் என்று தீர்ப்பு வழங்குவார்" என்கிறார். நீதிமானாக்கு தலை மறுபிறப்போடும், பரிசுத்தமாக்குதலோடும் தொடர்புபடுத்திக் குழம்பக் கூடாது. அப்படிச் செய்வது நீதிமானாக்குதலாகிய கோட்பாட் டிற்கு ஆபத்தை ஏற்படுத்தும். நீதிமானாக்குதலின் மையமாக சுவிசேஷம் அமைந்திருப்பதால் இந்த ஆபத்திற்கு இடந்தரக்கூடாது.*

*கர்த்தருடைய நியாயஸ்தலத்தில் இயேசு நமது பாவங்களையும், தேவ கோபத்தையும் தம்மேல் ஏற்று தம்மைப் பலியாக ஒப்புக்கொடுக்கத் தீர்மா*

னித்ததன் அடிப்படையில் கிறிஸ்துவை விசுவாசிக்கிற அவருடைய மக்களுக்கு விடுதலையளித்து அவர்களை நீதிமான்களாக அறிக்கை செய்தார் கர்த்தர். இந்த தேவ நியாயஸ்தலத் தீர்மானத்தின்படி கிறிஸ்து இந்த உலகில் பிறந்து தன்னுடைய மக்களுக்காக சிலுவையில் தன்னைப் பலியாகக் கொடுத்தார். இதையே ரோமர் 4 வது அதிகாரம் விளக்குகிறது. கிறிஸ்துவின் சிலுவைப் பலியின் அடிப்படையில் அவரை விசுவாசிக்கிற நம்மைக் கர்த்தர் நீதிமான்களாக அறிக்கையிட்டு (Declares) நீதிமான்களாக எண்ணு கிறார் (Accounted). அதாவது, கிறிஸ்துவை நாம் விசுவாசிக்கின்றபோது கிறிஸ்துவின் நீதி நம்முடையதாக எண்ணப்பட்டு நம்முடைய கணக்கில் வைக்கப்படுகிறது. கிறிஸ்துவுக்குள் நாம் நீதிமான்களாகக் கர்த்தரால் கருதப்படுகிறோமே தவிர கத்தோலிக்க மதம் போதிப்பது போல் கிறிஸ்து வின் நீதி நமக்குள் எந்தவிதத்திலும் புகுத்தப்படுவதில்லை (Not infused into us). வேதம் போதிக்கும் தேவனுடைய இந்த நியாயஸ்தல நடவடிக்கையை வேறுவிதத்தில் புரிந்துகொள்ளவோ, விளக்கவோ கூடாது. இந்தத் தவறையே பவுலின் போதனைகளுக்கு புது விளக்கங்கொடுக்கும் சேன்டர்ஸ், நோமர்ன் செப்பர்ட், டொான் கார்லிங்டன் போன்றோர் செய் கிறார்கள்.

**(3) நீதிமானாக்குதலுக்கு அடித்தளம் கர்த்தரின் இலவசமான கிருபை மட்டுமே** – நீதிமானாக்குதலில் நம்முடைய பங்குக்கு இடமேயில்லை. அது கிறிஸ்துவாலேயே பூரணமாக நிறைவேற்றப்பட்டது. விசுவாசிகள் அதை இலவசமாக விசுவாசத்தின் மூலம் கர்த்தரிடமிருந்து பெற்றுக் கொள்ளுகிறார்கள். இதுவே வேதமும், சீர்திருத்தவாதமும் போதிக்கும் சத்தியம். ரோமன் கத்தோலிக்க மதம் இதில் கர்த்தர் பாதி, மனிதன் பாதிப் பங்கு வகிப்பதாக விளக்குகிறது. அதாவது, மனிதன் தன்னுடைய சொந்தக் கிரியைகளின் மூலம் அடைகின்ற நீதியையும் பயன்படுத்தியே கர்த்தர் அவனை நீதிமானாக்குகிறார் என்கிறது கத்தோலிக்க மதம். அதற்கெதிராக சீர்திருத்தவாதம், கிறிஸ்துவால் நிறைவேற்றப்பட்ட நீதிமானாக்குதல் மனிதனுக்கு இலவசமாக கர்த்தரால் தரப்படுகின்றது என்றும், மனிதனில் சொந்தமாக எந்த நீதியும் காணப்படவில்லை என்றும் போதிக்கின்றது.

இதன் காரணமாக நீதிமானாக்குதலைப் பொறுத்தவரையில் சீர்திருத்தவாதம் நியாயப்பிரமாணத்தையும், சுவிசேஷத்தையும் பிரித்து விளக்குகிறது. தன்னுடைய சாயலில் இருக்கும் மனிதன் பின்பற்றும்படியாக கர்த்தர் நியாயமாக எதிர்பார்க்கும் கட்டளைகளை உள்ளடக்கியதே நியாயப்பிரமாணம். யூதரோ புறஜாதியினரோ அதைப்பின்பற்ற முடியாத படி பாவத்தை சுமந்து நிற்கிறார்கள். கர்த்தருடைய பரிபூரணமான நியாயப் பிரமாணத்தின் முன் எல்லா மனிதர்களுமே குற்றவாளிகளாக நியாயத் தீர்ப்பையும், தண்டனையையும் எதிர்பார்த்து நிற்கிறார்கள். நியாயப்பிர மாணம் பூரணமானதாக இருப்பதால் அதைப் பின்பற்றக்கூடிய ஒருவனும் இல்லை. மனிதனால் செய்யமுடியாததையே நியாயப்பிரமாணம் அவனிடம் இருந்து எதிர்பார்க்கிறது. ஆகவே, நியாயப்பிரமாணத்தைத் தன் வாழ்க்கையில் கைக்கொள்ளுவதன் ஒருவருமே கர்த்தருக்கு முன் நீதிமா னாக முடியாது.

*ஆகவேதான், கர்த்தர் தன்னுடைய குமாரனை அனுப்பி நியாயப்பிர மாணத்தைப் பூரணமாகக் கடைப்பிடிக்கச் செய்து, அவருடைய சிலுவைப் பலியின் மூலம் மனிதனின் பாவத்தைச் சுமக்கச் செய்து நீதியைச் சம்பாதித்து மனிதன் நீதிமானாவதற்கான வழியை ஏற்படுத்தினார். இந்த நல்ல செய்தியை அறிவிப்பதே கிறிஸ்துவின் சுவிசேஷம். நியாயப்பிரமாணம் செய்யமுடியாததைக் கிறிஸ்துவின் சுவிசேஷம் மட்டுமே மனிதனுக்கு தருகிறது. கிறிஸ்து பெற்றெடுத்த நீதியின் அடிப்படையில் அவரை விசுவாசிக்கிற மனிதனைக் கர்த்தர் இலவசமாக நீதிமானாகக் கருதி அறிவிக் கிறார். இதுவே வேதம் போதிக்கும் நீதிமானாக்குதலாகிய கோட்பாடு.*

*(4)* ***விசுவாசத்தின் மூலமாக நாம் நீதிமான்களாக அறிக்கை யிடப்படுகிறோம்*** *– விசுவாசம் நமக்கு இரட்சிப்பை அளிக்கும் கிருபையின் சாதனம், கர்த்தர் நமக்களிக்கும் ஈவு, ஒரு கருவி. கல்வின் இதை ஒரு வெறும் பாத்திரம் என்கிறார். அதன் மூலம் இந்த வெறும் பாத்திரம் தானாக எதையும் செய்யாது, கர்த்தர் தருகின்ற அத்தனையையும் பெற்றுக்கொள்கிறது என்று விளக்குகிறார். லூதர் விசுவாசத்தை இரத்தினக்கல்லை சுமந்திருக்கும் ஒரு மோதிரத்துக்கு ஒப்பிடுகிறார். விசுவாசத்தில் உண்மையில் ஒன்றுமே இல்லை; அது இரத்தினக்கல்லாகிய கிறிஸ்துவையும் அவரது நீதியையும் தாங்கி உயர்வடைகிறது என்கிறார். விசுவாசமாகிய கரத்தின் மூலம் நாம் இரட்சிப்பை அடைந்து கிறிஸ்துவின் பூரண நீதியின் பலன்களை அடைகிறோம் என்கிறது வேதம். இந்த விசுவாசத்தால் மட்டுமே நாம் நீதிமானாக முடியும். வேறு எதனாலும் அது நமக்குக் கிடைக்காது. இது கர்த்தரின் நியதி. இந்த விசுவாசத்தில் கிரியைக்கு எந்த இடமும் இல்லை. இதற்குள் கிரியையை நுழைத்து விளக்கும் வேலையையே யூதப் பரிசேயர்களும், ரோமன் கத்தோலிக்க மதமும், இன்று நீதிமானாக்குதலுக்கு புது விளக்கம் கொடுத்துவரும் சேன்டர்ஸ். நோர்மன் செப்பர்ட், டொான் கார்லிங்டன் போன்றோரும் செய்து வருகிறார்கள். விசுவாசமாகிய வெறும் பாத்திரத்தின் மூலமாக கர்த்தர் இலவசமாகத் தரும் நீதிமானாக்குதலை அடைகிறபோது விசுவாசிகள் தங்களில் தங்கியிராமல் நீதிமானாக்குதலுக்கு காரணமான கிறிஸ்துவையே நோக்கி அவரில் தங்கியிருக்கிறார்கள். கர்த்தர் விசுவாசிகளுக்கு அளிப்பதை முழுமனதோடு நம்பிப் பெற்றுக்கொள்ளுகிற நடவடிக்கையே விசுவாசம்.*

ஜூலை - செப்டெம்பர், 2004 திருமறைத்தீபம் காலாண்டிதழில் "நீதிமானாக்குதல்" பற்றி எழுதப்பட்டுள்ள இரண்டு ஆக்கங்கள் வெளிவந்திருக் கின்றன. அந்த இதழ் கிடைக்காதவர்கள் எங்களுக்கு எழுதினால் அதை அனுப்பிவைப்போம். இந்த இதழில் வந்துள்ள ஆக்கத்தோடு சேர்த்து அந்த ஆக்கங்களையும் வாசித்தால் நீதிமானாக்குதல் கோட்பாடு பற்றிய முழுமையான போதனையைப் பெற்றுக்கொள்ளலாம். - ஆசிரியர்.

# கிறிஸ்துவின் வழியில் திருச்சபை ஊழியம் - 5

கிறிஸ்து போதிக்கும் திருச்சபை ஊழியத்தை வேதத்திலிருந்து ஆராய்ந்து வருகிறோம். இதில் மூன்றாவது தலைப்பான **சுவிசேஷ ஊழியத்தில் திருச்சபையே அதிமுக்கியமானதும், அடிப்படை யானதுமான இடத்தை வகிக்கிறது. சுவிசேஷ ஊழியங்கள் எப்போதும் திருச்சபையில் ஆரம்பித்து திருச்சபை அமைப்பதிலேயே போய் முடிய வேண்டும்** என்பதை ஏப்ரல்-ஜூன் 2006 காலாண்டு இதழில் விளக்க ஆரம்பித்தோம். அவ்விதழில் கர்த்தருடைய திருச்சபையின் மகிமை புதிய ஏற்பாட்டில் விளக்கப்பட்டிருக்கும் விதத்தை ஆராய்ந்தோம். கர்த்தருடைய ஊழியங்கள் அனைத்தும் அவருடைய திருச்சபையினூடாக நடைபெற வேண்டியது எந்தளவுக்கு முக்கியமென்பதை உணர்வதற்கு அவருடைய திருச்சபையின் மகிமையைப் பற்றிய வேத அறிவு அவசியம். நாம் வாழ்கிற இக்காலப்பகுதியில் கர்த்தருடைய திருச்சபை பற்றிய அறிவு விசுவாசிகள் மத்தியில் அருகிக் காணப்படுகின்றது. திருச்சபை பற்றிய அறிவில்லாததால் அதில் வாஞ்சையின்றி கிறிஸ்தவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். திருச்சபை பற்றிய உணர்வில்லாமல் புற்றீசல்போல் அதிகரித்து கிறிஸ்தவ ஊழியங்களில் ஈடுபட்டிருப்பவர்கள் தொகை நம்மத்தியில் எண்ணி மாளாது. திருச்சபைக்கும் கிறிஸ்தவத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்ற எண்ணப்போக்கில் அநேகர் கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்ந்து வருகிறார்கள். தமிழ் மக்கள் மத்தியில் கிறிஸ்தவம் இன்றைக்கு திருச்சபையில் இருந்து முற்றாகப் பிரிக்கப்பட்டு எங்கோ போய்க்கொண்டிருக்கிறது. இதன் காரணமாகவே கடந்த இதழில் வேதம் திருச்சபையின் மகிமையைப் பற்றி எந்தளவுக்கு ஆணித்தரமாக விளக்குகிறது என்று பார்த்தோம்

இனித் திருச்சபையைப் பற்றி அந்த ஆக்கத்தோடு தொடர்புடைய வேதம் போதிக்கும் சில முக்கியமான உண்மைகளை இந்த இதழில் பார்ப்போம்.

## இயேசு திருச்சபையைக் கட்ட இந்த உலகத்துக்கு வந்தார்

மத்தேயு 16:18 வசனத்தில் இயேசு "என் சபையைக் கட்டுவேன்" என்று ஆணித்தரமாகக் கூறியிருக்கிறார். இந்த வார்த்தைகளின் மூலம் இயேசு தரும் விளக்கத்தை விளங்கிக்கொள்ளுவது அவசியம். இங்கே அவர் "சபை" (Ekklesia) என்று பயன்படுத்திய வார்த்தையே மத்தேயு 18:17 வசனத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதே வார்த்தையைப் புதிய ஏற்பாட்டின் ஏனைய நூல்களிலும் காணலாம். இந்த வார்த்தை புதிய ஏற்பாட்டில் 117 தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை உள்ளூர் சபைகளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மத்தேயு 16:18; 18:17 ஆகிய வசனங்களில் இந்த வார்த்தை உள்ளூர் சபைகளை மட்டும் கருத்தில்கொள்ளாமல் உலக முழுவதுமுள்ள உலகளாவிய சபையைக்

குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதாவது, இயேசு இந்த உலகத்தில் ஓர் இடத்தில் மட்டும் சபையைக் கட்டி எழுப்புவதற்காக வராமல் உலக முழுவதும் எல்லாப் பகுதிகளிலும் ஜாதி, இன வேறுபாடின்றி ஆத்துமாக் களைக்கூட்டி தன்னுடைய சபையைக் கட்ட வந்தார் என்பது இதற்குப் பொருள்.

சிலர் உலகளாவிய சபையை (Universal Church) வெறும் ஆத்துமாக்களின் கூட்டமாக மட்டும் விளக்கி அது ஏதோ கண்களுக்குப் புலப்படாத (Invisible) சபை என்பது போல் கருதி வருகிறார்கள். இது மிகவும் தவறான எண்ணம். ஆத்துமாக்களை நாம் எப்போதுமே உலகத்தில் கண்களால் காணமுடியும். உள்ளூர் சபையை ஓரிடத்தில் காணமுடிவதுபோல், உலகளாவிய சபையையும் நாம் உலகெங்கும் கண்களால் பார்க்க முடியும். பவுல், "தேவனுடைய சபையை நான் மிகவும் துன்பப்படுத்தினேன்" என்று (கலா. 1:13, பிலிப். 3:16) கூறியபோது ஒரு சபையை மட்டும் மனதில் வைத்து பவுல் அதைச் சொல்லவில்லை. கண்களால் காணமுடியாத ஆத்துமாக் களை பவுல் துன்பப்படுத்தியிருக்க முடியாது. உலகளாவிய சபைகள் அனைத்தையும் ஓரிடத்தில் சேர்ப்பது முடியாத காரியம் என்றாலும், அவற்றை நாம் உலகில் ஒவ்வொரிடத்திலும் பார்க்க முடியும். உலகெங்கும் அது கூடி இயேசுவின் பிரசன்னத்தை அறிந்து ஆராதிக்கிறது. அந்த உலகளாவிய சபைக்கு அதிகாரம் இருக்கிறது; அதற்கு சபைத் தலைவர்கள் இருக்கிறார்கள்; அதற்கு அமைப்பிருக்கிறது; நிர்வாகமும் இருக்கிறது. அது வெளிப்படையாக நாம் கண்களால் பார்க்கக்கூடிய சபை. கண்களால் காண முடியாத சபை என்று ஒன்றில்லை. (There is no such a thing as an invisible church). கர்த்தருடைய ஆவியின் இரட்சிப்புக்குரிய கிரியைகளின் அடிப்படையில் கண்களால் பார்க்கமுடியாத சில ஆவியின் கிரியைகள் ஆத்துமாக்களில் நிகழ்கின்றபோதும் (அழைப்பு, மறுபிறப்பு ஆகியவை), திருச்சபையைப் பற்றி விளக்கும்போதும் அதில் கண்களால் காணமுடியாத அம்சங்கள் எதுவும் இல்லை என்பதை உணர்வது அவசியம். "சபை" என்ற புதிய ஏற்பாட்டுப் பதம், "கர்த்தரால் அழைக்கப்பட்டு கூடிவருகிறவர்கள்" என்ற தெளிவான அர்த்தத்தைக் கொண்டிருப்பதால் உலகளாவிய சபை எப்போதும் நாம் கண்களால் பார்க்கக் கூடியதாகத்தான் இருக்கும்.

இவ்வாறாக இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் விசுவாசிகளைக் கூட்டி சபை அமைப்பும், நிர்வாகமும், சபைத்தலைவர்களுமுள்ள தன்னுடைய திருச்சபையைக்கட்ட வந்தார். "சபை" (Church-Ekklesia) என்ற வார்த்தையே தெளிவாக புதிய ஏற்பாடெங்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஓரிரு வசதி மிக்க தலைவர்களைக் கொண்டுள்ள IEM, BYM, FMPF, விஸ்வவானி போன்ற ஸ்தாபனங்களையோ (para-church organizations), பிரசிடென்ட், வைஸ்பிரசிடென்ட் என்று பெயர் சூட்டிக்கொண்டு இயங்கும் தனிநபர் ஊழியங்களையோ, கணவன், மனைவி, மகன், மருமகள் ஆகியோரை மட்டும் கொண்டு நடத்தப்படும் குடும்ப ஊழிய வியாபாரத்தையோ, சமய சமரச பைபிள் காலேஜுகளையோ, சபையால் அனுப்பப்படாமல் தன்னிச் சையாக தனக்குத்தானே இராஜாவாக ஊர் ஊராகப் போய்க் கூட்டங் களில் பேசி பணம் வாங்கிவரும் நபர்களை உருவாக்கவோ இயேசு கிறிஸ்து

இந்த உலகத்துக்கு வரவில்லை. இயேசு நேசிப்பது இவற்றையல்ல, தன்னு டைய சபையை; அவர் தன்னுடைய இரத்தத்தைப் பலியாகச் செலுத்தி சம்பாதித்தது இவற்றையல்ல, தான் நேசிக்கும் தன்னுடைய சபையை. இயேசு தன் மனைவியாகிய சபையைக் கட்ட வந்தார் (எபேசி. 5:25); தேவனின் குடியிருப்பாகிய வீட்டைக் கட்ட வந்தார் (1 தீமோ. 3:15); தன் சரீரமாகிய சபையைக் கட்ட வந்தார் (1 கொரி. 12): பரிசுத்த ஆவியின் ஆலயமாகிய சபையைக் கட்ட வந்தார் (2 கொரி. 6:16) என்கிறது வேதம்.

கிறிஸ்தவ "ஊழியங்களை" எல்லாம் சபைகளாகக் கருத முடியாது; அவற் றில் சபையில் மட்டுமே நாம் பார்க்கக்கூடிய சபைக்குரிய இலக்கணங்கள் இல்லை. குரங்கை நாம் ஒருபோதும் மனிதனாக நினைப்பதில்லை, அதற்கு ஒருவித மனித தோற்றம் இருக்கிறதே என்பதற்காக அதை நாம் மனிதன் என்று அழைப்பதில்லை; மனிதனாக நடத்துவதுமில்லை. அதேபோல்தான் ஊழியங்களும். இன்று திருச்சபை பற்றிய சத்திய வேதத்தின் அடிப்படைப் போதனைகளை நமது இனம் அறியாமல் இருப்பதால் திருச்சபை மேல் இயேசுவுக்கு இருக்கும் வாஞ்சையும், வைராக்கியமும் இல்லாமல் மனம் போனபோக்கில் ஊழியம் என்ற பெயரில் எதையெதையோ செய்து கொண்டிருக்கிறது. சபையை மனதில் கொண்டு, சபைக்காக இந்த உலகத் திற்கு வந்து மரித்து அதை உருவாக்கியிருக்கும் இயேசு திரும்பவும் வருகிற போது சபையை மட்டும் தன்னோடு கொண்டுபோகவே வரப்போகிறார் (எபேசி. 1:15-23; வெளி. 22:16; வெளி. 21). அந்த நேரத்தில் சபைத்தொடர்பில்லா மல் வாழ்கிறவர்களும், சபையை உதாசீனம் செய்து வேறு ஊழியங்களில் ஈடுபட்டு நேரத்தை வீணடித்து சுயத்தை மட்டும் திருப்தி செய்து கொண் டிருப்பவர்களும் அவரைப் பார்த்து என்ன சொல்லப் போகிறார்களோ?

## திருச்சபை ஆத்மீக அதிகாரம் கொண்ட அமைப்பு

கிறிஸ்தவர்கள் மீது ஆத்மீக அதிகாரமுள்ள நிறுவனமாக இருப்பது திருச்சபை மட்டுமே. இதை வேதம் தெளிவாக விளக்குகிறது. மத்தேயு 16ஆம் அதிகாரமும், 18ஆம் அதிகாரமும் திருச்சபை பற்றிய போதனைகளைக் கொண்டுள்ளன. மத்தேயு 16 ஆம் அதிகாரத்தில் இயேசு தன்னை தேவ குமாரன் என்று சரியாக அங்கீகரித்த பேதுருவைப் பார்த்து, "நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத் தின் வாசல்கள் அதை மேற்கொள்ளுவதில்லை" என்றார். இதில் இயேசு திருச்சபையின் தலைவன் தானே என்றும், இறையாண்மையுடைய தானே திருச்சபையைக் கட்டுவேன் என்றும் உறுதியாகக் கூறியிருக்கிறார் (மத்தேயு 16:18). அதுமட்டுமல்லாது, தொடர்ந்து இப்பகுதியில் அவர் பேதுரு சொன்ன வார்த்தைகளின் அடிப்படையில் கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களைக் கொண்டு அச்சபை கட்டப்படுமென்றும், அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளவும், ஒழுங்கு நடவடிக்கைகள் எடுப்பதற்குமான ஆத்மீக அதிகார த்தை அச்சபைக்குத் தான் வழங்குவதாகவும் கூறியிருக்கிறார் (மத்தேயு 16:19). உலகத்தில் வேறு எந்த நிறுவனமும் இத்தகைய ஆத்மீக அதிகாரத்தைக் கொண்டிருக்கவில்லை. சமுதாயத்தில் மக்களை ஆளும் அதிகாரத்தோடு அரசாங்கத்தையும், குடும்பத்தை ஆளும் அதிகாரத்தோடு கணவனையும், பிள்ளைகளை ஆளும் அதிகாரத்தோடு பெற்றோர்களையும் நியமித்திருக்கும்

கர்த்தர் விசுவாசிகள் மீது ஆத்மீக அதிகாரமுள்ளதாக தமது சபையை நியமித்திருக்கிறார். சபைக்குரிய இந்த ஆத்மீக அதிகாரத்தை அரசாங்கமோ வேறு எந்த அதிகாரமோ கட்டுப்படுத்தவும் கர்த்தர் உத்தரவு கொடுக்க வில்லை. நாட்டின் அதிகாரத்துக்குட்பட்டதாக திருச்சபை இருந்தபோதும் திருச்சபையின் ஆத்மீக அதிகாரத்தில் தலையிட அரசுக்கு உரிமையில்லை.

இந்த அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தது ரோமன் கத்தோலிக்க மதம். வேதம் போதிக்கும் இந்த ஆத்மீக அதிகாரத்தை விளங்கிக்கொள்ளா மல் விசுவாசிகளை உருவாக்குகின்ற நிறுவனமாகவும், மக்களை அடிமைப் படுத்தி ஆளும் நிறுவனமாகவும், அவர்களுடைய தனி மனித சுதந்திரத்தை நிராகரிக்கும் நிறுவனமாகவும் அது இந்த உலகில் செயல்பட ஆரம்பித்தது. விசுவாசிகளை கர்த்தரே பரிசுத்த ஆவியின் மூலம் உருவாக்குகிறார். மனிதர்களோ, எந்தவொரு நிறுவனமோ அந்தக் காரியத்தைச் செய்ய முடி யாது. வேத அதிகாரத்துக்கு இடங்கொடுக்காததும், கிறிஸ்துவை அறியாதது மான கத்தோலிக்க மதம் கிறிஸ்துவின் பெயரைப் பயன்படுத்திக் கொண்டு பிசாசின் கையாளாக செயல்பட்டது; தொடர்ந்தும் செயல்பட்டு வருகிறது.

ஆனால், வேத அடிப்படையில் இந்த உலகத்தில் நிறுவப்படும் கர்த்தரின் திருச்சபை மெய்யான ஆத்மீக அதிகாரத்தைக் கொண்டது. ஆத்துமாக் களின் விசுவாசத்தின் அடிப்படையில் அது அவர்களை சபையில் இணைத் துக்கொள்ளவும், அவர்களைப் பரிசுத்த வாழ்க்கையில் வழிநடத்தவும், அவர்கள் வழிதவறுகிறபோதும், வேதபோதனைகளுக்கு இணங்கி நடக்காதபோது திருத்தவும், அவசியமேற்பட்டால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் அதற்கு கர்த்தரே அதிகாரத்தைத் தந்திருக்கிறார். இந்த அதிகாரத்தின்படி திருநியமங்களை சரிவர கடைப்பிடித்து விசுவாசிகள் அவற்றை முறையாகக் கைக்கொள்ளவும், அவர்கள் தவறுகிறபோது அத்திரு நியமங்களைக் கைக்கொள்ள அவர்களைத் தடைசெய்யவும் திருச்சபைக்கு உரிமை உண்டு. மோசமான பாவங்களைச் செய்கிறவர்கள் திருந்த மறுக் கிறபோது அவர்களை திருச்சபையில் இருந்து விலக்கி வைக்கவும் அதற்கு அதிகாரம் உண்டு. இந்த அதிகாரத்தைக் குறித்துத்தான் இயேசு கிறிஸ்து மத்தேயு 16:18-19 வசனங்களிலும், பின்பு மத்தேயு 18:14-20 வசனங்களிலும் விளக்குகிறார்.

இத்தகைய ஆத்மீக அதிகாரம் கிறிஸ்தவ சுதந்திரத்துக்கு எதிரானதல்ல. கிறிஸ்தவ சுதந்திரத்தை வலியுறுத்தும் கர்த்தரே தன்னுடைய வேதத்தில் திருச்சபைக்குள்ள ஆத்மீக அதிகாரத்தையும் விளக்கியிருக்கிறார். ஆகவே, கிறிஸ்தவ சுதந்திரத்தையும், சபையின் ஆத்மீக அதிகாரத்தையும் ஒன்றுக் கொன்று முரணானதாக தவறாக எண்ணிவிடக்கூடாது. தனி மனித னுடைய கிறிஸ்தவ சுதந்திரத்தை திருச்சபையின் ஆத்மீக அதிகாரம் உண்மையில் பாதுகாக்கிறது. சபை அங்கத்தவராக இருக்கிற விசுவாசியின் பரிசுத்த வாழ்க்கைக்கு உதவிச் செய்து அவ்விசுவாசி கர்த்தரை மகிமைப் படுத்தும்படி வாழவே திருச்சபையின் அதிகாரம் பயன்படுத்தப்படுகிறது. இதில் விசுவாசி தவறி கர்த்தருக்கும், சுவிசேஷத்திற்கும் இழுக்கேற்படுத் தும்படி நடக்கும்போதே திருச்சபையின் ஆத்மீக அதிகாரம் அவனுடைய வாழ்க்கையில் தலையிட நேரிடுகிறது. இதற்கும் தனிமனித கிறிஸ்தவ

*சுதந்திரத்துக்கும் தொடர்பில்லை. கர்த்தரே கிறிஸ்து தலைமை வகிக்கும் திருச்சபைக்கு இத்தகைய அதிகாரத்தைக் கொடுத்து வேத அதிகாரத்தை விசுவாசிகள் மத்தியில் நிலைநிறுத்தும் ஆத்மீக அதிகாரமுள்ள நிறுவனமாக அது இந்த உலகத்தில் இயங்க அனுமதித்திருக்கிறார்.*

*உண்மையில் வேதபூர்வமாக அமைந்து, வேத அதிகாரத்தை முறையாகப் பயன்படுத்தி கர்த்தரை மகிமைப்படுத்தும் சபைகள் இருக்கும்போதே விசுவாசிகளுக்கு சமுதாயத்தில் பாதுகாப்பு இருக்கிறது. அவர்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கைக்கும், வளர்ச்சிக்கும் அவசியமான உறுதுணையாக அவை இருக்கும். வெறும் சபை என்ற பெயரை மட்டும் வைத்துக்கொண்டு சமுதாயத்தில் கல்லறைகளாக இயங்கும் அமைப்புகள் சமுதாயத்துக் கிடைத்த சாபமும், கேடுமாகும்.*

## திருநியமங்களையும், போதக ஊழியத்தையும் அளிக்கும் அதிகாரம் திருச்சபைக்கு மட்டுமே உண்டு

*இயேசு கிறிஸ்து அப்போஸ்தலர்களுக்கு மத்தேயு 28:18-20 வசனங்களில் இறுதியாகக் கொடுத்த கட்டளையில் அவர்கள் தன்னுடைய கட்டளையின்படி சுவிசேஷத்தை உலகெங்கும் எந்தவித இனப்பாகுபாடுமின்றி அறிவித்து தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கு திரித்துவ தேவனின் பெயரில் ஞானஸ்நானம் கொடுத்து அவர்களுக்கு வேதபோதனைகள் அனைத்தையும் இறுதிவரைப் போதிக்கும்படிக் கட்டளையிட்டார். இந்தக்கட்டளை சுவிசேஷத்தை அறிவித்து உலகில் திருச்சபைகளை அமைக்கும்படியாக கிறிஸ்து அவர்களுக்குக் கொடுத்த கட்டளையாக இருக்கிறது. இக்கட்டளையைத் தலைமேல் தாங்கி அப்போஸ்தலர்கள் பெந்தகொஸ்தே தினத்தில் எருசலேமில் கூடிய யூதர்கள் மத்தியில் சுவிசேஷத்தை அறிவித்து திருச்சபையை நிறுவினார்கள் என்பதை அப்போஸ்தலருடைய நடபடிகள் 1, 2 அதிகாரங்கள் தெரிவிக்கின்றன.*

*இக்கட்டளையில் கிறிஸ்து முதலில், அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தை எல்லோருக்கும் அறிவிக்கும்படி கட்டளையிட்டிருப்பதைப் பார்க்கிறோம். இரண்டாவதாக, சுவிசேஷத்தைக் கேட்டு மனந்திரும்பி இயேசுவை விசுவாசிக்கிறவர்களுக்கு மட்டும் ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படிக் கட்டளையிட்டார். இவ்வாறு ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் சபை அங்கத்தவர்களாக சபைக்குள் இணைக்கப்படுகிறார்கள். மூன்றாவதாக, ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு இறுதிவரை தான் போதித்துள்ள அனைத்தையும் போதித்து வளர்க்கும்படிக் கட்டளையிட்டார். இக்கடைசி நடவடிக்கை திருச்சபையில் ஆத்துமாக்கள் வாழவேண்டிய வாழ்க்கையைப் பற்றியதாகும்.*

*இந்தக் கட்டளையின்படி உலகத்தில் திருச்சபைகள் நிறுவப்பட வேண்டும். அதை ஆரம்பித்து வைத்தவர்கள் கிறிஸ்துவால் பயிற்சியளிக்கப்பட்ட அப்போஸ்தலர்கள். இப்படியாக கிறிஸ்து அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்த கட்டளை அவர்களுக்குப் பிறகு திருச்சபைக்கு உரியதாயிற்று. இன்று இக்கட்டளையை நிறைவேற்றும் உரிமையும், தகுதியும் திருச்சபைக்கே இருக்கிறது. தனி மனிதர்கள் சுவிசேஷத்தை சொல்ல முடிந்தாலும், இக்கட்டளையிலுள்ள ஏனைய கடமைகளை திருச்சபை மட்டுமே செய்ய வேண்டும்.*

*இக்கட்டளையின்படி திருநியமங்களை அதாவது ஞானஸ்நானத்தையும், திருவிருந்தையும் விசுவாசிகளுக்குக் கொடுக்கும் அதிகாரம் திருச்சபைக்கு மட்டுமே உண்டு. உலகில் வேறு எந்த நிறுவனத்திற்கும் அதைச் செய்ய உரிமை இல்லை. அதுவும் திருச்சபைப் போதகர்கள் மட்டுமே இவற்றை விசுவாசிக்குக் கொடுக்கும் தகுதியையும், உரிமையையும் கொண்டிருக்கிறார் கள். வேதத்தைப் பின்பற்றி முறையாக சபை அமையாமல், போதகராக சபை அங்கத்தவர்களால் நியமிக்கப்படாத ஒரு மனிதர் தன் வீட்டில் ஒரு கூட்டத்தைக்கூட்டி அந்தக் கூட்டத்துக்கு இந்தத் திருநியமங்களை அளிப் பதற்கு கர்த்தர் எந்த மனிதனுக்கும் அதிகாரம் தரவில்லை. இயேசு கிறிஸ்துவை மெய்யாக விசுவாசித்து திருச்சபையில் அங்கத்தவர்களாக இணைபவர்களுக்கு மட்டுமே இவை அளிக்கப்பட வேண்டும். ஒரு விசுவாசி யின் சீடத்துவ வாழ்க்கையின் முக்கிய அம்சங்களாக இவை இருக்கின்றன. வேத விதிகளைப் பின்பற்றி சபை முறையாக அமைந்த பிறகே திருநியமங்கள், அதாவது ஞானஸ்நானமும், திருவிருந்தும் சபையில் கொடுக்கப்பட வேண்டும் (மத்தேயு 28:18-20; அப்போ. 2:40-42; 1 கொரி. 10:16-17; 11:20-34).*

*அத்தோடு, சபை மக்களால் முறையாக 1 தீமோத்தேயு, தீத்து ஆகிய நிருபங்களில் கொடுக்கப்பட்டுள்ள இலக்கணங்களைப் பின்பற்றித் தெரிவு செய்யப்பட்ட போதகர்கள் ஆத்துமாக்களுக்கு கிறிஸ்து போதித்த அனைத் தையும் தவறாமல் போதிப்பதோடு* (Regular pastoral preaching and teaching), *போதக ஒழுங்கையும்* (Pastoral oversight) *அவர்களுக்கு வழங்க வேண்டும். இவற்றை ஆத்துமாக்களுக்கு அளிக்க திருச்சபையைத் தவிர வேறு எந்த நிறுவனத்தையும், அமைப்பையும் கிறிஸ்து உருவாக்கவில்லை. திருச்சபையை நிறுவாமல் சுயநல நோக்கத்தோடு வேத அங்கீகாரமில்லாத அமைப்புகளை நிறுவி இந்தக் கிருபையில் திருநியமங்களை செய்துவருகிறவர்கள் கர்த்தருக்கு ஒருநாள் கணக்குக் கொடுப்பதில் இருந்து தப்பவே முடியாது.*

## சபைக்குரிய ஊழியங்களை செய்யும் அதிகாரம் திருச்சபைக்கு மட்டுமே உண்டு

*சுவிசேஷத்தை அறிவிப்பதும், திருநியமங்களை அளிப்பதும், ஊழியத் தகுதியுள்ளவர்களை (போதகர்கள்-மூப்பர்கள், உதவிக்காரர்கள், சபை நிறுவ அனுப்பப்படுகிறவர்கள், பிரசங்கிகள்) தெரிவுசெய்து நியமிப்பதும் திருச்சபைக்குக் கொடுக்கப்பட்டுள்ள கடமைகள். இயேசு கிறிஸ்துவின் இந்தக் கட்டளையை (மத்தேயு 28) அப்போஸ்தலர்கள் நிறைவேற்றி சபையை நிறுவினார்கள். இன்றைக்கு இந்தக் கடமைகளை நிறைவேற்றும் அதிகாரம் திருச்சபைக்கு மட்டுமே உண்டு. அதன்படி அப்போஸ்தலர் களால் நிறுவப்பட்ட திருச்சபையே சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு பவுலை யும், பர்னபாவையும் ஆவியின் வழிநடத்தலின்படி தெரிவுசெய்து அனுப் பியது. அப்போஸ்தலருடைய நடபடிகளில் நாம் வாசிக்கும் ஊழியர்கள் அனைவரும் திருச்சபையின் அங்கீகாரம் பெற்றே ஊழியங்களில் ஈடுபட் டிருந்திருக்கிறார்கள். போதகர்களையும், உதவிக்காரர்களையும் நியமிக்கும் அதிகாரம் திருச்சபைக்கு இருப்பதாலேயே அவர்களுக்குரிய இலக்கணங் களை விளக்கி பவுல் திருச்சபைகள் அவற்றைப் பின்பற்றும்படியாக தீமோத்தேயுவுக்கு 1 தீமோத்தேயு, தீத்து ஆகிய நிருபங்களை அனுப்பினார்.*

*தங்களைத் தாங்களே ஊழியக்காரர்களாக நியமித்துக்கொண்டு ஊழியங்களில் ஈடுபட்ட மனிதர்களை நாம் வேதத்தில் பார்க்கமுடியாது. இது நம்மினத்தில் பரவியிருக்கும் கருவேலச் செடி. கர்த்தர் தங்களோடு நேரடியாகப் பேசி அழைத்தார் என்றும் அல்லது தங்களுடைய உள்ளத்தில் அத்தகைய ஆழமான உந்துதலை உணர்ந்தோம் என்று கூறுகிறவர்களையும் நாம் பார்த்திருக்கிறோம். இவர்கள் சொல்லுவதெல்லாம் உண்மையானால் கர்த்தர் தன்னுடைய வார்த்தையில் ஊழியங்களில் யார் ஈடுபட வேண்டும், அவர்கள் எப்படி நியமிக்கப்பட வேண்டும் என்ற விளக்கங்களையெல்லாம் தந்திருக்கமாட்டார். அவருடைய வார்த்தை ஊழியங்களைப் பற்றிய அத்தனை விளக்கங்களையும் தருவதால் இவர்கள் சொல்லுவதில் எந்த உண்மையும் இல்லை என்பதை நாம் உணரவேண்டும்.*

*வேதபூர்வமாக அமைந்து ஆத்துமாக்களை வழிநடத்தும் திருச்சபைகளும், வேதபூர்வமான பிரசங்கங்களையும், போதனைகளையும் அளிக்கும் தகுதியுள்ள போதகர்களும் நம்மத்தியில் அருகிக் காணப்படுவதால்தான் வேத அனுமதியற்ற போலி ஊழியங்கள் நம்மினத்தில் திருவிழாக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றன. திருச்சபையில் வாழ்ந்து, திருச்சபையின் அங்கீகாரம் பெற்று திருச்சபை மூலமாகச் செய்யப்பட வேண்டிய ஊழியங்களையெல்லாம் திருச்சபை பற்றிய உணர்வே இல்லாது பலர் இன்று செய்து வருகிறார்கள். இவர்கள் எல்லாம் உண்மையில் லைசென்ஸ் இல்லாமல் ஆட்டோ ஓட்டுகிற ஆட்டோக்காரனைப் போன்றவர்கள். நாட்டுச் சட்டத்தை மீறுகிறபோது போலிஸ் நம்மீது நடவடிக்கை எடுக்கிறது. கர்த்தரின் திருச்சபைக்குரிய நியதிகளை மீறுகிறபோது, சகல சட்டங்களுக்கும் அதிபதியான அவர் மட்டும் நியாயத்தீர்ப்பு நாளில் இவர்களை சும்மாவிட்டு விடுவாரா என்ன?*

*ஊழியம் செய்வதற்கு சபை அனுமதி தேவை என்று கூறுவதற்கு பல காரணங்கள் உள்ளன. (1) அது கிறிஸ்து விதித்துள்ள கட்டளை. (2) ஊழியம் மிகவும் உயர்ந்ததும், பரிசுத்தமானதுமானதால் அதை செய்யப் போகிறவர்களின் தகுதி சபையாரால் ஆராயப்பட வேண்டும் என்பதும் கர்த்தர் விதித்துள்ள கட்டளை. (3) ஊழியம் செய்யப் போகிறவர்களுக்கான பயிற்சித் தளம் திருச்சபையே. ஊழியப் பயிற்சியை சபையில் வாழ்ந்து, சபையில் அடையாதவன் ஊழியத்தில் சிறக்கமாட்டான். (4) ஊழியம் என்பது ஆணும், பெண்ணுமாகிய ஆத்துமாக்களின் மத்தியில் செய்யப்படுவது. அதற்கு ஒழுக்கம், பொறுப்பு, நிதானம், ஞானம், தன்னடக்கம், உலக ஆசையின்மை போன்ற அனைத்தும் தேவை. இவையெல்லாம் ஒருவருக்கு இருக்கிறதா என்பதை கர்த்தர் சபை மூலமே காட்டித் தருவார். இந்த அடையாளங்களில் பணத்துக்காக நடத்தப்படும் பைபிள் காலேஜுகளோ அல்லது ஸ்தாபனங்களோ அக்கறை காட்டாது. (5) ஊழியக்காரர்களுக்கு சபைக் கண்காணிப்பும், ஆத்மீகப் பாதுகாப்பும் தேவை. அதை சபையால் மட்டுமே தரமுடியும். என்றோ செத்துப்போய் அலங்கரிக்கப்பட்ட பிணங்களாக இருக்கும் பாரம்பரிய சபைகளாலும், சமயசமரச பைபிள் காலேஜுகளாலும், போலி ஸ்தாபனங்களாலும் இவற்றைத் தரமுடியுமா என்ன?*

# தேவனும் மனிதனுமாய் . . .

பிலிப்பியர் இரண்டாம் அதிகாரத்தில் பவுல் அப்போஸ்தலன் பிலிப்பியர் சபை மக்களுக்கு எழுதிய அறிவுரையில் இயேசு கிறிஸ்து தன்னைத் தாழ்த்திக் கொண்டதைப் போல அவர்கள் தங்களுடைய வாழ்க்கையிலும் தாழ்மையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று எழுதுகிறார். இப்பகுதியில் இயேசு கிறிஸ்து தன்னைத் தாழ்த்திக் கொண்ட விதத்தை விளக்கும் பவுல் ஆறு முதல் எட்டுவரையுள்ள வசனங்களில் பின்வருமாறு குறிப்பிடுவதைப் பார்க்கிறோம்.

> *"அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் . . . அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு . . . தம்மைத் தாமே தாழ்த்தினார்." (பிலிப்பியர் 2:6~8)*

கிறிஸ்துவின் தாழ்த்துதல் என்று பவுல் இப்பகுதியில் விளக்குவது கிறிஸ்து மனிதரூபமெடுத்து இவ்வுலகிற்கு வந்து பட்ட பாடுகளைப் பற்றித்தான்; அதுவும் அப்பாடுகளின் உச்சகட்டமான சிலுவை மரணத்தையும் உள்ளடக்கியே பவுல் விளக்குவதைக் காண்கிறோம். இவ்விதமாக கிறிஸ்து தன்னைத் தாழ்த்திக்கொண்டது உலகத்தோற்றத்துக்கு முன்பாக பிதாவினால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களுடைய பாவநிவாரணத்திற்கு வழியேற்படுத்தி அவர்களுக்கு இரட்சிப்பைப் பெற்றுத்தரவே. இதெல்லாம் நிறைவேறுவதற்கு கிறிஸ்து இந்த உலகத்தில் மனிதனாகப் பிறக்க வேண்டிய அவசியமிருந்தது.

கிறிஸ்து மனிதனாகப் பிறந்தார் என்பது எல்லோருக்குமே தெரிந்த வரலாற்று உண்மை. ஆனால், பவுல் இந்த வசனங்களில் அவர் மனிதனாகப் பிறந்தவிதத்தை எவ்வாறு விளக்குகிறார் என்பதை நாம் கூர்ந்து கவனித்து விளங்கிக்கொள்வது அவசியம். கிறிஸ்து மனிதனாக இந்த உலகத்தில் பிறந்தபோது அவர் தொடர்ந்தும் தேவரூபத்திலும் இருந்தார் என்கிறார் பவுல். "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும்" என்ற வார்த்தைகள் இதைத்தான் விளக்குகின்றன. அதாவது அவர் தேவனுடைய ரூபமாய்த் தொடர்ந்து இருந்த நிலையில் அவர் மனிதரூபத்தையும் தன்னோடு சேர்த்துக் கொண்டார் என்பதே இதன் விளக்கம். இதன் அடிப்படையில் இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் பிறந்தபோது தன்னில் தெய்வீகம், மானுடம் ஆகிய இரு தன்மைகளைக் கொண்டிருந்தார் என்பதை நாம் உணர்வது அவசியம்.

"தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே," அவர் மனிதராகிய இயேசு கிறிஸ்து என்கிறது வேதம் (1 தீமோ. 2:5). மனிதனுக்கும் கர்த்தருக்குமிடையில் பாவம் உண்டாக்கியிருக்கிற பெரும் இடைவெளியை அகற்ற இயேசு கிறிஸ்துவாகிய மத்தியஸ்தரால் மட்டுமே முடியும். ஆனால், இந்த மத்தியஸ்தத்தை கர்த்தரால் மட்டும் நிறைவேற்ற முடியாது. ஏனெனில், கலாத்தியர் 3:20 பவுல், "மத்தியஸ்தன் ஒருவனுக்

குரியவனல்ல, ஆனால் தேவனோ ஒருவர்" என்கிறார். இதன் மூலம், கர்த்தர் தனக்குத்தானே மத்தியஸ்தம் செய்துகொள்ள முடியாது, அப்படிச் செய்தால் கர்த்தர் ஒருதலைப்பட்சமாக நடந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டுக்குள்ளாக நேரும் என்கிறார் பவுல். கர்த்தர் கர்த்தராக இருக்கிறார், ஆனால், மனிதன் கர்த்தரல்ல. இந்த நிலைமையில் கர்த்தருக்கு ஒரு மத்தியஸ்தர் தேவைப்படுவதுபோல் மனிதனுடைய நிலையை எடுத்துக்கூற அவனுக்கும் ஒரு மத்தியஸ்தர் தேவைப்படுகிறார். ஆனால், கர்த்தருக்கெதிராகப் பாவஞ் செய்திருக்கிற மனிதனுக்கு மத்தியஸ்தராக இருப்பதற்கு வானத்திலும் இந்த உலகத்திலும் ஒரு பிறவி கிடையாது. 1 சாமுவேல் 2:25 வசனத்தில் ஏலி பின்வருமாறு சொல்கிறான், "மனுஷனுக்கு விரோதமாக மனுஷன் பாவஞ் செய்தால், நியாயாதிபதிகள் அதைத் தீர்ப்பார்கள்; ஒருவன் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்வானேயாகில், அவனுக்காக விண்ணப்பஞ் செய்யத்தக்கவன் யார்." இதையே யோபுவும் (9:33), "எங்கள் இருவர்மேலும் தன் கையை வைக்கத்தக்க மத்தியஸ்தன் எங்களுக்கு இல்லையே" என்று விளக்குகிறான்.

கர்த்தருக்கும் மனிதர்களுக்கும் இடையில் இத்தகைய இடைவெளி இருக்கும் நிலையிலேயே இயேசு கிறிஸ்து கர்த்தரைப் பார்த்து சொன்னார், "என் தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன், புஸ்தகச் சுருளில் என்னைக்குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார்." கர்த்தருக்கும் மனிதனுக்கும் இடையில் இருந்த அந்தப் பேரிடை வெளியை அகற்றுவதற்காகவே இயேசு கிறிஸ்து மனிதனாகப் பிறந்தார். தேவனாக இருந்த அவர் தன்னில் மானுடத்தையும் இணைத்துக் கொண்டு தேவ மனிதனாக கர்த்தருக்கும் மனிதனுக்கும் இடையில் மத்தியஸ்தராக இருக்கும் சகல தகுதிகளையும் கொண்டு இவ்வுலகத்திறகு வந்தார்.

இயேசு கிறிஸ்து தற்செயலாக மத்தியஸ்தராகிவிடவில்லை. அது அவர் மேல் திணிக்கப்படவும் இல்லை. அவரால் மத்தியஸ்தராக வராமல் இருந்திருக்க முடியும். ஆனால், அவர் அதை விரும்பி சுயமாக ஏற்றுக் கொண்டார். பிலிப்பியர் 2:7 வசனத்தில் பவுல், அவர் "தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்" என்று கூறுகிறார். கர்த்தருக்கும் மனிதனுக்கும் இடையில் சமாதானத்தை உண்டாக்க இயேசு தன்னை இப்படியாகத் "தாழ்த்திக் கொண்டார்" (8) என்கிறது கர்த்தரின் வேதம்.

உன்னதத்தில் இருக்கும் பரிசுத்தரான கர்த்தருக்கும் பூமியில் இருக்கும் மனிதனுக்கும் இடையில் மாபெரும் இடைவெளி இருக்கின்றது. உலகத்திலுள்ள நாடுகளும், மனிதர்களும் கர்த்தரைப் பொறுத்தவரையில் வெறும் தூசு. இருந்தபோதும் எவராலும் தனக்கு எதுவும் தேவைப்படாத பரிசுத்தரும், நீதிமானுமாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தானே விரும்பித் தன்னைத் தாழ்த்தி அடிமை ரூபமெடுத்து மனிதனுக்கும் கர்த்தருக்குமிடையில் சமாதானத்தை ஏற்படுத்த வந்தார். இது மனித சிந்தனைகளையெல்லாம் சிதறடிக்கச்செய்து நம்மைப் பேராச்சரியத்துக்குள்ளாக்கும் தெய்வீக உண்மையாகும்.

*பிலிப்பியர் 2:6~8 வரையுள்ள வசனங்களிலுள்ள விளக்கத்தின்படி இயேசு கிறிஸ்து மனித ரூபமெடுத்து தன்னைத் தாழ்த்திக்கொண்டபோது எதைச் செய்யவில்லை என்பதை இனி விளக்கமாகப் பார்ப்போம்.*

**1. தேவ குமாரன் மனித ரூபமெடுத்தபோது தன்னுடைய தெய்வீகத்தை ஒதுக்கி வைத்துவிடவில்லை.**

*பவுல் பிலிப்பியர் 2:6~7 வசனங்களில், "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் . . . மனுஷ சாயலானார்" என்றே விளக்குகிறார். அதாவது, அவர் தேவனுடைய சாயலில் தொடர்ந்திருந்த நிலையில் மனுஷ சாயலையும் தன்னோடு இணைத்துக்கொண்டார் என்பதே இதற்கு விளக்கம். யோவான் 1:1~3 வரையுள்ள வசனங்களில் யோவான், வார்த்தையாகிய இயேசு ஆதியிலிருந்தே இருக்கிறார் என்றும், அந்த வார்த்தை தேவனாயிருந்தது என்றும் விளக்குகிறார். இயேசு இந்த உலகத்துக்கு வந்தபோது அவர் தேவனாக தொடர்ந்திருந்தார். அவருடைய தெய்வீகத்தில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. அவர் மனிதரூபமெடுத்து தன்னைத் தாழ்த்திக் கொண்டபோதும் தேவனாகவே இருந்தார்.*

*பவுல் பிலிப்பியர் 2:6 வசனத்தில், "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணவில்லை" என்கிறார். தேவனாக இருந்த இயேசு கிறிஸ்து மனித ரூபமெடுத்தபோது யூதர்கள் மத்தியில் தொடர்ந்தும் தன்னைத் தேவனாகவே அறிவித்துக் கொண்டார். அப்படிச் செய்வதை அவர் கர்த்தரிடமிருந்து கொள்ளையடிப்பதாக எண்ணவில்லை. ஏனெனில், அவர் இல்லாத தொன்றை மனிதர்கள் முன் பேசவில்லை. ஆதியில் இருந்தே தேவனாக இருந்த இயேசு கிறிஸ்து மனித ரூபத்தில் இருந்தபோதும் தேவனாக இருந்ததால் யோவான் 10:30 வசனத்தில், "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" என்று வெளிப்படையாக சொல்லத் தயங்கவில்லை. அதுவே உண்மையுமாகும் (யோவான் 8:38; 10:14, 18, 30). இயேசு இவ்வாறு சொன்னபோது அவருடைய வார்த்தைகளின் பொருளை யூதர்கள் நன்றாகப் புரிந்து கொண்டிருந்தார்கள். பிதாவும் தானும் ஒன்றாயிருக்கிறோம் என்று அவர் சொன்னதற்காகவே அவர்கள் அவரைக் கல்லால் அடிக்க முயன்றார்கள்.*

*பவுல் பிலிப்பியர் 2 அதிகாரத்தில், இயேசு கிறிஸ்து தன்னுடைய தெய்வீகத்தை ஒதுக்கி வைத்தார் என்று சொல்லவில்லை; தேவனாக இருந்து இயேசு தன்னோடு மானுடத்தை இணைத்துக் கொண்டார் என்றே விளக்குகிறார். தேவனான இயேசு கிறிஸ்து தானிருந்த நிலையை இழந்து விடாமல் தான் இதுவரை பெற்றிராத ஒரு புது நிலையை அடைந்தார் என்றே வேதத்தில் வாசிக்கிறோம். அவ்வாறு இவ்வுலகில் மனித ரூபத்தை அடைந்த தேவனான இயேசு கிறிஸ்து தன்னுடைய தெய்வீகத்தில் தொடர்ந்தும் பரலோகத்தில் இருந்தார் என்பதையும் விளங்கிக்கொள்வது அவசியம். இந்த உலகில் அவர் மனிதனாக இருந்தபோதும், திரித்துவத்தின் இரண்டாம் ஆள்தத்துவமான, தேவனான இயேசு தன்னுடைய பிதாவுடன் இருந்த பிரிக்கமுடியாத உறவை ஒருபோதும் இழந்துவிடவில்லை. பிதாவும் அவரும் ஒன்றானதால் அவர் இந்த உலகில் மனித ரூபத்தில் இருந்தபோது*

*பரலோகத்திலும் இருந்தார். அதுவே திரித்துவ இரகசியமும், சத்தியமுமாகும். தேவன் ஒருபோதும் தேவனாக இல்லாமல் போகமுடியாது. அதேபோல் தேவனாக இல்லாத ஒருவர் ஒருபோதும் தேவனாக முடியாது.*

***2. தேவகுமாரன் மனித ரூபமெடுத்தபோது தன்னுடைய தெய்வீகத் தன்மையை மானுடத்தோடு கலந்துவிடவில்லை.***

*கிறிஸ்தவ வரலாற்றில் ஆதிசபை பல போலிப்போதனைகளை சந்தித்திருந்தது. அதில் ஒன்று ஏரியனின்* (Arian) *போதனையாகும். இப்போதனை, இயேசு கானாவில் தண்ணீரை திராட்சை இரசமாக மாற்றியது போல் தான் மனிதரூபமெடுத்தபோது தன்னுடைய தெய்வீகத்தை மானுடத்தோடு கலந்துவிட்டார் என்று விளக்கியது. இயேசு கானாவில் செய்த அற்புதத்தில் வெறும் தண்ணீர் முழுத்திராட்சை இரசமாக மாறியது. அதில் தண்ணீரின் அடையாளமே இருக்கவில்லை. தண்ணீர் தன் தன்மையை முற்றாக இழந்திருந்தது. அதேபோல் இயேசுவின் தெய்வீகம் முழுமானிடமாக மாறியது என்றது இப்போதனை.*

*ஆனால், ஏரியனின் விளக்கம் கிறிஸ்துவின் தெய்வீகம், மானுடமாகிய இரு தன்மைகளையும் முற்றாக அழித்து அவர் மத்தியஸ்தராக இருப்பதற்கு வழியில்லாமல் செய்துவிடுகிறது. மனித குமாரனான கிறிஸ்து தன்னுடைய தெய்வீகத்தை இழந்துவிட்டால் அவரால் கர்த்தருக்கும் மனிதருக்கும் இடையிலான மத்தியஸ்தராக இருக்க முடியாமல் போய்விடும். மத்தியஸ்தராக இருப்பதற்கு அவர் தெய்வீகத்தையும் மானுடத்தையும் தன்னில் முழுமையாகக் கொண்டிருக்க வேண்டும். தண்ணீர் தன்னுடைய தன்மையை முற்றாக இழந்து திராட்சை இரசமாக மாறியதைப்போல தெய்வீகம் தன்னை இழந்து மானுடமாக மாறிவிடுகிறபோது இயேசு நமக்கு மத்தியஸ்தராக இருக்கும் தகுதியையே இழந்துவிடுகிறார். அவர் பெண்ணுக்கு பிள்ளையாக இந்த உலகத்தில் பிறந்தபோதும் தெய்வீகத்தோடேயே பிறந்தார் என்கிறது வேதம். அவரில் தெய்வீகம் தனித்தன்மையுடன் காணப்பட்டது.*

***3. தேவகுமாரன் மனித ரூபமெடுத்தபோது தன்னுடைய தெய்வீகத் தன்மையை எந்தவிதத்திலும் மாற்றவும், திருத்தியமைக்கவுமில்லை.***

*கிறிஸ்தவ வரலாற்றின் ஆதிசபைக் காலத்தில் சிலர் கிறிஸ்துவின் தெய்வீகம், மானுடம் ஆகிய இரு தன்மைகளும் ஒன்றோடொன்று கலந்து ஒன்று சேர்ந்திருந்தன என்று விளக்கமளித்தனர். ஆனால், கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையில் மாற்றங்கள் ஏற்படாமல் இது நிகழ வாய்ப்பில்லை. அப்படி அவருடைய தெய்வீகத் தன்மை மாற்றமடையுமானால் அது தன் தனித்துவத்தை இழந்துபோகும். பவுல் பிலிப்பியர் 2 வசனத்தில் கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையில் எந்த மாற்றமும் ஏற்பட்டதாக விளக்கமளிக்கவில்லை. வேதத்தை திரித்து விளக்கமளிக்க மனிதர்களைப் பயன்படுத்திக் கொள்ளுவதில் பிசாசு எப்போதுமே தயங்கியதில்லை.*

*நாம் ஏற்கனவே பார்த்ததுபோல் தேவனான இயேசு இதுவரை தன்னில் காணப்படாத மானுடத்தைத் தன்னோடு இணைத்துக்கொண்டபோது அவருடைய தெய்வீகம் எப்போதும்போல் தொடர்ந்திருந்தது. அதில் எந்த*

விதமான மாற்றங்களும் ஏற்படவில்லை; எப்போதுமிருந்ததுபோல தெய்வீக த்துக்குரிய சகல அம்சங்களையும் கொண்டு நித்தியத்தில் இருந்ததைப் போலக் காணப்பட்டது.

இயேசு தன்னுடைய மானுடத்தில் அநேக கிரியைகளைச் செய்து பாடுகளையும் இந்த உலகத்தில் அநுபவித்தார். அவர் தன்னுடைய மானு டத்தின் பூரணத் தன்மையுடன் அக்கிரியைகளைச் செய்து பாடுகளையும் அநுபவித்தார். இருந்தபோதும் அவர் தன்னுடைய மானுடத்தில் செய்த யாவையும், பட்டபாடுகள் அனைத்தும் அவருடைய தெய்வீகத் தன்மை யால் செய்யப்பட்டவையல்ல. இவ்வாறு தெய்வீகத்தைத் தன்னில் கொண் டிருந்து அதை முழுமையாக உணர்ந்திருந்தபோதும் இயேசு, மனிதனாக செய்த அத்தனையையும் தேவனாக இருந்து தன்னுடைய மானுடத்தின் மூலமே செய்தார். உதாரணமாக, தேவன் தன் சுயஇரத்தத்தினால் சபையை சம்பாதித்துக்கொண்டதாக லூக்கா அப்போஸ்தலர் நடபடிகள் 20:28 வசன த்தில் விளக்குகிறான். தெய்வீகமும் மானுடமும் அவரில் எந்தவிதமான முரண்பாடுகளும் இல்லாமல் தொடர்ந்திருந்தன, செயல்பட்டன.

**4. தேவகுமாரன் மனித ரூபமெடுத்தபோது அவர் மனிதர்களுக்குமுன் வெறும் மனிதத்தோற்றத்தோடு மட்டும் வாழவில்லை.**

ஆதிசபைக் காலத்து போலிப்போதனைகளில் ஒன்று “டொஸட்டிசிஷம்” (Docetism) என்று அழைக்கப்படுகிறது. இதைப் பின்பற்றியவர்கள் தேவ னான இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்தபோது மனிதனுக்குரிய தோற்றத்தை மட்டுமே தந்தார் என்று விளக்கியது. அதாவது பழைய ஏற்பா ட்டில் தேவதூதர்கள் மனித தோற்றத்தில் வந்து மனிதர்கள் மத்தியில் செயல்பட்டது போல் இயேசு இருந்தார் என்பது இதன் விளக்கம். இதன் மூலம் இயேசு உண்மையிலேயே மானுடத்தை தன்னில் இணைத்துக் கொண்டு மனிதனாகப் பிறந்து வாழ்ந்து மரித்தார் என்பதை இந்தப் போதனை நிராகரித்தது. இதற்குப் பதிலளித்த ஆதிசபை, “கற்பனையான ஒரு இயேசுவால் கற்பனையான இரட்சிப்பை மட்டுமே மக்களுக்கு வழங்க முடியும்” என்று கூறி இந்தப் போலிப்போதனையை சிதறடித்தது.

இயேசு கிறிஸ்துவில் முழுமையாகக் காணப்பட்ட தெய்வீகம், மானுடம் ஆகியவைபற்றி விளக்குகிறபோது பியூரிட்டன் பெரியவரான ஜோண் ஓவன் இதற்குத் தந்த விளக்கத்தைக் குறிப்பிடத்தான் வேண்டும், “நித்தியத் துக்கும் தேவகுமாரனான இயேசு தன்னுடைய மகத்தான வல்லமை, அன்பு ஆகியவற்றின் அடிப்படையில் நமக்குச் சொந்தமான மானுடத்தைத் தன் னோடு இணைத்துக்கொண்டு தனக்கே சொந்தமான தெய்வீகத்தைப் போல மானுடத்தையும் தனதாக்கிக் கொண்டார்.”

தேவனாகிய இயேசு கிறிஸ்து தன்னில் பூரணமாக தெய்வீகத்தையும், மானுடத்தையும் கொண்டு வாழ்ந்தார் என்ற போதனை நம்முடைய விசுவாசத்தின் அசைக்க முடியாத அடித்தளமாக இருக்கிறது. இது பற்றி முழுமையான அறிவில்லாதவர்களும்கூட இது நம் விசுவாசத்தின் அடித் தளம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். தேவ குமாரன் நம்முடைய மானுடத்தைத் தம்மோடு இணைத்துக்கொண்டு அந்த மானுடத்தின் மூலம்

ஒவ்வொரு மனிதனும் செய்யக்கூடிய காரியங்கள் அனைத்தையும் மனித னாக வாழ்ந்து செய்தார் என்பதை உங்களால் விளங்கிக்கொள்ளாமலிருக்க முடியாது. மெய்யாகவே அவர் மனிதகுமாரனாக இருந்தார். இதுபற்றி விளக்கிய நண்பரொருவர், "அவர் கடவுளாக இல்லாதளவுக்கு மனிதராக வும், மனிதராக இல்லாதளவுக்கு கடவுளாகவும் இருந்தார்" என்றார். இதுவே தேவகுமாரன் மனிதகுமாரனாகவும் இருந்ததன் இரகசியம். விசுவாசம் மட்டுமே ஒருவருக்கு இதனைப் புரியவைக்க முடியும்.

இறுதியாக, இயேசு கிறிஸ்து மனித ரூபமெடுத்து தன்னைத் தாழ்த்திக் கொண்டபோது அவர் என்ன செய்தார் என்பதை ஆராய்வோம்.

***5. தேவகுமாரன் மனித ரூபமெடுத்தபோது மானுடத்தில் தன்னுடைய தெய்வீகத் தன்மையின் மகிமையை மறைத்துக்கொண்டார்.***

பிலிப்பியர் 2:7, "அவர் தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார்" என்கிறது. இயேசு கிறிஸ்து மானுடத் தைத் தம்மோடு இணைத்துக்கொண்டபோது தன்னுடைய தெய்வீகத்தின் மகிமை வெளியே தெரியாதபடி மறைத்துக் கொண்டார் என்கிறது. அதன் காரணமாகத்தான் அவரைப் பார்த்த மக்களுக்கு அவர் தேவனாகத் தெரிய வில்லை. அவர், தான் தேவன் என்று அறிவித்தபோது அதைக் காதால் கேட்டவர்கள் அவர் ஒருபோதும் நல்ல மனிதனாக இருக்க முடியாது என்று நம்பினார்கள். அந்தளவுக்கு அவருடைய தெய்வீகம் எவர் கண்களுக் கும் புலப்படாதபடி அவர் மனிதனாக இருந்தார். இது தேவகுமாரன் சுயமாக விரும்பி ஏற்றுக்கொண்ட பணி. அவர் "தம்மை வெறுமையாக்கி" என்பது இதையே குறிக்கிறது. தன் பிதாவுக்குக் கீழ்ப்படிந்து கிறிஸ்து இதைச் செய்தார். சர்வவல்லவரான தேவன் அந்தளவுக்கு தன் மகிமையை மறைத்துக்கொண்டார்.

யோவான் 8:58 வசனத்தில் "ஆபிரகாம் உண்டாவதற்கு முன்பே நான் இருக்கிறேன்" என்று அவர் அறிவித்ததால், இன்னும் ஐம்பது வயதுகூட ஆகாதவன் இப்படி ஆபிரகாமைப் பற்றி பேசுகிறானே என்று யூதர்கள் அவர் மேல் எறியும்படி கற்களைப் பொறுக்கினார்கள். "எந்தக் காரியத்தினி மித்தம் என் மேல் கல்லெறிகிறீர்கள்" என்று அவர் கேட்டபோது, அவர்கள் பதிலாக, "நற்கிரியையினிமித்தம் நாங்கள் உன்மேல் கல்லெறிகிறதில்லை; நீ மனுஷனாயிருக்க, உன்னைத் தேவன் என்று சொல்லி இவ்விதமாக தேவதூஷணஞ் சொல்லுகிறபடியினால் உன்மேல் கல்லெறிகிறோம்" என் றார்கள் (யோவான் 10:32, 33). அவருடைய தெய்வீகத்தை மக்களால் காணவோ புரிந்துகொள்ளவோ முடியாதபடி அதன் மகிமை அவர்களுக்கு மறைக்கப்பட்டிருந்தது. அது அவர்களுடைய சிந்தனைக்கெல்லாம் அப்பாற் பட்டதாயிருந்தது. படைப்பில் இப்படி எவருமே இரண்டு தன்மைகளைத் தம்மில் கொண்டிருந்ததில்லை.

பிலாத்து முதற்கொண்டு அவரைப் பார்த்து, "நீ கிறிஸ்துவா? என்று எங்களுக்குச் சொல்" (லூக்கா 22:67) என்று கேட்காதவர்கள் இல்லை. "நான் சொன்னாலும் நீங்கள் நம்ப மாட்டீர்கள்" என்றும், பின்பு "நான் அவர்தான்" என்றும் இயேசு பதில் சொன்னாரே தவிர தன் தெய்வீகத்தை

*அவர்களுக்கு காட்ட ஒருபோதும் முயற்சிக்கவில்லை. சிலுவையில் மரிப்பதற்கு சில நிமிடங்களுக்கு முன்புகூட ஜனங்களும், அதிகாரிகளும், போர்ச்சேவகர்களும், பக்கத்தில் இருந்த திருடர்களில் ஒருவனும் அவரை இகழ்ந்து பரியாசம் பண்ணினார்கள் (லூக்கா 23:35~39). இயேசு எந்த சோதனைக்கும் இடங்கொடுக்காமல் இறுதிவரை தன் தெய்வீகத்தை அவர்களுக்கு மறைத்து மனித குமாரனாக மரித்தார். "தம்மை வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார்" என்ற பவுலின் வார்த்தைகள் இதைப் படம்பிடித்துக் காட்டுகின்றன.*

*தெய்வீகமும், மானுடமும் இணைந்து மனுஷகுமாரனாக இருந்த பரிசுத்தரான தேவகுமாரன் தன்னை வெறுமையாக்கி மனிதர்கள் முன்பாகத் தாழ்த்தி திருச்சபையின் இரட்சிப்பிற்காக தன்னை சிலுவையில் ஒப்புக் கொடுத்தார். நம்மைப் போல மனுஷனாகி நமக்காக மரித்தார். அவருடைய சிலுவைப்பணி மூலம் அவரது தெய்வீகத்தின் மகிமையை உணர முடியாத வர்கள் அவரை நேசிப்பதும் இல்லை, நம்புவதும் இல்லை, அவரைச் சேர்ந்த வர்களும் இல்லை. இயேசு கிறிஸ்து தெய்வீகத்தையும், மானுடத்தையும் தன்னில் கொண்டு இவ்வுலகில் வாழ்ந்து மரித்தார் என்பதை நம்ப மறுப்ப வர்கள் கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படை சத்தியத்தை நிராகரிக் கிறார்கள். இந்துக்களும், முஸ்லீம்களும், யூதர்களும் அவரை ஒரு நல்ல மனிதனாகவோ அல்லது தீர்க்கதரிசியாகவோ மட்டுமே அங்கீகரிக்கத் தயாராக இருக்கிறார்கள். பூரணமான மனித உருவெடுத்து வந்து வாழ்ந்து மரித்த தேவகுமாரனாக அவரை அவர்களால் அங்கீகரிக்க முடியவில்லை. உலக ஞானம் அவர்கள் கண்களை மறைத்து சத்தியத்தை அறியமுடியாமல் செய்கிறது. திரித்துவ தேவனான இயேசு கிறிஸ்து தெய்வீகத்தையும், மானுடத்தையும் தன்னில் கொண்டு தன்னைத் தாழ்த்திக் கொண்டதை நிராகரித்தால் கிறிஸ்தவத்தின் அடித்தளத்திலேயே கைவைப்பது போலாகும். கிறிஸ்தவம் இந்த சத்தியத்தின் மேலேயே உறுதியாக நிலைநிற்கிறது.*

---

ஆதித்திருச்சபைக் காலத்தில், தெய்வீகத்தையும், மானுடத்தையும் தன்னில் கொண்டு கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்தார் என்ற வேத சத்தியத்தைப் புறக் கணித்துப் பல போலி விளக்கங்களுக்கு உருக்கொடுத்தவர்கள் இருந்திருக் கிறார்கள். காலத்துக்குக் காலம் Arianism, Socinianism, Docetism, Apollinaria-nism, Ebionism, Eutychiaism, Nestorianism என்ற பல பெயர்களில் உலவி வந்த இந்தப் போலிப்போதனைகள் கிறிஸ்துவின் தெய்வீகத்தையோ அல்லது அவருடைய மானுடத்தையோ ஒருவிதத்தில் நிராகரித்து விளக்கங்கொடுத்தன. அக்காலத்து சபைக் கவுன்சில்கள் இந்தப் போலி விளக்கங்களை நிராகரித்து திருச்சபையைக் காப்பாற்ற சரியான வேதவிளக்கங்களைத் தந்து அவற்றை எழுத்திலும் வைத்திருந்தன. இன்றுகூட திரித்துவப் போதனையையும், கிறிஸ்து தன்னில் கொண்டிருந்த இரு தன்மைகளையும் புரிந்துகொள்ளாமல் தவறான எண்ணங்களைக் கொண்டிருக்கும் போதகர்களும், விசுவாசிகளும் நம்மத்தியில் நடமாடி வருகிறார்கள். சத்தியத்தை சரியாக விளங்கி அதன் அடிப்படையில் கிறிஸ்துவை விசுவாசிக்காமல் சத்திய தேவனோடு மெய்யான ஐக்கியத்தில் வருவது கூடாத காரியம். சத்தியம் நம் கண்களைத் திறக்கட்டும்.

# கிறிஸ்தவக் கோட்பாடுகள்

***கேள்வி 102***: *விசுவாசிகளின் குழந்தைகளுக்கு திருமுழுக்கு கொடுக்கலாமா?*

***பதில்***: *விசுவாசிகளின் குழந்தைகளுக்கு திருமுழுக்கு கொடுக்கக்கூடாது. ஏனெனில், பரிசுத்த வேதாகமத்தில் அதற்கான எந்தக் கட்டளையோ, உதாரணங்களோ அல்லது உள்ளடக்கமான போதனைகளோ கொடுக்கப்படவில்லை.*

*(உபாகமம் 12:32; நீதிமொழிகள் 30:6; அப்போஸ். 8:12; 10:47-48).*

**குழந்தை ஞானஸ்நானம் (திருமுழுக்கு) என்பது என்ன?**

*விசுவாசிகளின் குழந்தைகளுக்கு தலையில் தண்ணீர் தெளித்துக் கொடுக்கப்படும் ஞானஸ்நானமே அது. இதன் மூலம் விசுவாசிகளின் குழந்தைகள் விசுவாசிகளைப் போலவே திருச்சபையின் அங்கமாக இணைத்துக் கொள்ளப்படுகிறார்கள்.*

**இந்த நடைமுறை எங்கிருந்து வந்தது? இதைப் பின்பற்றுபவர்கள் யார்?**

*ஆதித் திருச்சபையில் இந்த நடைமுறை இருக்கவில்லை. இயேசு கிறிஸ்துவும், அவருடைய அப்போஸ்தலர்களும் இத்தகைய நடைமுறைக்கான போதனைகளை அளிக்கவில்லை. அவர்கள் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்ததாக நாம் வேதத்தில் எங்குமே வாசிப்பதில்லை. இதை நாம் ரோமன் கத்தோலிக்க மதத்தில் பார்க்கிறோம். அம்மதம், தேவநீதியை ஞானஸ்நானத்தின் மூலம் மனிதனுக்குள் புகுத்தி அவனை தேவனுடைய பிள்ளையாக்கக் கூடிய கிருபையைத் தான் கொண்டிருக்கிறது என்று தவறாகப் போதிக்கிறது. அந்த அடிப்படையில் அவர்கள் கத்தோலிக்கருடைய குழந்தைகளுக்கு குழந்தை ஞானஸ்நானத்தை வழங்கி சபையில் இணைத்துக் கொள்கிறார்கள்.*

*ரோமன் கத்தோலிக்க மதத்தின் இந்த நடைமுறை சீர்திருத்தவாத காலத்தின் ஆரம்பத்தில் மாற்றப்படவில்லை. வேத அதிகாரத்தை நிலைநாட்டவும், விசுவாசத்தின் மூலமாகவே ஒருவர் நீதிமானாக முடியும் என்ற அடிப்படைப் போதனையை வலியுறுத்தியும் கத்தோலிக்க மதத்தோடு போராடிய சீர்திருத்தவாதிகள் இதில் அக்கறைகாட்டத் தவறினார்கள். திருச்சபை சீர்திருத்தம் தொடர்ந்தபோது அனாபாப்திஸ்து இயக்கத்தைச் சேர்ந்தவர்களும், சுவிட்சர்லாந்து சீர்திருத்தவாதியான சுவிங்லி போன்றோரும் திருச்சபை அமைப்பிலும் மாற்றங்கள் தேவை என்று குழந்தை ஞானஸ்நானத்துக்கு எதிராகப் போராடினார்கள். விசுவாசிகள் மட்டுமே வேதபோதனையின்படி திருமுழுக்கைப் பெற்று திருச்சபையில் இணைய வேண்டுமென்பதால் விசுவாசிக்கக்கூடிய திறனில்லாத பிறந்த குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது தவறு என்று இவர்கள் விளக்கினார்கள். சுவிங்லி இந்த விஷயத்தில் பிற்பாடு தன் கருத்தை மாற்றிக்கொண்டார். அதன்பின் அனாபாப்திஸ்துகள் திருச்சபை சீர்திருத்தத்திற்கு எதிரானவர்*

*களாகக் கருதப்பட்டு அரசாலும் ஏனையோராலும் பழிவாங்கப்பட்டனர். சீர்திருத்தவாதிகளில் பிரெஸ்பிடீரியன் திருச்சபை அமைப்பைப் பின்பற்றிய வர்கள் குழந்தை ஞானஸ்நானமளிக்கும் நடைமுறையை திருச்சபையில் தொடர்ந்தனர். இவர்கள் இன்று குழந்தை ஞானஸ்நானவாதிகள்* (Pedo-baptist) *என்ற பெயரில் அழைக்கப்படுகிறார்கள்.*

**இன்று குழந்தை ஞானஸ்நானத்தைப் பின்பற்றுபவர்கள் அதற்குத் தரும் விளக்கமென்ன?**

*ரோமன் கத்தோலிக்க மதம் இதை ஏன் பின்பற்றுகிறது என்று மேலே பார்த்தோம். ஆனால், கத்தோலிக்க மதத்தைக் கிறிஸ்தவத்தின் ஒரு பகுதி யாக ஏற்றுக்கொள்ளாத சுவிசேஷ இயக்கத் திருச்சபைகளான பிரெஸ் பிடீரியன் திருச்சபைகள்* (Presbyterian Churches) *குழந்தை ஞானஸ் நானத்தை நியாயப்படுத்த வேறுவிதமான விளக்கத்தை அளிக்கிறார்கள். அதாவது, பழைய ஏற்பாட்டின் பழைய உடன்படிக்கையின்படி இஸ்ர வேலரோடு கர்த்தர் உடன்படிக்கையொன்றை ஏற்படுத்தி அவர்களைத் தம்முடைய மக்களாகக் கருதி, அந்த உடன்படிக்கையின் அடிப்படையில் இஸ்ரவேலரின் குழந்தைகளுக்கு விருத்தசேதனம் செய்யும்படி நியாயப் பிரமாணத்தின் மூலம் கட்டளையிட்டார். இந்த வகையில் விருத்தசேதனம் பெறும் இஸ்ரவேலரின் குழந்தைகள் கர்த்தரின் உடன்படிக்கையின் பிள்ளைகளாகக் கருதப்பட்டனர். பிரெஸ்பிடீரியன் திருச்சபைகள், கர்த்தர் இஸ்ரவேலரோடு ஏற்படுத்திய இந்தப் பழைய உடன்படிக்கை புதிய ஏற்பா ட்டுக் காலத்திலும் தொடர்வதாகவும், அதன்படி புதிய ஏற்பாட்டு விசுவாசி களின் குழந்தைகளுக்கும் பழைய ஏற்பாட்டு விருத்தசேதனத்தின் அடை யாளமாக புதிய ஏற்பாட்டில் காணப்படும் ஞானஸ்நானம் அளிக்கப்பட்டு அவர்கள் திருச்சபையில் இணைத்துக்கொள்ளப்பட வேண்டும் என்றும் விளக்குகின்றனர். எனவே, அவர்கள் விசுவாசிகளினுடைய குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் அளிக்கின்றனர்.*

**இதற்கு சீர்திருத்த பாப்திஸ்துகளின் பதில் என்ன?**

*உடன்படிக்கை இறையியல்* (Covenant Theology) *பற்றி பிரெஸ்பிடீரியன் திருச்சபைகள் அளிக்கும் விளக்கத்தில் பல சிக்கல்கள் உள்ளன. முதலில், பழைய உடன்படிக்கைக்கும் புதிய ஏற்பாட்டின் புதிய உடன்படிக்கைக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை பிரெஸ்பிடீரியன் திருச்சபைகள் உணரத் தவறுகின்றன. பழைய உடன்படிக்கையின் பல அம்சங்கள் இன்றும் தொடர் கின்ற போதும் (*e.g: *பத்துக் கட்டளைகள், ஆராதனைத் தத்துவம் போன் றவை) பழைய ஏற்பாடு முக்கியமாக இஸ்ரவேல் தேசத்தோடு ஏற்படுத்தப் பட்டது. இஸ்ரவேல் தேசம் முழுவதும் விசுவாசிகளைக் கொண்டதாக இருக்கவில்லை. இஸ்ரவேல் பழைய உடன்படிக்கையை மதிக்கவில்லை; நியாயப்பிரமாணத்தையும் பின்பற்றவில்லை. இஸ்ரவேல் கர்த்தருக்குக் கீழ்ப் படியாததனால் அழிவைச் சந்தித்தது. ஆலயமும் அழிவைச் சந்தித்தது. இஸ்ரவேலின் கடின இருதயத்தின் காரணமாக கர்த்தர் தான் புதிய உடன் படிக்கையை உருவாக்குவதாக எரேமியா* ***31:31-34*** *வசனங்களில் விளக்கு கிறார். இந்த உடன்படிக்கை பழைய உடன்படிக்கைக்கும் புதிய உடன் படிக்கைக்கும் உள்ள வேறுபாட்டை விளக்குகிறது. இதையே எபிரெயர்*

நிருபம் 8 ஆம் அதிகாரமும் 10 ஆம் அதிகாரமும் தெளிவாக விளக்கி, புதிய உடன்படிக்கையின் அதாவது பழைய உடன்படிக்கையை விட மேலானதொரு உடன்படிக்கையின் மத்தியஸ்தராக கிறிஸ்து இருக்கிறார் என்று விளக்குகின்றன. பழைய உடன்படிக்கை வெளிப்புறக் கீழ்ப்படிதலை எதிர்பார்த்தது. கர்த்தரை விசுவாசித்தாலும் விசுவாசிக்காவிட்டாலும் இஸ்ரவேலர்கள் அதற்கு அடிபணிய வேண்டியிருந்தது; அடிபணிந்தவரை அவர்களைக் கர்த்தர் ஆசீர்வதித்தார். ஆனால், புதிய ஏற்பாட்டில் கர்த்தர் இருதயத்தில் கீழ்ப்படிதலை எதிர்பார்க்கிறார். ஆத்மீகக் கீழ்ப்படிதலை எதிர்பார்க்கிறார். புதிய உடன்படிக்கை பழைய உடன்படிக்கையைப் போலல்லாது மனிதனின் இருதய மாற்றத்தையும், அதன் அடிப்படையிலான பரிசுத்தமான வாழ்க்கையையும் வலியுறுத்துகிறது.

அத்தோடு, புதிய உடன்படிக்கையின் மக்கள் அனைவரும், அதாவது "சிறியவன் முதற்கொண்டு பெரியவன் வரையும் எல்லோரும்" கிறிஸ்துவை விசுவாசித்தவர்களாக இருப்பார்கள் (எபிரெ. 8:11). அவர்கள் எல்லோரும் தனிப்பட்டமுறையில் கிறிஸ்துவின் மூலம் இரட்சிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். புதிய உடன்படிக்கைக்கு சொந்தமான ஒருவரும் கிறிஸ்துவை விசுவாசிக்காதவராக இருக்க மாட்டார்கள். மேலும் புதிய உடன்படிக்கையின் திருநியமங்கள் விசுவாசிகளுக்கு மட்டுமே, அதாவது புதிய உடன்படிக்கையின் சொந்தக்காரர்களுக்கு மட்டுமே அளிக்கப்பட வேண்டும். பழைய உடன்படிக்கையின்படி சகல இஸ்ரவேலரும் (கர்த்தரை விசுவாசித்தவர்களும், விசுவாசிக்காதவர்களும்) நியாயப்பிரமாணத்தின்படி நடக்க வேண்டியிருந்தது. ஆராதனை செய்ய வேண்டியிருந்தது. புதிய உடன்படிக்கையின்படி கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் மட்டுமே திருச்சபை அங்கத்தவர்களாக முடியும். திருமுழுக்கைப் பெறவேண்டும். திருவிருந்து, சபை ஒழுங்கு மற்றும் ஏனைய சபை சலுகைகளை அநுபவிக்க முடியும். இந்தவகையில் பழைய உடன்படிக்கையைவிட புதிய உடன்படிக்கை புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டிருக்கிறது. ஆகவே, பிரெஸ்பிடீரியன் இறையியலாளர்கள் பழைய உடன்படிக்கை புதிய ஏற்பாட்டில் தொடர்வதாக எண்ணுவது தவறு. அவர்கள் விடுகின்ற மிகப்பெரிய இறையியல் தவறு பழைய ஏற்பாட்டின் அடிப்படையில் புதிய ஏற்பாட்டை வாசித்து பழைய ஏற்பாட்டைப் புதிய ஏற்பாட்டிற்குள் திணிப்பதுதான். உண்மையில் புதிய ஏற்பாடில்லாமல் பழைய ஏற்பாட்டை ஒருவரும் புரிந்து கொள்ள முடியாது. புதிய ஏற்பாட்டின் அடிப்படையிலேயே பழைய ஏற்பாட்டை எப்போதும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

புதிய உடன்படிக்கையின்படி புதிய ஏற்பாட்டில் விசுவாசிகளின் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்து திருச்சபையில் உடன்படிக்கையின் பிள்ளைகளாக சேர்க்க வேண்டும் என்ற போதனையை எங்குமே பார்க்க முடியாது. இதை வலியுறுத்தும் குழந்தை ஞானஸ்நானவாதிகள் பழைய ஏற்பாட்டில் இதற்கான போதனையிருப்பதால் புதிய ஏற்பாட்டில் இதற்கான விளக்கம் தேவையில்லை என்கிறார்கள். அத்தோடு, குழந்தை ஞானஸ்நானத்திற்கான எந்த அடையாளமும் இல்லாத பகுதிகளை எல்லாம் தங்களுடைய போதனையை வலியுறுத்தப் பயன்படுத்துகிறார்கள். இதற்காக

இவர்கள் உதாரணங்காட்டும் மத்தேயு 19:14 வசனத்தில் இயேசு, எல்லாக் குழந்தைகளும் தன்னைப் பார்த்துப் பேசத் தடையில்லை என்றுகூறி அவர் களைத் தன்னிடத்தில் வரச் சொன்னாரே தவிர அவர்களுக்கு ஞானஸ் நானம் கொடுப்பதற்காக அழைக்கவில்லை. அப்போஸ். 2:39 வசனத்தில், "உங்கள் பிள்ளைகளுக்கும்" என்றிருப்பதைவைத்து குழந்தை ஞானஸ்நான த்தை வலியுறுத்துவது முட்டாள்தனம். அடுத்ததாக, குடும்ப ஞானஸ்நானப் பகுதிகளைப் பயன்படுத்தியும் தங்கள் கருத்தை இவர்கள் வலியுறுத்தப் பார்க்கிறார்கள். கொர்நேலியு (அப்போஸ். 10); லீதியாள் (அப்போஸ். 16); பிலிப்பி பட்டணத்து சிறைச்சாலைக்காரன் (அப்போஸ். 16); சொஸ்தெனே (1 கொரி. 1) ஆகியோரின் குடும்பங்கள் ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டதாக வேதத்தில் வாசிக்கிறோம். இப்பகுதிகளில் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்கள் சுவிசேஷத்தை ஏற்கனவே கேட்டு மனந்திருந்தி கிறிஸ்துவை விசுவாசித்தார்கள் என்று தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. அத்தோடு, ஏற்கனவே புதிய ஏற்பாடு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களுக்கு மட்டும்தான் ஞானஸ்நானம் கொடுக்கப்படவேண்டும் என்று போதித்திருக்க இந்தப் பகுதிகளை அந்தப் போதனைக்கு முரணாகப் பயன்படுத்தி இந்தக் குடும்பங்களில் இருந்த குழந்தைகளுக்கும் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது என்று விளக்குவது சிறுபிள்ளைத்தனமானதும் வேத விளக்க விதிகளின் அடிப்படையில் முழுத்தவறுமாகும். உண்மையில் இப்பகுதிகளில் உள்ள குடும்பங்களில் கிறிஸ்துவை விசுவாசித்த அனைவரும் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்றே விளங்கிக்கொள்ள வேண்டும். அக்குடும்பங்களில் குழந்தைகளும் இருந்திருக்கலாம் என்றும் அவர்கள் விசுவாசிக்காமலேயே ஞானஸ்நானம் பெற்றார்கள் என்றும் ஊகிப்பது தவறு.

அத்தோடு 1 கொரி. 7:14 வசனத்தில் "அவிசுவாசியான புருஷன் தன் (விசுவாசியான) மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகிறான்" என்றும் அவர் களுடைய பிள்ளைகளும் பரிசுத்தமாக இருக்கின்றன என்றும் விளக்கப்பட் டுள்ளது. இந்தப் பகுதி ஞானஸ்நானத்தையோ அல்லது சபை அங்கத்துவத் தையோ பற்றி எந்த விளக்கமும் தரவில்லை. இப்பகுதி திருமண உறவைப் பற்றி மட்டுமே விளக்குகிறது. திருமணத்துக்குப் பிறகு இரட்சிப்பை அடை ந்த மனைவி, இரட்சிப்பை அடையாத கணவனுடன் தொடர்ந்து வாழ லாமா? என்பதுபற்றியே பவுல் இங்கு விளக்குகிறார். அந்தப் பிள்ளைகள் திருமண உறவின் மூலமாகப் பிறந்திருப்பதால் அவை அசுத்தமாகப் பிறக்கா மல் பரிசுத்தமாகவே பிறந்திருக்கின்றன. ஆகையால் கணவன் தொடர்ந்து சேர்ந்து வாழவிரும்பினால் விசுவாசியான மனைவி சேர்ந்து வாழவேண்டும் என்பது மட்டுமே பவுலின் போதனை. இதை விட்டுவிட்டு பிள்ளைகள் "பரிசுத்தமாயிருக்கின்றன" என்ற வார்த்தையை மட்டும் வைத் துக்கொண்டு அவை ஞானஸ்நானம் பெற்று சபையில் இணைந்திருந்தன என்று விளக்கப் பார்ப்பது மிகவும் சிரிப்புகிடமான விளக்கம். ஆகவே, குழந்தை ஞானஸ் நானத்திற்கு புதிய ஏற்பாட்டில் இடமேயில்லை. அது முழுத்தவறு. மேலும், கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டு கிறிஸ்துவை விசுவாசித்து திருமுழுக் குப் பெற்றவர்களை மட்டும் கொண்டிருப்பதே திருச்சபை என்ற தெளி வான வேதபோதனைக்கு எதிராக குழந்தைஞானஸ்நானம் அமைகிறது.

# கேள்வி? - பதில்!

**கேள்வி: "கிறிஸ்தவ சபை" என்ற பெயரில் ஒரு பிரிவு நம் நாட்டில் இருக்கிறது. அது மட்டுமே உண்மையான சபை என்று அவர்கள் கூறுகிறார்கள். அதன் அங்கத்தவர்கள் சபை ஆரம்பித்தால் கிறிஸ்துவின் பெயரில் மட்டுந்தான் ஆரம்பிக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். இதற்கு மத்தேயு 16:18 வசனத்தை உதாரணம் காட்டுகிறார்கள். இது எந்தளவுக்கு உண்மை என்பதை விளக்குவீர்களா? - இம்மானுவேல் எலியாஸ், தமிழ் நாடு.**

**பதில்:** *இந்த சபைப் பிரிவு பற்றியோ அதன் கோட்பாடுகள் பற்றியோ எனக்கு அதிகம் தெரியாது. ஓரளவுக்கு மட்டுமே இதைப்பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். இதே பெயரில் மேலை நாடுகளில் ஒரு சபைப் பிரிவு இருக்கிறது. ஆனால், அது 'லிபரல்' கோட்பாட்டைப் பின்பற்றும் பிரிவாகும்.*

*"கிறிஸ்தவ சபை" என்று தங்களை அழைத்துக்கொள்கிறவர்கள் அவர்களுடைய சபை மட்டுந்தான் மெய்ச்சபை என்று கூறுகின்றார்கள் என்றால் அது முழுத்தவறு. அமெரிக்காவில் லேன்ட்மார்க் பாப்திஸ்து சபைகள்* (Landmark Baptists) *என்று இருக்கின்றன. இவர்கள் தங்கள் சபைகள் மட்டுமே அப்போஸ்தலர்கள் காலத்தில் இருந்து தொடரும் மெய்ச்சபைகள் என்று சொல்லி ஏனைய சபைகளை சபைகளாகக் கருதாதது மட்டுமன்றி தங்களுடைய சபையில் இருப்பவர்களுக்கு மட்டுமே திருவிருந்தும் கொடுப் பார்கள். இதிலிருக்கும் ஆபத்து என்னவென்றால் கிறிஸ்துவை மெய்யாகவே விசுவாசித்து அவருக்கு சாட்சியாக இருக்கும் ஏனைய திருச்சபைகளை* (Universal Church) *இவர்கள் நிராகரிப்பது மட்டுமல்லாமல், இவர்களுடைய சபைக்கு வெளியில் இருக்கும் கிறிஸ்தவர்களையும் கிறிஸ்தவர்களாக இவர் கள் அங்கீகரிக்காமல் போவதுதான். வேதம் இத்தகைய எண்ணப் போக்கை வெறுக்கிறது. மெய்ச்சபைகள் போலிச்சபைகளோடுதான் உறவாடக்கூடாது, சமயசமரசப் போக்கில் போகும் சபைகளோடும் தொடர்பு வைக்கக்கூடாது. நிச்சயமாக வேத அதிகாரத்துக்கு தலைசாய்த்து செயல்பட மறுக்கும் பெந்த கொஸ்தே, கெரிஸ்மெடிக் கூட்டத்தோடு சேர்ந்து வாழ முடியாது. வேதத்தை நிராகரித்து மனித சிந்தனைகளின் அடிப்படையில் செயல்படும் சபைக ளோடும் சேர்ந்து ஆராதிக்கவோ, உழைக்கவோ கூடாது. ஆனால், சுவிசே ஷத்தை நம்பி விசுவாசித்து வேத அடிப்படையில் செயல்படும் எல்லா சபைகளையும் நாம் கர்த்தருடைய சபைகளாக அங்கீகரிக்க வேண்டும், அவர்களை சகோதரர்களாக எண்ண வேண்டும். அத்தகைய சபைகளோடு தொடர்பு கொண்டு அவர்களுக்காக ஜெபிப்பதும், சகோதரத்துவத்தில் இணைந்து வளர்வதும் அவசியம். ஒருபுறம் போலிகளோடு சேர்ந்து நாம் விசுவாசத் துரோகிகளாக மாறிவிடாமல் இருக்கவேண்டிய அவசியமிருக் கிறது; இன்னொருபுறம் மெய்ச்சபைகளோடு இணைந்து கர்த்தரை மகிமைப் படுத்த வேண்டிய கடமையும் இருக்கின்றது. நமது சபைகளை மட்டுமல்லாது கிறிஸ்து உலகம் முழுவதும் தம்முடைய சபைகளைக் கட்டி வருகிறார்.*

அடுத்ததாக, உள்ளூர் திருச்சபைக்கு பெயர் வைக்கக் கூடாது என்றும் அப்படி வைத்தால் அது “கிறிஸ்து சபை” என்று மட்டுந்தான் இருக்க வேண்டும் என்ற கூற்றை ஆராய்வோம். இது கேட்பதற்கு நன்றாய் இருக்கிறது. ஆனால், நடைமுறைக்குப் பொருந்தாது. இப்படி சொல்பவர்கள் மத்தேயு 16:18 வசனத்தை உதாரணம் காட்டுவார்கள். ஆனால், அந்த வசனம் என்ன சொல்கிறது என்று பார்ப்போம். இந்த வசனத்தில் காணப்படும் “சபை” என்ற வார்த்தை ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருக்கும் சபையை மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் இயேசு கட்டிவரும் சபைகளனைத்தையும் ஒட்டுமொத்தமாகக் குறிக்கிறது. அத்தோடு, கிறிஸ்துவின் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களனைவரையும் இந்தப் பதம் குறிப்பதாகவும் எடுத்துக் கொள்வதில் தவறில்லை. இந்த வசனத்தின் மூலம் இயேசு தன்னுடைய பணி இந்த உலகத்தில் திருச்சபையைக் கட்டுவதுதான் என்றும், அந்தத் திருச்சபையை எந்த சக்தியாலும் அழிக்க முடியாது என்று மட்டுமே கூறுகிறார். இயேசு கட்டடப் போகிற சபைகள் அனைத்தும் அவருக்கு சொந்தமானவை; அவராலேயே அவை கட்டப்படும். அதற்கு மேல் இந்த வசனத்தில் இருந்து எதையும் விளங்கிக்கொள்ள முயல்வது ஆபத்து. சபைக்குப் பெயர் வைப்பதற்கும் இந்த வசனத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

சபைகளுக்கு “கிறிஸ்து சபை” என்று மட்டுந்தான் பெயர் வைக்க வேண்டும் என்று சொல்லுகிறவர்கள் புதிய ஏற்பாட்டு நூல்களை சுட்டிக்காட்டி கொரிந்துவில் இருந்த சபை கொரிந்துவிலிருந்த தேவனுடைய சபை என்றும் தெசலோனிக்கேயாவில் இருந்த சபை தெசலோனிக்கேயாவிலிருந்த தேவனுடைய சபை என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இக்காலத்து சபைகளும் அப்படித்தான் அழைக்கப்பட வேண்டும் என்கிறார்கள். அப்படியானால் எபேசுவில் இருந்த சபையைப்பற்றி பவுல் எழுதும்போது எபேசுவில் இருந்த தேவனுடைய சபை என்று எழுதாது, “எபேசுவிலே கிறிஸ்துவை விசுவாசிக்கும் பரிசுத்தவான்கள்” (எபேசி. 1:1) என்று மட்டுமே எழுதுகிறார். இதேபோல்தான் பிலிப்பு சபையைப் பற்றியும், கொலோசெ சபையைப் பற்றியும் எழுதியிருக்கிறார். இதைவைத்து நாம் தெசலோனிக்கேயாவிலும், கொரிந்துவிலும், கலாத்தியாவிலும் மட்டுந்தான் சபைகள் இருந்தன, மற்ற இடங்களில் எல்லாம் பரிசுத்தவான்கள் மட்டுந்தான் இருந்திருக்கிறார்கள் என்று விளக்கம் தரமுடியுமா? அப்படி விளக்கமளிப்பது அடிமுட்டாள்தனம். இதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது? இந்த உலகத்தில் கட்டப்படுகின்ற திருச்சபைகள் ஒவ்வொன்றிற்கும் பெயர் வைப்பது அவசியமா என்ற கேள்விக்கு வேதம் நேரடியாக பதிலளிக்கவில்லை என்று புரிகிறது. அப்போஸ்தலர் காலத்தில் ஆசியா மைனரில் உள்ளூர் சபைகள் இருந்தன என்பதற்கு தேவையான அனைத்து அடையாளங்களையும் வேதம் சுட்டிக் காட்டுகிறது. இடங்களின் பெயர்கள் தரப்பட்டிருக்கின்றன, சபைகளின் அமைப்பு, அதிகாரம், நிர்வாகம் பற்றிய விளக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன. அவைகள் உள்ளூர் சபைகள்தான் என்பதற்கான அத்தனை ஆதாரங்களும் வேதத்தில் இருக்கின்றன. அதற்கு மேலுள்ள விஷயங்களை நம்முடைய பொது அறிவையும், கிறிஸ்தவ ஞானத்தையும் பயன்படுத்தி நாம் அணுக வேண்டும் என்று வேதம் எதிர்பார்க்கிறது. உதாரணத்திற்கு, உள்ளூர் சபை எத்தனை மணிக்குக் கூடிவர வேண்டும், எத்தகைய கட்டிடத்தில் கூட

வேண்டும், எத்தனை தடவைகள் ஓய்வுநாளில் ஆராதனை நடத்த வேண்டும், வார நாட்களில் திருச்சபை செய்ய வேண்டியது என்ன என்பது பற்றி யெல்லாம் வேதம் பட்டியலிட்டு விளக்கங்களை அளிக்கவில்லை. இதெல் லாம் மிகவும் அவசியம் என்பது நமக்குத் தெரியும். வேதத்தின் பொதுவான போதனைகளின் அடிப்படையில் பொது அறிவைப் பயன்படுத்தியே இந்த விஷயங்களில் நாம் முடிவெடுகிறோம்.

அதேபோல்தான் உள்ளூர் சபைக்கு பெயர் வைப்பதும். பிறந்த குழந்தை க்கு பெயர் வைக்காதவர்கள் இருக்கிறார்களா? பெயர் ஒரு மனிதனை அவன் யார் என்று உலகத்துக்கு அறிவிக்கிறது. நாடுகளுக்கு பெயர்கள் இல்லாமலா இருக்கிறது? இந்தியா என்பது நாட்டின் பெயராக இருப்ப தோடு அந்நாட்டின் ஒவ்வொரு மாநிலத்துக்கும் பெயர் இருந்து அவை அந்தந்த மாநிலங்களை அடையாளம் காட்டுகின்றன. அதுபோல் இன்றைக்கு கிறிஸ்துவின் பெயரை சூட்டிக்கொண்டு பிசாசின் கையாளாக இருக்கும் ரோமன் கத்தோலிக்க மதம், யெகோவாவின் சாட்சிகள், மோர் மன்ஸ், கிரிஸ்டொடொல்பியன்ஸ், கிரிஸ்டியன் சயன்ஸ் போன்ற பிசாசின் கூட்டங்களில் இருந்தும், செத்துப்போன பாரம்பரிய சபைகளில் இருந்தும், பெந்தகொஸ்தே இயக்கத்தில் இருந்தும் நமது சபைகளைப் பிரித்துக்காட்டு வதற்கு நாம் விசுவாசிக்கும் வேதபோதனைகளின் அடிப்படையில் அமைந்த நல்ல பெயர்கள் அவசியம். பெயர்களே எல்லாம் ஆகிவிடாவிட்டாலும், பெயர்கள் அந்தந்த சபைகளின் விசுவாசத்தை வெட்கமில்லாமல் வெளிப்படையாக அறிவிக்க உதவுகின்றன. வேதம் இதற்கு நிச்சயம் அனுமதி யளிக்கின்றது. எங்கள் சபைக்கு “சவரின் கிறேஸ் சீர்திருத்த பாப்திஸ்து சபை” என்று பெயர். இது வேதபூர்வமான பெயர்தான். “சவரின் கிறேஸ்” (Sovereign Grace) கர்த்தரின் இறையாண்மையைக் குறிக்கிறது. “சீர்திருத்த பாப்திஸ்து” (Reformed Baptist) என்ற பதங்கள் நாங்கள் எத்தகைய பாப் திஸ்துகள் என்று விளக்குகின்றன. இது அவசியம். ஏனெனில், பாப்திஸ்து களிலும் வேதத்தின் அதிகாரத்தையும் அதன் போதனைகளையும் அசட்டை செய்து சமயசமரசப் போக்கைப் பின்பற்றும் பச்சோந்திகள் இருப்பதால் நம்மையும் நம்மோடு சார்ந்தவர்களையும் இவ்வாறு பிரித்து அடையாளம் காட்ட நேரிடுகிறது.

ஆதிசபைக் காலத்தில் இருந்த சபைகள் தொகை குறைவு. அத்தோடு அவை அனைத்துமே அப்போஸ்தலர்களின் கட்டுப்பாட்டிலும், அவர்களு டைய கண்காணிப்பிலும் இருந்தன. அதனால் சபைப் பெயர்களுக்கு இன்றி ருக்கும் அளவுக்கு அவசியம் இருக்கவில்லை. முதல் மூன்று நூற்றாண்டு களுக்குப் பிறகு போலிப்போதனைகள் உலகில் மலிந்துவிட்டன. இன்று நம்மத்தியில் அவை தலைகால் இல்லாமல் திரிகின்றன. எனவே உள்ளூர் திருச்சபைகள் தம்மைத் தெளிவாக இனங்காட்டிக் கொள்ளுவதற்கும், பாதுகாத்துக் கொள்ளுவதற்கும் அவசியமாக இன்றைக்கு வேதபூர்வமான தொரு பெயரையும், விசுவாச அறிக்கையையும் கொண்டிருப்பது அவசியம். பெயரோடு மட்டும் இருந்துவிடாமல் அந்த பெயருக்கு களங்கம் வந்து விடாத வகையில் அவர்களுடைய விசுவாசமும், போதனைகளும், சபையின் நடைமுறை வாழ்க்கையும் இருக்குமாறும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

# சுவிட்ஸர்லாந்தில் சீர்திருத்தம்

## அல்ரிக் சுவிங்லி (Ulrich Swingli)

சீர்திருத்தவாதம் நெருப்புப் போல் ஐரோப்பாவில் பரவியபோது லூதரின் போதனைகள் ஜெர்மனியில் இருந்து டென்மார்க், நோர்வே, சுவீடன் ஆகிய நாடுகளில் பரவி இறுதியில் அந்நாடுகளின் உத்தியோகபூர்வமான மதம் என்ற இடத்தையும் பிடித்தது. ஆனால், இதேவேளையில் சுவிட்ஸர்லாந்தில் இன்னொரு வகையான புரொட்டஸ்தாந்து பிரிவு உருவாகியது. ஜெர்மனி யில் ஏற்பட்டதுபோன்ற புரட்சிகரமான நிகழ்ச்சிகள் எதுவும் சுவிட்ஸர்லாந் தில் நிகழாவிட்டாலும் இங்கு உருவான சீர்திருத்தம் மிகவும் முக்கியமானது. லூதரனிசத்தில் காணப்பட்டது போன்ற பாரம்பரிய விசுவாசம் சுவிட்ஸர் லாந்து சீர்திருத்தப் பிரிவில் காணப்படவில்லை. “வேதம் மட்டுமே சர்வ அதிகாரம் கொண்டது” என்ற உயர்ந்த நம்பிக்கையை அடித்தளமாகக் கொண்டெழுந்த இப்பிரிவு படங்கள், சிலைகள், விசேஷ அம்சங்கள், யாத் திரை போகுதல் போன்ற அத்தனையையும் ஒட்டுமொத்தமாக ஆராதனை யில் இருந்து விலக்கி வைத்தது. பொது ஆராதனையில் ஆர்கன் (Organ) வாசிப்பதையும் விட்டெறிந்தது. இந்தவகையில் சுவிட்ஸர்லாந்தில் உருவான சீர்திருத்தவாதம் ஜெர்மனியில் ஆரம்பித்ததைவிட மிகவும் புரட்சிகரமாக இருந்தது. இந்த சீர்திருத்தவாத பிரிவு மிக இலகுவாக பிரான்சு, ஸ்கொட் லாந்து, ஹங்கேரி, ஒல்லாந்து மட்டுமல்லாமல் ஜெர்மனியின் பெரும்பகுதிக் கும் பரவியது.

சுவிட்ஸர்லாந்தில் ஏற்பட்ட திருச்சபை சீர்திருத்தத்திற்கு காரணகர்த்தா வாக இருந்த அல்ரிக் சுவிங்லி (Ulrich Zwingli) மத குருவாகவும் மிகுந்த படிப்பாளியும் நாட்டுப் பற்றுடையவராகவும் இருந்தார். இவர் மார்டின் லூதருடைய போதனைகளின் பாதிப்பில்லாமல் சொந்தமாகவே ரோமன் கத்தோலிக்க மதத்துக்கெதிரான தன்னுடைய கருத்துக்களை வளர்த்துக் கொண்டிருந்தார். வியன்னாவிலும் (Vienna), பேசல்லிலும் (Basel) இருந்த பல்கலைக் கழகங்களில் திறமைவாய்ந்த இடத்தை வகித்தபின் கிளேரசின் (Glarus) மதகுருவாக சுவிங்லி நியமனம் பெற்றார். அதன்பின் சூரிக்கில் (Zurich) இருந்த பெரும் கதீட்ரல் சபைக்கு பணிபுரிய அழைக்கப்பட்டார். போப்பின் இராணுவத்தில் சேருவதையும், வெளிநாட்டில் போரிடும் இரக சியப் படைகளில் சேருவதையும், கத்தோலிக்க சபையின் கேடுகளையும், குருட்டு நம்பிக்கைகளையும் தன்னுடைய பிரசங்கங்களில் கடுமையாகச் சாடினார். அத்தோடு போப்பின் பாவ மன்னிப்பு பத்திர விற்பனையையும் கடுமையாக எதிர்த்தார். தேவனுடைய வார்த்தையையே தன்னுடைய அதிகாரமாகக் கொண்டு பொது விவாதங்களில் கலந்துகொண்டு ரோமன் கத்தோலிக்க மதபோதனைகளின் தவறுகளைச் சுட்டிக்காட்டினார். சூரிக் நகரக் கவுன்சில் சுவிங்லிக்குப் பெரும் ஆதரவாக இருந்ததோடு 1522 ஆம்

ஆண்டில் சுயாதீனமாக ஒரு சபையையும் நிறுவியது.

1528 ஆம் ஆண்டில் புனித கோலிலும் (St. Gall), 1529 ஆம் ஆண்டில் பேசலிலும், முயல்ஹௌசனிலும் (Muhlhausen), ஸ்சாப்ஹௌசனிலும் (Schaffhausen) சீர்திருத்தம் வெற்றிகரமாக நிகழ்ந்தது. இந்த நகரங்கள் அனைத்தும் புரொட்டஸ்தாந்து பிரிவையும், குடியரசாட்சியையும் பின்பற்றி சுவிங்லியின் போதனையின்படியான சீர்திருத்தத்துக்கு தம்மை உட்படுத்திக் கொண்டன. இதன் காரணமாக ஆபத்து ஏற்படாமலில்லை. கத்தோலிக்க மதத்துக்கு ஆதரவாக இருந்தவர்கள் ஆஸ்திரிய நாட்டரசனான பேர்டி னன்டுடன் உறவுபூண்டு சுவிட்சர்லாந்தில் நிகழ்ந்து வந்த சீர்திருத்தத்தை அழிக்க முயன்றனர். அரசன் பேர்டினன்ட் பலதடவைகள் வரப்போகின்ற ஆபத்தைப் பற்றி எச்சரிக்கை செய்தும் சீர்திருத்தவாதிகள் தம்மை எதிர்ப் புக்கு தயார் செய்துகொள்ளவில்லை. இறுதியில் கத்தோலிக்கர்கள் படை யோடு வந்து சூரிக்கை தாக்கினார்கள். அவர்களோடு கேப்பல் திடலில் (Field of Cappel) போரிட்ட சுவிங்லி தன்னைப் பின்பற்றியவர்களோடு வீர மரணத்தைத் தழுவினார். ஜோண் கல்வினைவிட புரட்சிகரமான எண்ணங் களைக் கொண்டிருந்த சுவிங்லி சீர்திருத்தவாதத்தின் பெருந்தலைவர்களில் ஒருவர் என்பது மிகையாகாது.

## ஜோண் கல்வின் (John Calvin)

சீர்திருத்தவாத காலத்தின் மிக முக்கிய தலைவர்களில் ஒருவர் ஜோண் கல்வின் என்பதில் வரலாற்றாசிரியர்கள் ஒருமனப்பட்ட கருத்தைக் கொண் டிருக்கிறார்கள். கல்வினைப் பற்றிய தவறான கருத்துடையவர்கள் நம்மத்தி யில் அநேகர். இவர்கள் ஒருதடவை கல்வினின் ஆக்கங்களை வாசித்துப் பார்த்தார்களானால் அவர் எத்தனை அற்புதமான இறையியல் ஞானி, பிரசங்கி, போதகர், சீர்திருத்தவாதி என்பதை உணர முடியும்.

1509 ஆம் ஆண்டில் ஜூலை மாதம் 10 ஆம் திகதி ஜோண் கல்வின் பிரான்ஸ் (France) நாட்டில் நோயோன் (Noyon) என்ற இடத்தில் பிறந்தார். அவருடைய குடும்பம் உயர்குலத்துடன் உறவுபூண்டதாக இருந்ததால் அவர்களோடு இணைந்து கல்வி பயிலும் வாய்ப்பை அவர் பெற்றிருந்தார். தன்னோடு பலவிதங்களில் முரண்பாடுடையவர்களிடம் மிகவும் அன்புகாட்டியவராக கல்வின் இருந்தார். மார்டின் லூதர் (Martin Luther), மெலாங்தன் (Melanchthon), பியூஸர் (Bucer), ஜோண் நொக்ஸ் (John Knox) ஆகியோர் தன்னோடு சில விஷயங்களில் தீவிரமாக முரண்பட்ட போதும் அவர்கள் மேல் கல்வின் தொடர்ந்து அன்புகாட்டினார். கல்வினின் தந்தை அவரை முதலில் குருப்பயிற்சிக்கு அனுப்பத் தீர்மானித்திருந்தார். அதற்குப் பிறகு அவரை ஓர்லீன்சுக்கு (Orleans) சட்டம் பயில அனுப்பி வைத்தார். பாரிசில் இருந்தது போலவே இங்கும் திறமையாகக் கல்வி கற்று சிறந்த மாணவன் என்ற பெயரைப் பெற்றார் கல்வின். மனிதநலவாதிகளான ஆசிரியர்களிடம் கல்வி பயின்ற கல்வின் கிளாசிகள் படிப்புகளில் அதிக ஊக்கங்காட்டினார். சட்டப் படிப்பும், பிரெஞ்சு தேசத்தாருக்கே உரிய தத்துவரீதியிலான நுணுக்கமான சிந்தனா சக்தியும் கல்வினை மிகவும் திறமை வாய்ந்த முறைப்படுத்தப்பட்ட இறையியல் வல்லுனர்களில் ஒருவர்

என்ற சிறப்பை அவருக்குப் பின்னால் பெற்றுத் தந்தது.

1532ஆம் ஆண்டில் தந்தையை இழந்த கல்வின் ஓர்லீன்சில் இருந்து பாரிசுக்குத் திரும்பி அங்கே சில புரொட்டஸ்தாந்து குழுவினருடன் இணைந்து ஜெபம் செய்வதிலும், வேதத்தை ஆராய்ந்து படிப்பதிலும் ஈடுபட்டார். அடுத்த வருடமே கல்வினின் சுவிசேஷக் கருத்துக்களாலும், நிக்கொலாஸ் கொப் (Nicolas Cop) என்னும் தன்னுடைய நண்பருக்கு "கிறிஸ்தவ தத்துவம்" (Christian Philosophy) என்ற தலைப்பில் அவர் எழுதிய ஆக்கத்தினாலும் ஆபத்து வந்தது. நிக்கொலாஸ் கொப் பாரிஸ் பல்கலைக்கழகத்தின் தலைவராக இருந்தார். பாரிஸைவிட்டு வெளிவந்த கல்வின் ஸ்ட்ரெஸ் பேர்கிற்கு (Strasburg) வந்தார். அங்கே சீர்திருத்தவாத காலத்தின் பெரும் இறையியல் வல்லுனர்களில் ஒருவராக இருந்த மார்டின் பியூஸரை (Martin Bucer) சந்தித்தார். அந்நகரத்தின் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக போஸர் இருந்துவந்தார். 1535 ஆம் ஆண்டில் கல்வின் பேசில் நகரில் அகதியாகக் குடியேறித் தன்னுடைய படிப்பைத் தொடர்ந்தார். அந்த வருடமே அவர் "கிறிஸ்தவத்தைப் பற்றிய அறிமுகம்" (The Institutes of Christian Religion) என்ற ஒரு நூலை வெளியிட்டார். அது பிரெஞ்சு அரசனுக்கு கிறிஸ்தவத்தை அறிமுகம் செய்து விளக்கியதாக இருந்தது. சீர்திருத்த இறையியலை முறைப்படுத்தி விளக்கி எழுதப்பட்ட முதல் ஆக்கமாக இது இருந்தது. பின்னால் திருத்தி எழுதப்பட்டு வெளிவந்த பதிப்புகளைவிட ஆரம்பத்தில் மிகச் சிறியதாக இருந்தபோதும், இருபத்தாறு வயது மட்டுமே நிரம்பிய ஒருவரால் எழுதப்பட்ட மிகச் சிறந்த இறையியல் ஆக்கமாக இன்றுவரை இருந்து வருகிறது. இதுவரை எழுதப்பட்டுள்ள இறையியல் ஆக்கங்களில் எதுவுமே இதன் இடத்தை இதுவரைப் பிடிக்கவில்லை. இன்றும்கூட சீர்திருத்த திருச்சபைகள் மத்தியிலும், கிறிஸ்தவர்கள் மத்தியிலும் தொடர்ந்து மதிக்கப்பட்டு அதிகம் விற்பனையில் இருந்து வருகிறது கல்வினுடைய நூல்.

கல்வின் தன்னுடைய நூலை அப்போஸ்தலர்களுடைய கோட்பாடுகளின் அடிப்படையில் எழுதி, புரொட்டஸ்தாந்து பிரிவினர் அப்போஸ்தலக் கோட்பாடுகளை பெரிதும் விசுவாசிக்கிறவர்களென்றும், விசுவாசத் துரோகிகளல்ல என்பதையும் எடுத்துக்காட்டியிருந்தார். சீர்திருத்தவாதிகளான மார்டின் லூதரும், ஜோண் கல்வினும் புதிதாக ஒரு இறையியலை திருச்சபைக்கு அறிமுகப்படுத்தாமல் ஆதியில் அப்போஸ்தலர்களின் காலத்தில் இருந்து விசுவாசித்து பின்பற்றப்பட்டு வந்த அதே கோட்பாடுகளையும் நடைமுறைகளையும் கிறிஸ்தவர்கள் பின்பற்ற வேண்டுமென்பதையே வலியுறுத்தி வந்தனர். இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை முழுமையாக விசுவாசித்து, முதல் மூன்று நூற்றாண்டுகளுக்கு திருச்சபை பின்பற்றி வந்த கோட்பாடுகளையும், நடைமுறையையும் மறுபடியும் திருச்சபை பின்பற்ற வேண்டும் என்பதை கல்வின் ஆணித்தரமாக வலியுறுத்தி வந்தார்.

1536 ஆம் ஆண்டில் ஜெனிவாவுக்கு கல்வின் வந்திருந்தபோது உள்ளூர் போதகராக இருந்த வில்லியம் பெரல் (William Farel) அவருடைய அறைக்குள் திடுதிப்பென்று நுழைந்து, நீர் எல்லாவற்றையும் விட்டுவிட்டு திருச்சபை சீர்திருத்தத்தில் ஈடுபட வேண்டும் என்று கர்த்தரின் நாமத்தில் அதி

காரத்துடன் கட்டளையிட்டார். அதற்கு முன் வருடந்தான் ஜெனிவா புரொட்டஸ்தாந்து பிரிவைத் தழுவியிருந்தது. இதற்கு அரசியலும் பெருங் காரணமாக இருந்தது. நகரத்து மக்கள் போப்பினதும், சவோய் டியூக்கினதும் அதிகாரத்தின் கீழ் தொடர்ந்திருப்பதை விரும்பவில்லை. அவர்கள் சுதந்திர மாக இயங்க விரும்பினர். ஒழுக்கக்கேட்டுக்கு பேர் பெற்றிருந்த நகரத்தில் ஏற்பட்ட இந்த மாற்றம் ஆத்மீக மாற்றத்திற்கான அறிகுறியல்ல. இப்போது சுதந்திரமடைந்த நகரத்தில் அதன் பெயரில் மோசமான ஒழுக்கக்கேடுகள் தலைதூக்க ஆரம்பித்தன. இதெல்லாம் நெருக்கியதன் விளைவாகவே வில்லியம் பெரல் இதற்கு கல்வின் தமக்கு உதவலாம் என்ற நம்பிக்கையில் அவருடைய இருப்பிடத்தைத் தேடிப்போய் தம்மோடு இணைந்துழைக் கும்படி வற்புறுத்தினார். ஆனால், கல்வினின் மனமோ இலக்கியப் பணி யிலும் வேறு விஷயங்களிலும் ஈடுபடுவதில் லயித்திருந்தது. ஆனால், பெரலின் வார்த்தைகள் கல்வினின் இதயத்தைத் தாக்கி அவர் எந்தவித சாக்குப்போக்கும் சொல்லமுடியாதபடி செய்தது. கர்த்தர் தமக்கு இப்படி யாக வழிகாட்டுகிறார் என்பதை உணர்ந்த கல்வின் ஜெனிவாவில் ஏற்பட்ட சீர்திருத்தத்தோடு தம்மை இணைத்துக் கொண்டார்.

காலத்தைத் தாழ்த்தாமல் கல்வின் உடனடியாக ஜெனிவா திருச்சபைக்கு அவசியமான ஒரு விசுவாச அறிக்கையையும், வேத அடிப்படையிலான சபை அமைப்பையும் உருவாக்குவதில் ஈடுபட்டார். அத்தோடு சிறுவர் களுக்கான ஒரு வினாவிடைப் போதனையையும் தயாரித்தார். தன்னுடைய பிரசங்கங்களில் ஜெனிவாவின் ஒழுக்கக்கேட்டிற்கு ஆதாரமாக இருந்த வற்றை அடியோடு தாக்க ஆரம்பித்தார். கல்வின் அந்நகருக்கு வருவதற்கு முன்னே நகராட்சியாளர்கள் சூதாட்டம், குடி, ஆட்டபாட்டங்கள், ஊதா ரித்தனமாக ஆடை அணிதல் போன்றவற்றிற்கெதிராக சட்டங்களை ஏற் படுத்தியிருந்தனர். ஆனால், மக்கள் மத்தியில் இருதய மாற்றம் ஏற்படாத தால் இந்த சட்டங்கள் பலனளிக்கவில்லை. தனிமனித சுதந்திரத்தில் தலை யிடக்கூடிய நகராட்சி ஏற்படுத்திய இந்த சட்டங்களுக்காக கல்வினை குறைகூறுவது மிகவும் தவறு. அக்காலத்தில் ஒவ்வொரு நகரமும் இத்தகைய சட்டங்களை வைத்திருந்தது.

ஆனால், திருச்சபை மக்கள் புதிய ஏற்பாட்டுப் போதனைகளின்படி தங்களுடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று கல்வின் வற்புறுத்தினார். இதை நடைமுறைப்படுத்துவதற்காக திருச்சபை ஒழுங்கு நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டுமென்றும், ஒழுங்கு தவறி நடக்கும் சபை அங்கத்தவர்களுக்கு திருவிருந்து கொடுப்பதை நிறுத்த வேண்டும் என்றும் கல்வின் சபையைக் கேட்டுக்கொண்டார். அத்தோடு திருந்த மறுக் கும் அங்கத்தவர்களை சபை நீக்கம் செய்வதும் அவசியம் என்று கல்வின் சொன்னார். திருச்சபையின் ஆத்மீக வாழ்க்கைக்கு துணைசெய்யக்கூடிய இந்த ஆத்மீக சுதந்திரத்தை வழங்க மறுத்து ஜெனிவா அரசாங்கம் கல்வி னையும், வில்லியம் பெரலையும் நகரத்தைவிட்டு வெளியேற்றியது. இத்தனைக்கும் ஜெனிவா அரசாங்கம் தன்னை புரொட்டஸ்தாந்து அரசா ங்கமாக அறிவித்துக் கொண்டது ஆச்சரியமே. கல்வின் அங்கிருந்து பிரான் ஸிலுள்ள ஸ்ட்ரெஸ்பேர்கிற்குப் போய் அங்கே பிரான்ஸ் அகதிகள் மத்தி

யில் இருந்த ஒரு சபையில் மூன்று வருடங்கள் போதகராக இருந்து உதவி னார். இந்தக் காலபகுதியிலேயே அவருக்கு லூதர், மெலாங்தன் ஆகியோ ரோடு உறவு ஏற்பட்டது. பின்னால் கேம்பிரிஜ் பல்கலைக்கழகப் பேராசிரிய ராக இருந்த மார்டின் பியூஸரோடும் நெருங்கிய தொடர்பேற்பட்டது.

கல்வின் ஜெனிவாவைவிட்டுப் போனவுடன் ஜெனிவாவில் நிலைமை மோசமாக ஆரம்பித்தது. கர்த்தரின் வார்த்தையின்படி திருச்சபை ஆளப்பட வேண்டும் என்று கல்வின் வற்புறுத்தியதன் அர்த்தத்தை நகரத்தின் குடி மக்களின் சிலர் உணர ஆரம்பித்தனர். கல்வின் சொன்னது சரி என்பதும் அவர்களுடைய புத்திக்கு எட்டியது. ஒழுக்கக்கேடே நகர மக்களின் சகல பிரச்சனைகளுக்கும் காரணம் என்பதும் அவர்களுக்குத் தெளிவாகப் புரிந்தது. பல அரசியல் குழப்பங்களுக்குப்பின் தங்களுடைய சுதந்திரத்துக்கு ஆபத்து வருகிறது என்பதை உணர்ந்த அவர்கள் ஜெனிவாவுக்கு திரும்பி வருமாறு கல்வினுக்கு அழைப்பனுப்பினார்கள். ஸ்ட்ரெஸ்பேர்கில் அருமை யாக ஊழியம் நடந்து வருவதால் ஜெனிவாவுக்கு திரும்புவது கல்வினுக்கு மனச்சமாதானத்தைத் தரவில்லை. தன்னுடைய நண்பர்கள் பலரின் வற்புறுத்தலினால் கல்வின் ஜெனிவாவுக்குப் போக இசைந்ததோடு அதுவே கர்த்தரின் வழிநடத்தல் என்பதையும் சந்தேகமில்லாமல் உணர்ந்திருந்தார்.

ஜெனிவாவில் இருபத்தி நான்கு வருடங்கள் கல்வின் பணிபுரிந்தார். அவருடைய உழைப்பு பெரும் ஆச்சரியத்தை அளிப்பதாக இருந்தது. ஒரு வாரத்தில் அவர் பல பிரசங்கங்கள அளித்தார். ஒவ்வொரு நாளும் ஒரு விரிவுரையை அளித்தார். ஐரோப்பாவின் பல பகுதிகளிலும் இருந்தவர் களோடு அவர் பெருந்தொகைக் கடிதத்தொடர்பை வைத்திருக்க நேர்ந்தது. அவர் புரொட்டஸ்தாந்து சீர்திருத்தத்தின் தலைவர் என்பதில் எந்த சந்தேக மும் இருக்கவில்லை. அக்காலத்தில் ஐரோப்பாவின் ஆத்மீக தேவை எது என்பதைத் தெளிவாக உணர்ந்திருந்தவர்களில் கல்வினுக்கு இணையாக ஒருவரும் இருக்கவில்லை.

திருச்சபை மக்களே தங்களுடைய சபை நிர்வாகத்தைக் கவனிக்கும் சபை அதிகாரிகளைத் தெரிவு செய்ய வேண்டும் என்றும் சபையின் ஆத்மீகக் காரியங்களை சபை சுதந்திரமாக அரசு தலையீடின்றி நடத்திச் செல்ல வேண்டும் என்றும் இந்த விஷயத்தில் திருச்சபை அரசு அதிகாரத்தின் கீழ் இருக்கக்கூடாதென்றும் கல்வின் நம்பினார். அதேவேளை அரசாங்கத்தைக் கர்த்தரே நியமித்திருப்பதால் அரசும், திருச்சபையும் தங்களுடைய தனித்துவ மான பணிகளை உணர்ந்து ஒன்றையொன்று மதித்து ஒத்துழைக்க வேண்டும் என்றும் கல்வின் நம்பினார்.

அக்காலத்தில் போதகர்களை நியமிப்பதில் அரசு தலையீடு இருந்தது. ஜெனிவா நரக சட்டங்களில் கல்வின் தன்னுடைய நூலில் விளக்கியிருந்த திருச்சபை அமைப்புக்கெதிரான பல அம்சங்கள் இருந்தன. கல்வினுடைய விருப்பப்படி எல்லாக் காரியங்களும் ஜெனிவாவில் நிகழ முடியவில்லை. அங்கு நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளுக்கும், தவறான முடிவுகளுக்கும் நகராட் சியே காரணமே தவிர கல்வின் அதற்குப் பொறுப்பாளியாக இருக்க வில்லை. கல்வின் விரும்பியபடி அவருடைய போதனைகள் அனைத்தும்

*ஜெனிவாவில் நிறைவேறாதபோதும், பின்பு பிரான்ஸின் புரொட்டஸ்தாந்து திருச்சபையும், ஸ்கொட்லாந்து புரொட்டஸ்தாந்து திருச்சபையும் அவற்றை செயல்படுத்தின.*

*கல்வினின் திருச்சபை அமைப்பு பிரெஸ்பிடீரியன் திருச்சபை அமைப்பாக இருந்தது. பாப்திஸ்து திருச்சபைகள் இவற்றில் சில விஷயங்களில் மட்டும் வேறுபாடான நடைமுறைகளைக் கொண்டுள்ளன. இருந்தபோதும் பல காரியங்களில் கல்வினின் போதனைகளில் பாப்திஸ்துகளுக்கு உடன்பாடு உண்டு. கல்வினின் போதனையின்படி வேதம் தீர்க்கமாகப் போதித்து விளக்கியிருக்கும் போதனைகள் மட்டுமே திருச்சபையின் சபை அமைப்பில் கடைப்பிடிக்கப்பட வேண்டும். வேதம் அனுமதிக்காத எதுவும் திருச்சபை அமைப்பில் இடம்பெறக்கூடாது. புதிய ஏற்பாட்டு சபை அமைப்பே திருச்சபை அமைப்பாக இருக்க வேண்டும். போதகர்களும், மூப்பர்களும் திருச்சபை அங்கத்தவர்களால் தெரிவுசெய்யப்பட்டு அப்பணியில் நியமிக்கப்பட வேண்டும். இவர்களே சபையை ஆளும் அதிகாரிகளாக இருக்க வேண்டும். இவர்களுக்கு மேலாக கிறிஸ்துவின் தலைமை மட்டுமே திருச்சபையின் தலைமையாக அங்கீகரிக்கப்பட வேண்டும். இந்த விஷயங்களில் பாப்திஸ்து திருச்சபைகளுக்கு கல்வினோடு உறுதியான உடன்பாடுண்டு. ஆனால், கல்வின் திருச்சபைக்கு மேலாக சபைகளின் விஷயத்தில் தலையிடக்கூடிய ஏனைய நிர்வாகங்களான சினட், அனைத்து திருச்சபைகளின் மூப்பர்களின் கூடுதல், திருச்சபைகளின் பொதுவான கூடுதல் ஆகியவற்றையும் வற்புறுத்தினார். இவற்றை பாப்திஸ்து திருச்சபை அமைப்பில் காணமுடியாது.*

*கல்வினுடைய இறையியலின் மையமாக கர்த்தரின் இறையாண்மை இருந்தது. ஆகவே, நம்முடைய இரட்சிப்போடு தொடர்புடைய அனைத்தும் கர்த்தரின் சித்தத்தின்படியே நிகழ்கின்றன என்றார் கல்வின். கர்த்தரின் கிருபையால் விசுவாசத்தினூடாக நாம் இரட்சிக்கப்படுகிறோம். கல்வின் தெரிந்துகொள்ளுதலையும், முன்குறித்தலையும் வேதம் போதிப்பதாக விளக்கினார். லூதர் உட்பட சகல சீர்திருத்தவாதிகளும் இவற்றை விசுவாசித்தனர். ஆனால், கல்வினே இவற்றை நெறிப்படுத்தி விளக்கினார். தியோடர் பீசாவைத் (Theodore Beza) தலைவராகக் கொண்டு ஜெனிவாவில் ஒரு கல்லூரியை ஸ்தாபித்து அநேக போதகர்களுக்கு பயிற்சியளித்தார் கல்வின்.*

---

## பதப்பொருள் விளக்கம்:

**புரொடஸ்தாந்து பிரிவினர் (Protestant)** - 16ம் நூற்றாண்டில் சுவிசேஷத்தை விசுவாசித்து ரோமன் கத்தோலிக்க மதக்கோட்பாடுகளையும், நடைமுறைகளையும் எதிர்த்து நின்றவர்களே இப்பெயரில் பொதுவாக அழைக்கப்பட்டனர். புரொட்டஸ்ட் (Protest) என்ற ஆங்கில வார்த்தைக்கு ‘எதிர்ப்பு’ என்பது பொருள்.

**சீர்திருத்தவாதிகள் (Reformers)** – சுவிசேஷத்தை விசுவாசித்து ரோமன் கத்தோலிக்க மதக்கோட்பாடுகளையும், நடைமுறைகளையும் எதிர்த்து வேதபூர்வமான கோட்பாடுகளையும், நடைமுறைகளையும் மட்டுமே திருச்சபை பின்பற்றவேண்டுமென்று திருச்சபை சீர்திருத்தத்தில் ஈடுபட்டவர்கள் இப்பெயரில் அழைக்கப்பட்டனர். Reform என்ற ஆங்கில வார்த்தைக்கு ‘சீர்திருத்தம்’ என்பது பொருள். சீர்திருத்தவாதிகளும் புரொட்டஸ்தாந்தியர்களே.

# எண்ணங்கள்!

திருமறைத்தீபம் திருச்சபைக்கு செய்திருக்கும் அற்புதம் மிகப் பெரியது. பத்திரிகையைப் படித்து நான் தெரிந்து கொண்ட சத்தியங்களுக்காக நன்றி கூறுகிறேன். நண்பர் ஒருவரிடம் இருந்து இதுவரை பத்திரிகையைப் பெற்று வாசித்து வருகிறேன். பத்திரிகையின் ஒவ்வொரு முத்துக்களும் குன்றின் மேலிட்ட தீபம் போல் ஒளிவீசுகின்றன. அவற்றின் மூலம் திருச்சபை பற்றி அதிகம் தெரிந்துகொண்டேன். “தீபம் என் தலைமேல் பிரகாசிக்கிறது. ஆண்டவர் அளித்த வெளிச்சத்தினால் இருளைக் கடந்துபோனேன்.” என்று யோபு சொன்ன வார்த்தைகள் பத்திரிகைக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றன. எனக்கும் பத்திரிகையை அனுப்பி வையுங்கள். - ***பால் முத்தையா, தமிழ்நாடு***

மூன்று வருடங்களுக்கு மேலாக திருமறைத்தீபத்தைத் தொடர்ந்து அனுப்பி என்னையும், எங்களையும் ஆவியின் சத்தியத்தில் ஊன்றக்கட்டி வருவதற்காக தங்களுக்கு நன்றியறிதலையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தொடர்ந்து உங்களுடைய நூல்களை வாங்கிப் படித்து வருகிறேன். கடந்த இதழோடு “திருச்சபை சீர்திருத்தம்” என்ற நூலையும் அனுப்பிவைத்ததற்காக நன்றி. தங்களுடைய வெளியீடுகளின் விலைகளையும் பத்திரிகையில் தந்தால் உடனடியாக பணத்தை அனுப்பி அவற்றைப் பெற்றுக்கொள்ள ஏதுவாக இருக்கும். - ***இரா. எதிரேசன், தமிழ்நாடு***

திருமறைத்தீபத்தைத் தொடர்ந்து அனுப்பிக்கொண்டிருப்பதற்காக நன்றி. உங்களுடைய கருத்துக்களில் சிலவற்றில் எனக்கு முரண்பாடிருந்த போதும் உங்களுடைய எழுத்துக்களை அதிகமாய் மதித்துப் பாராட்டுகிறேன். நீங்கள் எழுதிய “கூடில்லாத குருவிகளை” பிரதிகள் எடுத்து பலருக்கும் கொடுத்திருக்கிறேன். தரக்குறைவான சுயநல போதகர்களால் சத்தியம் எவ்வாறு அலைக்கழிக்கப்படுகிறது என்பதை நினைத்து அதிகமாய் வருந்துகிறேன். இன்றைக்கு தமிழில் ஏராளமான கிறிஸ்தவ பத்திரிகைகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆனால், சத்தியத்திற்காக போராடுபவை ஒன்றுகூட இல்லை. “தடியெடுத்தவன் தண்டல்காரன்” என்பதுபோல் இன்றைக்கு பைபிளை தூக்கியவர்களெல்லாம் போதகர்கள் ஆகிவிட்டார்கள். சபைகள் ஸ்தாபிப்பதும் குடிசைத் தொழிலாகிவிட்டது. எந்தத் தகுதியும் இல்லாமல் ஊழியனாகலாம், எதை வேண்டுமானாலும் பேசலாம் என்ற நிலைமை உருவாகிவிட்டது. சமீபத்தில் நீங்கள் அனுப்பிய “திருச்சபை சீர்திருத்தம்” என்ற நூல் மிகவும் பயனுள்ளது ஆவிக்குரிய உண்மையை நாடுகிற எவரும் வாசித்து உணர வேண்டியது. - ***போதகர் ஜே. ஆர். பாலசுந்தரம், தமிழ்நாடு***

நான் 1999ல் இருந்து திருமறைத்தீபத்தைப் படித்துப் பயனடைந்து வருகிறேன். திருச்சபையின் மகிமையையும், அதன் அவசியத்தையும் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தபோதுதான் சமீபத்தில் நீங்கள் அனுப்பிவைத்த “திருச்சபை சீர்திருத்தம்” புத்தகம் திருச்சபை பற்றிய வேதபோதனைகளைத் தந்து என் கண்களைத் திறந்துவைத்தது. இதுவரை இருபத்தி மூன்று வருடங்களாக உண்மை தெரியாமல் ஒரு ஸ்தாபனத்தில் ஊழியம் செய்துவந்தேன். இப்போது அதைவிட்டு விலகிவிட்டேன். இனி இறுதிவரைக் கர்த்தரின் துணையோடு அவர் நேசிக்கும் திருச்சபையில் மட்டுமே வாழ்ந்து பணி செய்யத் தீர்மானித்திருக்கிறேன். எனக்காகவும் என்னுடைய எதிர்காலத்துக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். ***- போல் ஜே. சிங், வட இந்தியா (இ-மெயிலில் வந்த கடிதம்)***

# நமது வெளியீடுகள்




சீர்திருத்த விசுவாசம்



விசுவாச அறிக்கை



ஆதிசபையின் அற்புத வரங்கள்



வில்லியம் கேரி



சார்ள்ஸ் ஹெடன் ஸ்பர்ஜன்



பத்துக் கட்டளைகள்



கிறிஸ்தவன் யார்?



சிறுவர்களுக்கான வேத உபதேசம்



ஏன் பிரசங்கம்!

**கிடைக்குமிடம்:**

**இவாஞ்ஜெலிக்கள் பாப்திஸ்து சபை**

22 டி. பி. கே மெயின் ரோடு, பைகாரா, மதுரை 625004

தொலைபேசி எண்: 0452 - 5505810

**கிருபை இலக்கிய சேவை**

19 இராஜசிங்க வீதி, கொழும்பு 6, ஸ்ரீ லங்கா

மலர் 12 அக்டோபர் - டிசெம்பர் 2006 இதழ் 4

1. வேதத்தைவிட்டு விலகியோடும் தமிழினத்துக் கிறிஸ்தவம்

2. நீதிமானாக்குதல் - (இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கு)

3. கிறிஸ்துவின் வழியில் திருச்சபை ஊழியம் - 5

4. தேவனும் மனிதனுமாய் . . .

5. கிறிஸ்தவக் கோட்பாடுகள்

6. கேள்வி - பதில்

7. சுவிட்ஸர்லாந்தில் சீர்திருத்தம் (திருச்சபை வரலாறு)

8. எண்ணங்கள்!

Terau Print